கல்கி




KALKI மே 27, 1951 4 அணா


வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
ஸன்லைட்
சோப்பில்
தான்
SUNLIGHT

மானிடர்கள் விரும்பும் பரிமளத்திற்கு

காஷ்மீர் புக்கே

சாமான்களை உபயோகியுங்கள்





காந்தியோடுகூடிய புதுமைக்கும், இன்பந்தரும் மிருதுத் தன்மைக்கும், சிறந்த இனிமைக்கும் காஷ்மீர் புக்கே டால்கம்பவுடரை உங்கள்மேலே தூவுங்கள். அது வியர்வையை உறிஞ்சிவிடும்.... அரிப்பு, எரிச்சலை அடக்குகிறது ... உங்களை குளுமையுடனும், நறுமணத்துடனும், நாள் முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.


இன்றே ஒரு டின் காஷ்மீர் புக்கே டால்கம் பவுடரை வாங்கி வீட்டிற்கு எடுத்துச்செல்லுங்கள்!

காஷ்மீர் புக்கே டால்கம் பவுடர்

1806-ம் வருஷத்திலிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்கு பெயர்போனது.

ப்ரூக் லாக்ஸ்

சாக்லெட் மலமிளக்கி



உங்கள் ஆரோக்கியத்திற்கு வேண்டிய முதல் தரமான பேதி மருந்துமாத்திரைகள். சிகப்பு டப்பியில் கிடைக்கும் ப்ருக்லாக்ஸையே வாங்கவும்.

3, 8, 24. அடங்கிய வாட்டமான கேஸ்களில் கிடைக்கும். பெரிய கேஸ் வாங்குவது மிகவும் சிக்கனமானது.


ஒரே இரவில் மலச் சிக்கலை அறவே அகற்றுகிறது.

WL-3-A

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜன்டுகள்:
மெஸர்ஸ். ஓரியண்டல் மெர்கன்டைல் ஏஜன்ஸீஸ் 99-A, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1

நேர்த்தியான அமைப்பு - அழகிய தோற்றம்

வாடிக்கைக்காரர்களின் விநியோகத்திற்கென்றே உலகப் பிரசித்தி பெற்ற கடிகாரங்களை தருவித்துள்ளோம். யாவும் ஸ்விஸ் தயாரிப்புகள். சரியான நேரத்தை அறிவிக்க உத்தரவாதம் கொண்டவை. 17 ஜுவல் கொண்டவை 5 வருஷத்திற்கும், 15 ஜுவல் 3 வருஷமும், 7 ஜுவல் 2 வருஷமும், மற்றவை ஒரு வருஷமும் உத்தரவாத முள்ளவை. ஒரிஜினல் பிளாஸ்டிக் வாட்ச் கேஸ், ஸ்ட்ராப்புடன் ஒரு கியாரண்டி சர்ட்டிபிகேட்டும் ஒவ்வொரு கடிகாரத்துடன் அளிக்கப்படும். பாக்கிங் தபால் செலவு, விற்பனை வரி இலவசமாக இன்ஷூர் வி. பி.யில் கடிகாரங்கள் அனுப்பப்படும். 1951 மே 31-ம் தேதி வரை தையலற்ற ஒரு அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒவ்வொரு கடிகாரத்துடனும் இலவசமாக அளிக்கப்படும்.



கேட்லாக் நெ.	கர்வெக்ஸ் சைஸ் 7¾		விலை
410	ரோல்டு கோல்டு கேஸ் 5	ஜுவல்ஸ்	48 0
508	ரோல்டு கோல்டு கேஸ் 7	,,	60 0
605	க்ரோம் ஸ்டீல்பேக் 15	,,	72 0
606	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15	,,	72 0
705	ரோல்டு கோல்டு ஸ்டீல் பேக், ஆப்டிக் க்ளாஸ் 17	,,	84 0




கேட்லாக் நெ.	டன்னோ சைஸ் 6¾		விலை
412	ரோல்டு கோல்டு கேஸ் 5	ஜுவல்ஸ்	48 0
510	ரோல்டு கோல்டு கேஸ் 7	,,	60 0
607	க்ரோம் ஸ்டீல்பேக் 15	,,	72 0
608	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15	,,	72 0
706	ரோ. கோ. ஸ்டீல்பேக் ஆப்டிக் க்ளாஸ் 17	,,	84 0



சிறிய ரவுண்டு சைஸ் 8¾

308	ரோல்டு கோல்டு கேஸ்	ஜுவல்களுடன்	36 0
406	ரோல்டு கோல்டு கேஸ் 5	,,	48 0
504	ரோல்டு கோல்டு கேஸ் 7	,,	60 0
601	க்ரோம் ஸ்டீல்பேக் 15	,,	72 0
602	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15	,,	72 0




லேடீஸ் சைஸ் 5¼

512	ரோல்டு கோல்டு கேஸ் 5	ஜுவல்ஸ்	60 0
611	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15	,,	72 0
707	ரோ. கோ. ஸ்டீல்பேக், ஆப்டிக் க்ளாஸ் & ஸில்க் கயிறுடன் 15	,,	84 0
1005	20 மைக்ரோன் கோல்டு கேஸ் கெம்பு நடுசெகண்டு முள்ளுடன் & ஸில்க் கயிறுடன் 17	,,	120 0
1006	18 காரட் கோல்டு கேஸ் 15	,,	120 0



வாட்டர் ப்ரூப் சென்டர் செகண்டு
ரேடியம் டயல் சைஸ் 10½

609	க்ரோம் ஸ்டீல்பேக் 15	ஜுவல்ஸ்	72 0
610	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15	,,	72 0
701	க்ரோம் ஸ்டீல்பேக் ஆல் ப்ரூப் 17	,,	84 0
1002	20 மைக்ரோன் கோல்டு கேஸ் ஆல் ப்ரூப் 17	,,	120 0
702	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8¾) சைஸ் ஆல் ப்ரூப் 15	,,	84 0
1003	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8¾) சைஸ் ஆல் ப்ரூப் 17	,,	120 0



சென்டர் செகண்டு சைஸ் 9¾

309	க்ரோம் கேஸ்	ஜுவல்களுடன்	36 0
404	ரோல்டு கோல்டு கேஸ் 5	,,	48 0
502	ரோல்டு கோல்டு கேஸ் 7	,,	60 0
603	க்ரோம் ஸ்டீல்பேக் 15	,,	72 0
604	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15	,,	72 0
1004	20 மைக்ரோன் கோல்டு 17	,,	120 0

டைம்பீஸ் & பாக்கெட் கடிகாரங்கள்

302	இங்கிலீஷ் அலாரம் டேபிள் கடிகாரம் பெரிய சைஸ், லௌட் அலாரம்	36 0
201	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம் க்ரோம் கேஸ் சாதாரண டயல்	24 0
301	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம், ரோ. கோ. கேஸ் ரேடியம் டயல்	36 0

SWISS WATCH CO., P. B. No. 3552, BOMBAY - 4



அந்த யௌவனமான சரும சுகத்தை நீங்களும் நிரந்தரமாகப் பெறலாம்!


புதிய பரிமளத்துடன் கூடிய காந்தி, ஸ்நானத்தை இன்பமயமாக்கி சருமத்தை குளுமையாக வைத்து புத்துணர்வளிக்கிறது.

காந்தி வெறும் ஒரு ஸ்நான சோப் மட்டுமல்ல. நீங்கள் மிகவும் விரும்பும் மிருதுவான, ஆரோக்கிய மயமான யௌவன எழிலையும் மீண்டும் அளிக்கும் சோப்.


காந்தி

டாய்லட் சோப்

ஸ்வஸ்திக்கின் தொடர்ந்து வேலை செய்யும் சோப் இயந்திரத்தில் தயாரிக்கப்படுகிறது. இவ்வகை இயந்திரம் ஆசியாவிலேயே இது ஒன்றுதான்.



ஸ்வஸ்திக்கின் பலவகை தயாரிப்புகளில் இவைகளும் உள்ளன :
மாயா அழகு சோப்
777 சலவை சோப்
ஸ்வஸ்திக் வாசனை ஆமணக் கெண்ணெய்
கோவலின் பிராண்டு வனஸ்பதி



ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்

விற்பனை டெப்போக்கள் :

பெங்களூர் ஸிடி ஆர்காடு ஸ்ரீநிவாஸாசாரி ரோடு கொச்சி கன்னத்தி ரோடு	மதராஸ் 14, லிங்கிசெட்டி தெரு, ப்ராட்வே விசாகப்பட்டணம் 20-125, தாம்பன் தெரு	தவணகிரி : மந்திப்பேட்டை ஹைதராபாத் (Dn.) B-2, ப்ளாக் 4, ஷா ரோடு உஸ்மானி, கந்தான் பஜார்



உங்கள் தேகாரோக்கியத்தைக் காப்பாற்ற
குறுக்கு வழி
கே.பி.கேஸ்டர் ஆயில்
இதோ
20 வருஷ ஆராய்ச்சியின் பலன்
உங்கள் சேவைக்குத் தயார்
KP
கே.பி.கேஸ்டர் ஆயில் ஒர்க்ஸ்
ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்.
PHONE: 127.
GRAMS: "KEPEECY"

இவ்வாண்டின் உன்னத சித்திரம்! — காதலும் வீரமும் நிறைந்த கற்பனைச் சித்திரம்!

சென்னை காஸினோ & ஸ்ரீ கிருஷ்ணா - மற்றும் தமிழ்நாடெங்கும் ஓடுகிறது




டிலக்ஸ்
பிரசித்தி பெற்ற பெயரையும் நம்பரையும் கொண்ட சைக்கிள் டயர். இதை தயாரித் தவர்கள்
குட் இயர்
உலகத்திலேயே பெரிய டயர்கள் தயாரிப்பவர்கள்
டிலக்ஸ் சைக்கிள் டயரின் விசேஷ குணங்கள்
அதிக உழைப்புள்ளது
சிக்கனமானது
அபாய மற்றது
GOOD YEAR

பொருள் அடக்கம்

கல்கி

மலர் 10
இதழ் 43

1951 மே 27

கர ௵
வைகாசி 13உ

வாய்ப்போர் விசித்திரம்!	...	... 11
பதிலுக்குப் பதில்!	சாஸ்திரி	... 12
குளத்தில் குதித்தார்! குளிரும் விட்டது!	...	... 14
இதோ நூறு கோடி ரூபாய்!	...	... 15
எத்தனை நிலம் வேண்டும்?	...	... 16
தெய்வ தரிசனம்	ரா. கி.	... 17
பொன்னியின் செல்வன்	கல்கி	... 23
ஆரோக்கிய ரகசியம்	வி. என். குமாரஸ்வாமி	... 32
எத்தனை நிலம் வேண்டும்?	...	... 34
புயல்	பத்மராஜு—எஸ்.வி.எஸ்.	... 37
பத்மாவின் தியாகம்	வ. சா. நாகராஜன்	... 43
முதல் தடவை மன்னிப்பு......	...	... 47
பூதம் காத்த சுரங்கம் (பாப்பா மலர்)	மாலு	... 48
தேன் ஜாடி	சாமா	... 52
மத்திய கேந்திரம்	ஜெயமணி	... 53
பனித்திரை	ரா. பாலகிருஷ்ணன்	... 55
அஞ்சனாவின் காதல்	விஜயஸ்ரீ	... 60

அட்டைப்பட விளக்கம்



காலங் கடந்த கதை எது? கற்பனையில் சிறந்த கதை எது? சிந்தனைப் பறவைக்குச் சிறந்த விருந்தாயிருக்கும் கதை எது? எந்நாட்டவரும் படித்துப் பாராட்டும் கதை எது என்று யாராவது கேட்டால் அது அராபியக் கதை என்று பளிச் சென்று பதில் சொல்லலாம்.

எத்தனையோ நூற்றாண்டுகளாக நிலவி வரும் அமர கதைகளான அந்த அராபியக் கதைகளை எத்தனை தடவை படித்தாலும், எத்தனை தடவை கேட்டாலும் அலுப்பதில்லை. அந்தக் கதைகளைப் படிக்கும் போது நம்மை நாமே மறந்து கதையில் வரும் பாத்திரங்களுடனும் சம்பவங்களுடனும் ஒன்றி விடுகிறோம்.

“கல்கி” பாப்பா மலர் வாசகர்களுக்குத் தங்களைத் தாங்களே மறந்து விடும் அந்த அரிய சந்தர்ப்பம் மீண்டும் வருகிறது.

அராபியக் கதைகளுள் ஒன்றான “கிணற்றுத் தேவதை” என்னும் கதை, கல்கி பாப்பா மலரில் இப்போது வெளியாகும் கதைக்கு அடுத்தபடி வெளி வரும். பாப்பாக்கள் மாத்திரம் அல்லாமல் அப்பாக்களும் படித்து ஆனந்திக்கலாம். “கிணற்றுத் தேவதை” என்னும் அந்தக் கதையில் ஒரு காட்சியை நம் ஓவியர் மணியம் இந்த இதழ் அட்டையில் வண்ண ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்.

கல்கி

மலர் 10 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 43

வாய்ப் போர் விசித்திரம்!

பார்லிமெண்டு சபைகளிலே ஓயாமல் வாய்ச் சண்டைகள் நடக்கின்றன. உலக இராஜ தந்திரிகளுக்குள் வாய்ப்போர் நடப்பதையும் பார்க்கிறோம். எனினும் இப்போது அமெரிக்காவிலே நடந்து வரும் வாய்ப்போர் மிக விசித்திரமானது என்பதில் சந்தேகமில்லை.

சேநாபதி பதவியிலிருந்து விலக்கப்பட்ட ஜெனரல் மெக் ஆர்தர் அமெரிக்கா போய்ச் சேர்ந்ததும், அமெரிக்கப் பொது மக்கள் ஜெனரல் மெக் ஆர்தருக்குப் பிரமாதமான வரவேற்பு அளித்தார்கள். நியூயார்க் நகரில் அவர் வீதி வலம் வந்தபோது ஐம்பது லட்சம் ஜனங்கள் வீதிகளில் நின்று ஆரவாரம் செய்தார்கள். சென்ற மகா யுத்தத்தில் மகத்தான வெற்றிகளை அடைந்தவரும், கிழக்காசியாவில் சர்வ சேனாதிபதியாக இருந்தவருமான மெக் ஆர்தரை அமெரிக்க ஜனசமுத்திரம் பொங்கி உற்சாகத்துடன் வரவேற்றதில் ஆச்சரியமில்லை. எனினும் அதிலிருந்து மெக் ஆர்தரின் கொள்கைக்கு அமெரிக்காவில் பெரும்பாலான மக்களின் ஆதரவு இருப்பதாக நினைக்க முடியாது.

ஜெனரல் மெக் ஆர்தர் அமெரிக்காவில் இப்போது தமது வாய்ப்போர்த் திறமையைக் காட்டி வருகிறார். அவர் விலக்கப்பட்டது நியாயமா என்பதை விசாரித்து வரும் அமெரிக்க செனேட் கமிட்டிகளின் முன்னிலையில் அவர் சாட்சியம் கூறினார். அந்தக் கமிட்டிகளின் முன்னிலையில் அமெரிக்கா யுத்த மந்திரி ஜார்ஜ் மார்ஷல் தம்முடைய கட்சியை எடுத்துச் சொன்னார். அமெரிக்கா இராணுவ நிர்வாகப் பிரதமர்களின் தலைவரான ஜெனரல் பிராட்லியும் தமது கருத்துக்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக விளக்கிக் கூறினார்.

"சீனாவுக்குள்ளும் அமெரிக்க விமானங்கள் புகுந்து தாக்கினாலன்றி, கொரியா யுத்தத்தில் பூரண வெற்றிபெற முடியாது; ஆசியாவில் கம்யூனிஸத்தின் ஆதிக்கத்தை ஒழிக்க முடியாது" என்பது ஜெனரல் மெக் ஆர்தரின் அபிப்பிராயம்.

அவ்வாறு சீனாவைத் தாக்கினால் ருஷ்யாவும் போரில் இறங்கி உலக மகா யுத்தம் ஏற்பட்டு விடும் என்று ட்ருமன் கோஷ்டியினர் கருதுகிறார்கள்


"ஜெனரல் மெக் ஆர்தரின் அபிப்பிராயத்தை அனுசரித்து நடப்பதாயின், மூன்றாவது மகாயுத்தத்தை வரவேற்பதாக முடியும். ருஷ்யாவுடன் நேரடியாகப் போர் தொடங்குவதைத் தவிர்க்க முடியாமற் போய் விடும்" என்று ஜெனரல் மார்ஷல் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

"மெக் ஆர்தர் கூறும் யோசனைகளை ஏற்றுக் கொள்வதாயின் அமெரிக்கா தவறான இடத்தில், தவறான காலத்தில், தவறான யுத்தத்தில் ஈடுபடும்படி நேரும்" என்று ஜெனரல் பிராட்லி கூறினார்.

சீனா தாக்கப்பட்டாலும் ருஷ்யா நேரடியாகப் போரில் இறங்காது என்பது ஜெனரல் மெக் ஆர்தரின் அபிப்பிராயம்.


மெக் ஆர்தரின் சமீப காலத்திய ஜோஸ்யங்கள் பெரும்பாலும் பொய்த்து விட்டபடியால், மேற்கொண்டும் அவரது ஜோஸ்யத்தை நம்பி மோசம் போக அமெரிக்க சர்க்கார் விரும்பவில்லை.

பதிலுக்குப் பதில்!



மந்திரி
1 கனம் மந்திரி பேட்டியளிக்கத் தாமதித்தால்....
2 ..நீங்கள் மந்திரிக்குத் தாமதித்துப் பேட்டியளியுங்கள்!
3 உங்கள் வோட்டைப் பெற்ற ஸ்ரீமான் எம்.எல்.ஏ. உங்களைப் பொருட்படுத்துவதில்லை என்றால்..
4 ..வருகிற தேர்தலில் அவருக்கு ஒரு ஓடு கொடுங்கள்!
5 .சர்க்காருக்கு அளந்த தான்யத்தைப் பற்றி உணவு இலாக்கா அதிகாரி திருப்தியடையவில்லை என்றால்..
6 ... அவரையே உணவு உற்பத்தி செய்து எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள்!

-சாஸ்திரி



7. சர்க்கார் பஸ் உங்களை ஏற்றிச் செல்வதில்லை என்றால்...
8.. நீங்களும் பஸ்களில் ஏற மாட்டோம் என்று ஸ்டிரைக் செய்து விடுங்கள்.
9.. ஹோட்டல்களில் "சப்ளை" செய்யப்படும் பண்டங்கள் நன்றாக இருப்பதில்லை என்றால்...
10. கல்லாவில் உட்கார்ந்திருக்கும் முதலாளியிடமே அவற்றைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்...
11. நீங்கள் படிக்கும் பத்திரிகை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால்....
12... அதை அந்தப் பத்திரிகை ஆசிரியரையே படிக்கச் செய்யுங்கள்!
SHASTRY

மெக் ஆர்தர்—ட்ரூமன் விவாதப் போர் எப்படியாவது முடியட்டும். தற்சமயம் அமெரிக்காவில் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் ஜனநாயக முறையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன.

அமெரிக்க ஜனாதிபதியும் பிரதம சேனாதிபதியுமான ட்ரூமன் கூடத் தம்முடைய இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்யமுடியாது; அவரது செய்கை நியாயமற்றது என்று கண்டிக்கப் பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் உண்டு: எதிர்க் கட்சியினருக்கு உரிமை உண்டு. பதவியிலிருந்து விலக்கப்பட்ட சேனாதிபதி மெக் ஆர்தருக்குத் தம் கட்சியை எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்ய உரிமை உண்டு. இரு சாராரின் வாதப் பிரதிவாதங்களையும் கேட்டுத் தளபதி மெக் ஆர்தரை அக்கிராசனர் ட்ரூமன் நீக்கியது சரியா, இல்லையா என்று தீர்ப்புச் சொல்ல அமெரிக்கப் பார்லிமெண்டுக்குப் பாத்தியதை உண்டு.

அமெரிக்க சர்க்காரின் தலைவர்கள் சர்வாதிகாரிகளாக மாறிவிடாமலும் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளாமலும் தடுப்பதற்கு அமெரிக்க அரசியலில் பாதுகாப்புகள் இருக்கின்றன. பொது மக்கள் அத்தகைய ஜீவாதார உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பாதுகாப்புகளும் ஜீவாதார உரிமைகளும் இருந்தால்தான் ஜனநாயகம் வெற்றி அடையும்.

எனவே இந்தியாவின் அரசியல் அமைப்பில் உள்ள அத்தகைய ஜீவாதார உரிமைகளைப் பறி கொடாமல் இந்தியப் பொது மக்கள் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

குதித்தார் குளத்தில்! குளிரும் விட்டது!

பனி காலத்தில் அதிகாலையில் ஆற்றிலோ குளத்திலோ சிலர் நீராடச் செல்வார்கள். குளிருக்குப் பயந்து கரையிலே தயங்கித் தயங்கி நிற்பார்கள். தண்ணீரைத் தொட்டால் 'ஜிலீர்' என்று இருக்குமே என்பதாக யோசிப்பார்கள். பக்கத்தில் நிற்பவர் சற்று இலேசாகப் பிடித்துத் தள்ளும் உதவியைச் செய்வார். கடைசியில் ஒருவாறு துணிந்து குளத்தில் குதித்துவிட்டால், அவ்வளவுதான்! குளிர் பறந்து போய் விடும்! தண்ணீர் வெதுவெதுப்பாகவும் இதமாகவும் இருக்கும்!

குதிக்கலாமா, வேண்டாமா என்று நீண்டகாலமாக யோசித்துக் கொண்டிருந்த ஆசாரிய கிருபளானி கடைசியில் துணிந்து குதித்து விட்டார்! காங்கிரஸிலிருந்து ராஜிநாமா செய்து வெளியேறி விட்டார்! சென்னைக்கு வந்திருந்தபோதுதான் அவர் இத்தகைய துணிவு கொள்ளும்படி நேர்ந்தது. இங்குள்ளவர்கள் யாரோ இலேசாகப் பிடித்துத் தள்ளும் உதவியை அவருக்குச் செய்திருக்க வேண்டும்! சென்னைப் பத்திரிகையாளர்கள் அவரைக் குடைந்து குடைந்து கேட்ட கேள்விகள்தான் அந்த உதவியை அவருக்குச் செய்து விட்டனவோ, என்னவோ!

எப்படியோ, மனிதர் துணிந்து குதித்து விட்டார்! குளிர் விட்டு விட்டது! தனிக் கட்சி அமைக்கப் போகிறார்! அந்தக் கட்சியின் மாபெருந் தலைவராகவும் ஸ்ரீ கிருபளானி விளங்கப் போகிறார்!

வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரஸை எதிர்ப்பதற்கு வேறு கட்சியேயில்லை என்று எண்ணிக் கொண்டிருந்தோம். இதோ தேச பக்தர்களும் தியாகிகளும் அடங்கிய எதிர்ப்புக் கட்சி ஏற்பட்டு விட்டது!



ஆசார்ய ஸ்ரீ கிருபளானி

ஆசாரிய கிருபளானி தமது ராஜிநாமாக் கடிதத்தில், தாம் அத்தகைய முடிவுக்கு வந்ததேன் என்பதை விளக்கியிருக்கிறார்.

காங்கிரஸின் இலட்சியங்களைப் பற்றி அவருக்கு வேற்றுமை இல்லை; காங்கிரஸின் வேலைத் திட்டத்தைப் பற்றியும் அவருக்கு அபிப்பிராய பேதம் இல்லை.

"காங்கிரஸ் வேலைத் திட்டத்தை இன்னும் தீவிரமாக நடத்திவைக்க வேண்டும்; அப்படி நடத்தி வைப்பதற்கு இப்போதுள்ள காங்கிரஸ் ஸ்தாபன அமைப்பு ஏற்றதல்ல.

காங்கிரஸ் ஸ்தாபன அமைப்பில் ஊழல்கள் நிறைந்து விட்டன. அந்த ஊழல்களைக் களையச் செய்த முயற்சிகள் ஒன்றும் பலிக்கவில்லை."

இந்தக் காரணங்களினாலேயே தாம் காங்கிரஸிலிருந்து வெளியேறுவதாக ஆசாரிய கிருபளானி கூறியிருக்கிறார்.

* * *

ராஷ்டிரபதி டாண்டனும் "காங்கிரஸிலுள்ள ஊழல்களைப் போக்க வேண்டும்; ஸ்தாபனத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும்" என்றுதான் சொன்னார்.

ஆனால் அதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

"இப்போதுள்ள காங்கிரஸ் காரியக் கமிட்டியில் மாகாண

காங்கிரஸ் ஹிட்லர்களே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் தூய்மை அடைவதற்கு விட மாட்டார்கள். ஆகையால் காரியக் கமிட்டியை மாற்றி அமையுங்கள்!'' என்றார் கிருபளானி.

''அது எப்படி முடியும்! இவர்கள்தானே மாகாணங்களில் பெரும்பான்மை பலம் பெற்றிருக்கிறார்கள்!'' என்றார் டாண்டன்.

''போகட்டும்; காங்கிரஸ் பொதுக் காரியதரிசிகளையாவது மாற்றுங்கள். ஸ்ரீ கள வெங்கட்ராவ், ஸ்ரீ மோகன்லால் கௌதம், — இருவரும் அவரவர்களுடைய மாகாணத்தில் கோஷ்டிப் பற்றுடன் வேலை செய்தவர்கள். அவர்களைப் பொதுக் காரியதரிசிகளாக வைத்துக் கொண்டால் காங்கிரஸ் பரிசுத்தமடைய முடியாது!'' என்றார் ஆசாரிய கிருபளானி.

அதற்கும் ராஜரிஷி இணங்கவில்லை. இரண்டு பேரில் ஸ்ரீ மோகன்லால் கௌதம் ராஜரிஷிக்கு மிகவும் வேண்டியவர். அவரை எப்படித் தள்ள முடியும்!

ஆகவே, ஆசாரிய கிருபளானி ராஜிநாமாச் செய்து வெளியேறும்படி நேர்ந்து விட்டது!

* * *

சென்ற பல மாத காலமாகக் ''கல்கி'' இதழ்களில் காங்கிரஸ் ஸ்தாபன ஊழல்களைப் பற்றி அடிக்கடி எழுதிவந்திருப்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ''இதைப் பற்றி எதற்காக இவ்வளவு தடபுடல்!'' ''காங்கிரஸ் ஸ்தாபனத்தில் யார் வந்தால் என்ன! யார் போனால் என்ன!'' என்று நமது வாசக நேயர்களில் சிலர் எண்ணியிருக்கக்கூடும்.



ராஜரிஷி தாண்டன்

காங்கிரஸ் ஸ்தாபனத் தேர்தல்களில் சென்ற வருஷம் நடந்த ஊழல்கள் அப்போது மிக அற்பமானவை என்று காணப்பட்டிருக்கலாம். பிரபல காங்கிரஸ் தலைவர்கள் பலர்கூட அப்படித்தான் எண்ணினார்கள்.

அந்தச் 'சிறு' ஊழல்களின் விளைவுதான் இன்று, இப்படி விபரீதமான உருக்கொண்டிருக்கிறது. காங்கிரஸிலேயே பெரும் பிளவு ஏற்பட்டிருக்கிறது! எதிர்ப்புக் கட்சி தோன்றியிருக்கிறது!

ஆசாரிய கிருபளானி ஒரு தனிக் கட்சிக்குத் தலைமை தாங்கிப் பிரமாதமாக நடத்தி விடுவார் என்று நாம் கருதவில்லை. அதற்கு வேண்டிய யோக்கியதாம்சம் அவரிடம் இருப்பதாகக் காணப்படவில்லை. பதவி வந்த பிறகு சிலருக்கு அதற்குரிய யோக்கியதாம்சங்களும் வந்து விடும். அம்மாதிரி ஆசாரிய கிருபளானிக்கும் வந்தால்தான் உண்டு.

காங்கிரஸில் ஏற்பட்ட இந்தப் பிளவிலிருந்து வேறு சில பெருந் தீங்குகள் விளையும் என்று எதிர்பார்க்கலாம்.

தேச பக்தர்களும் தியாகிகளும் ஒருவரையொருவர் பலமாகத் தாக்கிக் கொள்வார்கள். நேற்றுவரையில் சுதந்திரப்போரில் தோளோடு தோள் நின்று பாடுபட்டவர்கள் இனி ஒருவரையொருவர் ஏசிக் கொள்வார்கள். வாதப்பிரதிவாதங்களும் பிரசார — எதிர்ப்பிரசாரங்களும் பலமாயிருக்கும்.

மக்களின் மனம் குழப்பம் அடையும்; நல்லவர்களின் உள்ளம் வேதனை அடையும்.

இவற்றினால் மேலும் விபரீத விளைவுகள் தோன்றாதபடி கடவுள் காப்பாற்றுவாராக!

இதோ நூறுகோடி ரூபாய்!

''எங்கே, எங்கே!'' என்று பதற வேண்டாம். உங்கள் சட்டைப் பையில் தடவிப் பாருங்கள்; அல்லது மடியை அவிழ்த்துப் பாருங்கள்! பெட்டி அல்லது பணப்பை வைத்திருப்பவர்கள் திறந்து பாருங்கள்! காலணா, அரையணா, நாலணா, எட்டணா, ஐந்து ரூபாய், பத்து ரூபாய்,—இப்படியெல்லாம் வைத்திருப்பவர்கள் இப்போதே நன்றாய்ப் பார்த்துத் திருப்தி அடையுங்கள். ஏனெனில், அடுத்த ஆண்டில் நம்முடைய கனம் கோபால ரெட்டியார் மறுபடியும் நிதி மந்திரியாக வந்தால், அந்தக் காலணா அரை அணாவுக்கெல்லாம் சிறகு முளைத்து விடும். எல்லாம் நிதி மந்திரியின் கைக்குப் போய்விடும். மொத்தம் நூறு கோடி ரூபாய் சேர்ந்து விடும்! அவ்வளவையும் நிதி மந்திரி எடுத்துக் கொண்டு விடப் போவதில்லை! எல்லாவற்றையும் உங்கள் நன்மைக்காகவே செலவிடப் போகிறார்! தரித்திரம் பிடித்த காலணாவையும் நாலணாவையும் நீங்கள் தனித் தனியே செலவிடுவதில் என்ன பெருமை இருக்கிறது! கனம் கோபால் ரெட்டியிடம் கொடுங்கள்! அவர் நூறு கோடி ரூபாய் ஆக்கி உங்களுக்காகச் செலவிடும் போது அதன் ஜோரைப் பாருங்கள்!

* * *

ஒரு தாசில்தாரிடம் இருந்த சமையற்காரன் ஓடிப் போய்விட்டான். புதிய சமையற்காரன் வந்தான். அவன் சமைத்ததில் அரிசி சரியாக வேகவில்லை. தாசில்தார் அவனுக்குச் சமையல் சொல்லிக் கொடுத்தார். தட்டில் தணலை எடுத்துப் பானையின் மேல் வைத்து இன்னும் கொஞ்சம் சாதம் வேகும்படி செய்தார். மறுநாள் சாதம் கொஞ்சம் கூட வேகவில்லை என்பதைச் சமையற்காரன் கண்டான். அப்படியே அடுப்புத் தணலில் சாதத்தைக் கொட்டினான். கரியும் சாம்பலுமாகக் கலந்து எடுத்து வைத்தான். விஷயம் அறிந்த தாசில்தார் ''இவ்வளவு புத்திசாலியும் உண்டா!'' என்று எண்ணிச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியாமல், இரண்டுக்கும் மத்தியில் புன்னகை புரிந்தார். அதைப் பார்த்த சமையற்காரன் இதுதான் நல்ல சமயம் என்று தீர்மானித்துத் தாசில்தார் அருகில் வந்தான்.

"எஜமானே! கொஞ்சம் சம்பளம் கூடப் போட்டுக் கொடுங்கள்!" என்றான்.

*　　*　　*

கனம் கோபால் ரெட்டியார் மதுரை ஜில்லா போடி நாய்க்கனூருக்குப் போய்ப் பொதுத் தேர்தல் பிரசாரத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அப்போது அங்கே கூடி யிருந்த மகா ஜனங்களின் மலர்ந்த முகங்களைப் பார்த்ததும் நம் நிதி மந்திரிக்கு ருஷி பிறந்து விட்டது!

"மகா ஜனங்களே! சென்னை மாகாணத்தில் நாம் வருஷத்துக்கு அறுபத்தோரு கோடி ரூபாய் வரி வசூல் செய்து அறுபது கோடி ரூபாய் செலவு செய்து வருகிறோம். இது ஒரு பிரமாதம் அல்ல. நம்முடைய சாமர்த்தியம் இவ்வளவுதான் என்று எண்ண வேண்டாம். அடுத்த வருஷம் நாம் நிதிமந்திரியாக வந்து இந்த மாகாணத்திலிருந்து நூறு கோடி ரூபாய் வசூல் செய்யப் போகிறோம்! இது நிச்சயம்! இது சத்தியம்! நூறு கோடி ரூபாய் வசூல் செய்து செலவும் செய்துவிடப் போகிறோம். ஒரு காலணா கூட மிச்சம் வைக்கப் போவதில்லை! அப்படிச் செய்து காட்டாவிட்டால் நாம் நிதி மந்திரி கோபால் ரெட்டி அல்லோம்! நம் பெயரை உங்கள் இஷ்டம்போல் மாற்றி அழையுங்கள்!" என்று அறைகூவியுள்ளார்.

இந்த அறைகூவலை நேரில் கேட்டவர்கள் எப்படிச் சந்தோஷப் பட்டார்களோ, நாம் அறியோம். ஆனால் பத்திரிகைகளில் படிக்கும் போது சென்னை மாகாணப் பொது மக்கள் துள்ளிக் குதித்துச் சந்தோஷப் படுவார்கள் என்பதில் ஐயமில்லை!

நூறு கோடி ரூபாய்! அவ்வளவும் நமக்கே! நம்முடைய நன்மைக்கே! விண்ணாமல், விரியாமல், கொள்ளாமல், குறையாமல், முழுமையாக நூறு கோடி ரூபாய் வரி வசூல் செய்து செலவிடப் போகிறார்! எல்லாம் நம்முடைய நன்மைக்காகவேதான்!

இப்போது வசூலாகும் வரி அறுபத்தோரு கோடி ரூபாயில் அறுபது கோடி ரூபாய் பொது மக்களுக்காகவே செலவிடப்படுகிறது. அதில் நாற்பது கோடி ரூபாய் அதிகார வர்க்கத்தின் சம்பளம்—படிச் செலவு வகையராவுக்காகச் செலவு செய்யப்படுகிறது. அதனால் என்ன! அதிகார வர்க்கத்தார் ஆழ்ல் நடத்துவதெல்லாம் பொது மக்களின் நன்மைக்காகத்தானே!

கனம் கோபால ரெட்டியார் நூறு கோடி ரூபாய் சென்னை மாகாணத்தில் வரி வசூலித்துச் செலவிடும்போது, அதில் எண்பது கோடி ரூபாய் அதிகாரவர்க்க நிர்வாகச் செலவுக்குப் போய்விடும். அதனால் என்ன! எல்லாம் பொது மக்களின் நன்மைக்காகத்தானே!

*　　*　　*

கனம் கோபால ரெட்டியார் தொடங்கி வைத்த தேர்தல் பிரசாரம் குட்டிக்கொள்ள ஆரம்பிக்கும்போதே பிடரியில் குட்டிக் கொண்ட கதையாக இருக்கிறது.

தாஸில்தார் சந்தோஷமா யிருக்கும் சமயம் பார்த்துப் புதிய சமையற்காரன் சம்பளம் அதிகம் கேட்ட கதையாக இருக்கிறது.

எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றும் காரியமா யிருக்கிறது.

பஞ்சம் பட்டினியினாலும் பலவகை வரிப் பளுவினாலும் வயிறு எரிந்து தவிக்கும் மக்களை மேலும் பயமுறுத்துவதா யிருக்கிறது.

கனம் கோபால ரெட்டியார் வரி வசூல் விஷயத்தில் தம் வீரப் பிரதாபங்களைச் சொல்லிக் கொள்ளாமல் சும்மா யிருந்தாரானால், அதுவே காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்துக்குப் பெரும் உதவி செய்வதா யிருக்கும்!

எத்தனை நிலம் வேண்டும்?

இந்தக் கேள்வி சம்பந்தமாக நமக்கு வந்துள்ள கடிதங்களில் சிலவற்றை இந்த இதழில் வேறு இடத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

இம்மாதிரி நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்திருக்கின்றன. எழுதிய நேயர்களுக் கெல்லாம் நம் நன்றி.

ஆனால் இதுவரை வந்திருக்கும் கடிதங்கள் சம்பந்தமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுதல் நம் கடமையாகிறது.

எல்லாக் கடிதங்களும் பெரிய நகரங்களிலும் சிறிய பட்டணங்களிலும் வசிக்கும் அன்பர்களிடமிருந்தே வந்திருக்கின்றன.

கிராம வாசிகள்—விவசாயிகளிட மிருந்து இதுவரை கடிதம் ஒன்றும் வரவில்லை.

மண்ணடி, மந்தைவெளி, மூர்மார்க்கெட் முதலிய இடங்களில் வசிப்பவர்களும் இந்த விஷயம் பற்றிக் கடிதம் எழுதக்கூடாது என்பதில்லை. தேசத்துக்கு முக்கியமான எந்த விஷயத்தைப் பற்றியும் அபிப்பிராயம் சொல்ல தேசத்தின் பிரஜைகள் எல்லாருக்கும் உரிமை உண்டு. ஆயினும் நில உரிமை சம்பந்தமான பிரச்னைகளில் முக்கிய சிரத்தை காட்ட வேண்டியவர்கள் கிராமவாசிகளே அல்லவா!

நாளையதினம் பொதுத் தேர்தலில் வோட்டுக் கொடுத்து இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டியவர்களும் கிராமவாசிகள்தான்.

எல்லாருக்கும் வோட்டுரிமை கிடைத்திருக்கும் நிலையில், மிகப் பெரும்பாலான வோட்டர்கள் கிராமவாசிகளாகவே இருப்பார்கள்.

ஆகையால், கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் இந்த விஷயத்தைப் பற்றி என்ன அபிப்பிராயம் சொல்லப் போகிறார்கள் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்களுடைய கடிதங்களும் வருவதற்கு அவகாசம் கொடுத்துவிட்டு, பிரகரிக்கத் தகுந்த கடிதங்களை யெல்லாம் பிரகரித்தான பிறகு, பரிசுக்குரிய கடிதம் அல்லது கடிதங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

தெய்வ தரிசனம்

ரா. கி.

3

ஒரு குடியானவன், அவன் மனைவி, அவர்களுடைய மகன் மூன்று பேரும் முழுச் செவிடர்கள். குடியானவனும் அவன் மகனும் களத்தில் இருந்தார்கள். குடியானவன் மனைவி வீட்டிலிருந்து சோறு கொண்டு வந்தாள். குடியானவன் சாப்பிட ஆரம்பித்தான். அவனுடைய மாடு ஒன்று சற்றுத் தூரத்தில் வயலில் இறங்கியதைப் பார்த்தான். அந்த மாட்டை அதட்டுவதற்காக "இந்தா! இந்தா!" என்றான்.

அவன் உதடு அசைவதைப் பார்த்து விட்டு அவன் மனைவி, "இன்றைக்கு நான் சமைக்கவில்லை; உன் அக்காதான் சமைத்தாள். அதனால்தான் குழம்பு நன்றாயில்லை!" என்று சொன்னாள்.

அவள் ஏதோ சொல்வதைப் பார்த்த குடியானவன், "அதெல்லாம் முடியாது! மயிலை மாட்டையும் சிவப்பு மாட்டையும் சேர்த்துத்தான் கொடுப்பேன். தனித் தனியாய்ப் பிரித்து விற்க முடியாது!" என்றான்.

இவர்கள் இரண்டு பேரையும் கவனித்த அவர்களுடைய மகன், "மூத்த மாமன் மகளைக் கட்டிக்கச் சொன்னாலும் கட்டிக்கிறேன்; இளைய மாமன் மகளைக் கட்டிக்கச் சொன்னாலும் கட்டிக்கிறேன். உங்கள் இஷ்டம்!" என்றான்.

ஒருவர் சொன்னது இன்னொருவர் காதில் விழவில்லை; அதனால் அவரவர்களுடைய மனதிற்குள்ளே என்ன எண்ணம் இருந்ததோ அதை வெளியிட்டார்கள்!

"வாழ்க்கையும் உளத் தத்துவமும்" என்ற பொருளைப்பற்றித் தமிழ் விழாவில் பேசிய பேராசிரியர் அருள்நந்தி மேற்கூறிய கதையைத் தமது அரிய சொற்பொழிவுக் கிடையே கூறினார். தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் ஓர் அம்சத்தை விளக்குவதற்காகவே கூறினார். மக்களின் மனதில் உள் மனம், வெளி மனம் என்ற இரண்டு பகுதிகள் உண்டு. குளிர் மிகுந்த துருவப் பிரதேசங்களில் கடலில் பனிக்கட்டி மலைகள் மிதந்து வரும். அவற்றில் வெளியில் தெரியும் பகுதி கொஞ்சம்; நீருக்குள்ளே அமுங்கியுள்ள பகுதியே அதிகம். இம்மாதிரியே மனிதர்களின் பெரிய மனதைக் காட்டிலும் மறைந்திருக்கும் உள் மனமே பெரியது. சிற்சில சந்தர்ப்பங்களில் உள் மனதில் அமுங்கிக் கிடக்கும் எண்ணங்கள் வெளியாகும். சிற்சில மனோவியாதிகளைக் குணப்படுத்துவதற்கு அமுங்கிக் கிடக்கும் எண்ணங்களை வெளிப்படுத்துவது அவசியம்.

ஒரு குடும்பத்தின் தலைவன் முன்கோபக்காரனாகவும் கொடூர முள்ளவனாயு மிருந்தால் அவன் வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகள் தங்கள் எண்ணங்களை வெளியிடப் பயந்து அமுக்கி வைத்துக் கொள்வார்கள். இதனால் அவர்கள் காலடைவில் பெருந் தீங்குகளுக்கு உள்ளாவார்கள்.

சென்ற இரண்டு உலக மகா யுத்தங்களில் பிரஞ்சுக்காரர்களும் இத்தாலியர்களும் மிகவும் கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். எனினும் இங்கிலாந்திலேதான் அதிகம் பேருக்குப் பைத்தியம் பிடித்தது. இதைப் பற்றி ஆராய்ச்சி செய்தபோது ஒரு உண்மை வெளியாயிற்று. பிரஞ்சுக்காரர்களும் இத்தாலியர்களும் தங்கள் துயரங்களை வெளி

இணையற்ற சிறப்புக்களுடனே யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய நான்காவது தமிழ் விழாவுக்குத் தலைமை வகித்த திரு வி. ஆர். சீனிவாசன்.





பந்தலுக்குள்ளே ஆயிரக்கணக்கான தாய்மார்கள் கூடியிருந்தார்கள் என்றால்.........

விட்டுச் சொல்லிப் புலம்பி அழுவார்கள். ஆனால் ஆங்கிலேயர் தங்களுடைய திட சித்தத்தை நிரூபிப்பதற்காகத் துயரங்களை மனதிலேயே அடக்கிக் கொள்வார்கள்; வெளியே காட்ட மாட்டார்கள். அப்படிப் பலவந்தமாக அடக்கிக் கொண்ட காரணத்தினாலேயே ஆங்கிலேயரில் அதிகம்பேருக்குச் சித்தப்பிரமை உண்டாயிற்று என்று தெரிந்தது!

இப்படி அனைவரும் அறிந்து கொள்ளக் கூடிய எளிய உதாரணங்களைக் கூறிப் பேராசிரியர் அருள்சக்தி அவர்கள் சில அபூர்வமான மனோ தத்துவ உண்மைகளை விளக்கினார்கள்.

முதலில் கூறிய செவிடர்கள் கதையைப் பேராசிரியர் அருள்சக்தி கூறிச் சபையோரைக் குலுங்கச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தபோது முதல் நாள் தமிழ்த் திருவிழாவில் நடந்த ஒரு சம்பவம் என் உள்மனதிலிருந்து வெளியே வந்தது. திருவிழாவின் தலைவர் திரு வி. ஆர். சீனிவாசன் தமது தலைமைப் பிரசங்கத்தைப் படிக்கத் தொடங்கியபோது, திருவிழாப் பந்தலிலும் சுற்றுப் பக்கத்திலும் கூடியிருந்த பதினாயிரம் ஜனங்களும் திடீரென்று செவிடர்களாகிவிட்டார்கள்! அதாவது ஒலி பெருக்கி வேலை செய்யாமல் நின்று விட்டது! அந்தச் சமயம் பார்த்து, யாரோ மின்சார நிலையத்தில் மின்சாரப் பரிசோதனை செய்ய ஆரம்பிக்கவே, இந்தக் கோளாறு நிகழ்ந்தது!

அப்போது உச்சிப் பகல் வேளை. மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. அந்த வேளையில் வேறு இடங்களில் இம்மாதிரி கூட்டங்களில் என்ன நடக்குமென்பது பற்றி நேயர்கள் தங்கள் அநுபவங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். 'ஒலி பெருக்கி கேட்கவில்லை' என்று நாலாபுறத்திலிருந்தும் கூச்சல் கிளம்பும். பலர் எழுந்து நின்று அந்த விஷயத்தை அறிவிப்பார்கள். பலர் கூட்டத்தை விட்டுப் போக முயற்சிப்பார்கள். அவர்களைச் சிலர் தடுக்கப் பார்ப்பார்கள். பத்து நிமிஷம் அல்லோல கல்லோலமாயிருக்கும். இதற்குள் ஒலி பெருக்கி திரும்பி வராவிட்டால், கூட்டம் நிச்சயமாகக் கலைந்து போகும். மேடையில் உள்ள சிலர் மட்டும் மரியாதைக்கு உட்கார்ந்திருப்பார்கள். பிரசங்கம் செய்பவரும் நடு நடுவே நிறுத்திவிட்டு அங்குமிங்கும் பார்ப்பார். 'பிரசங்கத்தைப் படித்ததாகப் பாவித்துக் கொள்ளலாம்' என்று அவரும் பேச்சை நிறுத்தி விடுவார். சபையில் மிச்சமுள்ள மரியாதைக்காரர்கள் பெருமூச்சு விட்டுவிட்டு எழுந்து போவார்கள்.

யாழ்ப்பாணத் திருவிழாவில் என்ன நடந்தது என்று கேளுங்கள். ஒலி பெருக்கி நின்றதும், திரு வி. ஆர். சீனிவாசன் ஒரே

ஒரு தடவை திரும்பிப் பார்த்தார். ரேடியோ சிலோன் அதிகாரி "இதை நேராக ஒலி பரப்புகிறோம். ஆகையால் தயவு செய்து நிறுத்தாமல் படியுங்கள்!" என்றார். ஸ்ரீ சீனிவாசன் பிறகு நிறுத்தவுமில்லை; திரும்பி அப்பால் இப்பால் பார்க்கவும் இல்லை. அவர் பாட்டுக்குப் படித்துக் கொண்டே போனார். மெதுவாக நிறுத்தி நிதானமாகப் படித்தார். படித்து முடிக்க அரைமணி நேரம் ஆயிற்று. முடிக்கும் வரையில் ஒலி பெருக்கி வேலை செய்யவில்லை. ஆனால் ஒருவராவது சபையை விட்டு எழுந்திருக்கவில்லை; கூச்சல் போடவில்லை. திரு வி. ஆர். சீனிவாசனின் தலைமைப் பிரசங்கம் முடிந்து, கல்வி மந்திரி கனம் கனகரத்தினத்தின் நன்றி உரைக்கும் இருந்து விட்டுத்தான் எழுந்தார்கள்!

தமிழ் விழாக்கள், கம்பர் விழாக்கள் முதலிய வைபவங்களுக்குத் தவறாமல் பிரசன்னமாகும் நண்பர்கள் சிலர் உண்டு. விழா நடைபெறும் போதும் விழா முடிந்து போகும் போதும் அவர்களுடைய சம்பாஷணை பின் வரும் தோரணையில் இருக்கும்:—

"திருவாரூர் தமிழ் விழாவில் இலைக்கு மாம்பழம் போட்டார்கள். காரைக்குடி கம்பர் விழாவில் பலாச்சுளை போட்டார்கள். இந்த விழாவில் இலையில் பழம் ஒன்றுமே போடவில்லை......"

"இந்த ஊரில் பழம் கிடைக்காது; போனால் போகட்டும். தென்னை அதிகம் இருக்கிறதே; இலைக்கு ஒரு இளநீராவது கொடுக்கக் கூடாதோ?"

"நீங்கள் பழத்துக்கும் இளநீருக்கும் போய்விட்டீர்கள். சமையலே மகா மட்டம். சாம்பார், ரஸம், பாயாசம்,—ஏதாவது ஒன்று நன்றாயிருக்க வேண்டுமே? வாயில் வைக்க முடிய வில்லை......"


"அப்படி ஒரேயடியாய்க் குறை சொல்லி விடாதீர்கள். வாழைக் காய்ப் பொடித் துவையல் நன்றாகத் தானிருந்தது. இவ்வளவு பெருக்கும் மாங்காய் ஊறுகாய் வைத்திருந்து போட்டார்களே? அதைச் சொல்ல வேண்டாமா?......"

"சாப்பாடு முன் பின்னாக இருந்தாலும் கவனிப்பு நன்றாயிருந்தால் போதும். அதுவும் இங்கே இல்லை. கவனிப்பு, உபசரிப்பு ஒன்றும் போதாது. விசேஷ பிரதிநிதிகளுக்குச் சாப்பாடு எங்கே என்று நாம் விசாரித்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. நம்முடைய புலவர் பெருமணி காளமேகக் கவிராயரைத் தெரியும் அல்லவா? அவருக்குப் பிற்பகலில் சொற்பொழிவு இருந்தும், பகல் பன்னிரண்டு மணி வரையில் சாப்பாடு வரவில்லை! 'தமிழ் விழாவாம் தமிழ் விழா! இம்மாதிரி விழா யார் கொண்டாடச் சொன்னார்கள்!' என்று கவிராயர் அலுத்துக் கொண்டு விட்டார்! நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்! அடுத்த ஆண்டு விழாவுக்கு அவர் வர மாட்டார்!......"

பேராசிரியர் அருள்நந்தி சொன்ன செவிடர் கதையைப் போல் இம்மாதிரி நண்பர்களின் உள் மனதில் உணவைப் பற்றிய கவலையே ததும்பிக் கொண்டிருக்கிறது. செவிக்குணவின் மகிமையைப் பற்றிய



.........பந்தலுக்கு வெளியில் அதைப் போலப் பன்மடங்கும் பேர் கூடியிருந்து சொற்பொழிவுகளையும் சங்கீதக் கச்சேரியையும் கேட்டு மகிழ்ந்தார்கள்.



கலைக் காட்சியில் எப்போது பார்த்தாலும் கூட்டம் ஜே ஜே என்று இருந்தது. மூன்று தினங்களும் சேர்ந்து சுமார் ஒரு லட்சம் பேர் கலைக் காட்சியைக் கண்டு களித்துச் சென்றிருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டது.

குதன் முதலியன எல்லாம் இவர்கள் வரைக்கும் செவிடர் காதில் ஊதிய சங்கைப் போலத்தான்! ஆகையால், சம்பாஷணை மேற்கண்டவாறு அமைகிறது.

யாழ்ப்பாணத்துத் தமிழ் விழா அநுபவம் இதற்கு நேர்மாறாக இருந்தது. உச்சி வேளை பன்னிரண்டரை மணிக்கு, தலைவர் சொற்பொழிவு ஒரு வார்த்தை கூடக் காதில் விழாமல் ஒலி பெருக்கி தவறி யிருந்தும், அந்தப் பதினையாயிரம் பேரும் அப்படியே அமைதியாக உட்கார்ந்திருந்தது அதிசயத்திலும் அதிசயமான நிகழ்ச்சியாகும். இது எப்படி சாத்தியமாயிற்று? அவ்வளவு பேருடைய உள் மனதிலும் தமிழ்த் தெய்வத்தினிடம் அளவில்லாத ஆழ்ந்த பக்தி குடி கொண்டிருந்திருக்க வேண்டும்! அந்த உறுதியான பக்திதான் அவர்களை அப்படி நிலைத்து உட்காரச் செய்திருந்தது. வயிற்றுக் குணவைப் பற்றிய நினைவுகூட அவர்களைக் கலைந்து போகச் செய்ய வில்லை! "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்னும் மொழியும் அங்கே பொய்யாயிற்று. பசியினால் தமிழ்ப் பக்தியை வெல்ல முடியவில்லை. இந்தப் பக்தி மனப்பான்மை, விழா நடந்த மூன்று தினங்களிலும் நன்கு வெளியாகிக் கொண்டிருந்தன.

காலையில் பதினையாயிரமாக இருந்த சபை அன்று மாலை இருபதினாயிரம் ஆயிற்று. மறு நாள் முப்பதினாயிரம் ஆயிற்று. மூன்றாம் நாள் மாலை ஏழு மணிக்குச் சபையில் அறுபதினாயிரம் மக்கள் கூடியிருந்தார்கள். அவர்களில் பலர் பிற்பகல் மூன்று மணிக்கு வந்து சபையில் உட்கார்ந்தவர்கள். பூமியில் வேர் ஊன்றியவர்களைப் போல் இரவு பதினொரு மணி வரையில் உட்கார்ந்திருந்தார்கள். எவ்வளவு தான் சொற்பொழிவுகள் நன்றாயிருக்கட்டுமே? சங்கீதம் கேட்பதில் ஆசையிருக்கட்டுமே? உள் மனதில் பக்தி வேர் ஊன்றி யிராவிட்டால், இது நடக்கக் கூடிய காரியமா?

"அறுபதினாயிரம் பேர் என்று சொல்கிறீரே? எண்ணிப் பார்த்தீரா?" என்று கேட்கலாம். ஒரு முறையாக எண்ணித் தான் பார்த்தேன். ஐயாயிரம் பேர் தாராளமாக உட்காருவதற்கு இடம் கணக்கிட்டுப் பந்தல் போட்டிருந்தார்கள். நெருக்கமாக உட்கார்ந்தால் ஆறாயிரம் பேர் கட்டாயம் உட்காரலாம். பரமேசுவரக் கல்லூரி மைதானத்தில் ஒரு சிறு பகுதியைத்தான் பந்தல் அடைத்தது. மூன்றாம் நாள் மாலை சுமார் ஏழு மணிக்கு மேடையில் நின்று பார்த்தேன். அந்த மைதானம் முழுவதும்,—


மோட்டார் வண்டிகள் நிறுத்தியிருந்த இடத்தைத் தவிர,—ஒரே ஜனத்திரள் மயமாகத் தெரிந்தது! பந்தலில் இருந்த கூட்டத்தைப் போல் பத்து மடங்குக்கு அதிகம் இருக்கும்.


இதே முறையில் கணக்கிட்டு, அச் சபையில் அப்போது பெண்மணிகள் பத்தாயிரம் பேர் இருந்தார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது. பந்தலுக்குள்ளே ஆயிரம் பேரும் வெளியே ஒன்பதினாயிரம் பேரும் இருந்தார்கள். இதிலும் அதிசயம் என்னவென்றால், அத்தகைய மாதர் பெருங் கூட்டத்தில் கைக்குழந்தைகளைக் காணோம். பிரசங்கத்துக்கோ கச்சேரிக்கோ தாய்மார்கள் போனால் குழந்தைகளைக் கட்டாயம் எடுத்துப் போக வேண்டாமோ! இது யாழ்ப்பாணத்துத் தாய்மார்களுக்குத் தெரியவில்லை. மாலை ஆறு மணி சுமாருக்கு ஒரே ஒரு குழந்தையின் கீச்சிடும் குரல் மெல்லிதாகக் கேட்டது. எந்தப் பக்கமிருந்து வருகிறது என்று எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அந்தக் குழந்தையின் அன்னையே அதை வெளிப்படுத்தி விட்டார். அவர் என்ன செய்தார் தெரியுமோ? அழுத குழந்தையை அணைத்துக் கொண்டு எழுந்தார். ஏதோ செய்யத் தகாத பெருங் குற்றத்தைச் செய்து விட்டவர் போல் ஒரே ஓட்டம் பிடித்து ஓடி விட்டார்! அந்தப் பெண்மணியின் முன்னால் சென்று நமஸ்கரித்து, "அம்மா! தங்கள் குழந்தையின் குரல் தமிழைவிட இனிமையாயிருக்கிறது. போக வேண்டாம், இருங்கள்!" என்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ள எண்ணினேன். அதற்குள் அந்தப் பெண்மணி மாயமாய் மறைந்து விட்டார்.

இவ்வளவு பண்பாடு நிறைந்த பெருந்திரளான மக்கள் கூடியிருந்த ஒரு மகா சபையை இதற்கு முன் எங்கும் நான் பார்த்ததில்லை. வேறு யாரும் பார்த்திருக்க முடியாது என்றும் சொல்வேன். யாழ்ப்பாணத்தார் நிச்சயமாகப் பார்த்ததில்லை. "இதற்கு முன்பும் பார்த்ததில்லை. இனி மேலும் பார்ப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை" என்று ஈழத்து நண்பர்கள் பலரும் சொன்னார்கள்.

இவ்வளவு உயர்ந்த பண்பாட்டுக்கு இழுக்குத் தரும் குறைபாடு, ஒன்றும் தமிழ் விழாவின்போது வெளியாயிற்று. அதை நான் சொல்லாமலிருக்க முடியாது. சொற்பொழிவாளர்களில் ஈழநாட்டைச் சேர்ந்த பெரும் புலவர்கள் பேசிய சமயங்களில் சபையில் ஒரு பகுதியார் பொறுமையின்மையை வெளிப்

படைபடைக்கிற வெய்யிலில் மரத்தின் நிழலில் நின்று தமிழ்ச் சொற்பொழிவு கேட்கும் இவர்களுடைய தமிழ் அன்பை என்ன வென்று சொல்வது? (கையைக் கட்டிக் கொண்டிருக்கும் பக்தி பாவத்தைக் கவனிக்கவும்.)





பூஜ்யர் சுவாமி தனிநாயகம் அவர்கள் உல கெங்கும் தமிழின் சிறப்பைப் பிரசாரம் செய்து வந்தவர். தமிழ் விழாவில் அவருடைய சொற் பொழிவு சிறந்து விளங்கியது.

படுத்தினார்கள்; கைதட்டிப் பேச்சை நிறுத் தும் முறையையும் கையாண்டார்கள். அவர்க ளுடைய மனோநிலையை அறிந்து கொள் வதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. "இந்த நாட்டுப் புலவர்களின் பேச்சுக்களை எப் போதும் நாம் கேட்கலாம். இவர்கள் தங்கள் பேச்சை நீட்டிக்கொண்டே போனால் கடல் கடந்து எவ்வளவோ சிரமத்தின்பேரில் வந்திருப்போரின் சொற்பொழிவுகளை எவ் வாறு கேட்பது?" என்று அவர்கள் எண்ணி யது இயல்புதான். அதை அந்தமாதிரி பண் பாட்டுக்குக் குறைவான முறையில் வெளி யிட்டிருக்கக் கூடாது. அந்தக் கடமையைச் சபைத் தலைவருக்கே விட்டிருக்க வேண்டும். எப்படியானாலும், அடிக்கடி சபையில் ஒரு பகுதியார் இம் முறையைக் கையாண்டது தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்தவர்களுக்கு வேதனையை அளித்தது.

பேராசிரியர் அருள் நந்தி ஒருவர்தான் மேற்கூறிய சோதனையிலிருந்து தப்பினார். அவர் ரஸமாகவும் பேசினார்; சுருக்கமாகவும் பேசி முடித்தார். உளத் தத்துவ ஆசிரியர் அல்லவா? சபையோரின் வெளி மனம், உள் மனம் ஆகிய இரண்டின் தன்மையையும் அறிந்து அதற்கேற்பப் பேசினார். பொது வாக, பெருந்திரளான மக்கள் கூடும் மகா சபைகளில் பேசுவோர் ஸ்ரீ அருள் நந்தியைப் பின்பற்ற வேண்டும்.

*   *   *

சபையோரின் நோக்கமறிந்து நடந்து கொள்ளும் ஆற்றல் இந்தத் தமிழ் விழாவில் மற்றொருவரிடம் நன்கு வெளியாயிற்று. அவர்தான் இலக்கிய மகாநாட்டிற்குத் தலைமை வகித்த பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள்.

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்!"

என்று பாரதியார் பாடினார் அல்லவா? தமிழ் நாட்டிலிருந்து ஈழ நாட்டுக்கு அமைந்த இலக்கியப் பாலத்திற்கு திரு சேதுப் பிள்ளை அடிப்படையாகவும் மேல் தளமாகவும் பக்கப் பாதுகாப்பாகவும் விளங்கி அருமையான உதவி புரிந்தார். தம்முடைய தலைமை உரையில் ஈழ நாட்டுப் பெரியார்கள் தமிழுக் குப் புரிந்துள்ள தொண்டுகளைச் சிறப்பாக எடுத்துரைத்தார். இலக்கிய மகாநாட்டில் ஒவ்வொருவரும் பேசிய பிறகு தலைவர் நகைச் சுவையுடனும் ரஸமான சிலேடைகளுடனும் சிறப்புரை கூறிச் சபையோரை மகிழ்வித் தார். இது காரணமாகவே, அதாவது தலை வரின் விரிவான விமரிசனத்தைக் கேட்பதற் காகவே, சபையோர் சொற்பொழிவாளர் சிலரை விரைவில் முடிக்கும்படி கோரினார் களோ என்று தோன்றும்படி அவருடைய மதிப்புரைகள் மிளிர்ந்தன.

இலக்கிய மகாநாட்டில் முதலில் பேசியவர் பூஜ்யரான தனிநாயக சுவாமிகள். அவர்க ளுடைய சொற்பொழிவு தொடங்கும் நேரத் தில் திரு சேதுப் பிள்ளை வரக்கூடவில்லை. சில நிமிஷம் தாமதித்து வர நேரிட்டது. சுவாமிகளின் பேச்சுக்குத் திரு சேதுப் பிள்ளை கூறிய சிறப்புரையில், "இவர்க ளுடைய பெயரே தனிநாயகம்! இவர்க ளுடைய பேச்சுக்கு ஒரு சபாநாயகம் எதற்கு? அதனாலேயே நான் வருவதற்கு முன்பு தொடங்கி விட்டார்கள்!" என்று கூறி யதை யார்தான் அநுபவித்துச் சிரிக்காம லிருக்க முடியும்?

இம்மாதிரியே ஒவ்வொரு இலக்கியப் பிர சங்கத்துக்குப் பிறகும் சொல்லின் செல்வ ரான திரு சேதுப்பிள்ளை அவர்கள் பொருத்த மாகவும் இனிமையாகவும் பேசி அந்த மகா சபையில் மணிக் கணக்காக அமர்ந்திருந்தவர் களுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்படாதபடி செய்து வந்தார். (அடுத்த இதழில் முடியும்)



அத்தியாயம் 6

மறைந்த மண்டபம்

மறு நாள் காலையில் உதய சூரியனுடைய செங்கிரணங்கள் வந்தியத்தேவனைத் தட்டி எழுப்பின. உறக்கம் நீங்கிய பிறகும் சுய உணர்வு வருவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. அவன் மேல் விழுந்தது சூரியனுடைய வெளிச்சமா அல்லது கலங்கரை விளக்கின் ஒளியா என்று தெளிவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. முதல் நாள் இரவு அநுபவங்களில் எது உண்மை, எது கனவு என்று எண்ணிப் பார்த்த போது அவனுக்கு ஒரே குழப்பமாயிருந்தது. வீட்டிலே பெரியவரின் மனைவியும் அவருடைய மருமகளும் மட்டுமே இருந்தார்கள். பெரியவர் குழகர் கோயிலுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்வதற்காகப் போயிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். பூங்குழலியைப் பற்றி அவர்களிடம் விசாரிக்க அவனுக்குத் தைரியம் வரவில்லை. அவர்கள் அளித்த காலை உணவை அருந்திவிட்டுச் சுற்று முற்றும் கண்களைச் செலுத்தித் தேடிப் பார்த்தான். பூங்குழலி எங்கும் அகப்படவில்லை. ஆலயத்துக்குப் போய்ப் பார்க்கலாம் என்று போனான். அங்கே அவள் தந்தை இருந்தார். கோயிலைச் சுற்றியிருந்த மரங்களிலிருந்து பூஜைக்குரிய புஷ்பங்களைக் கொய்து கொண்டிருந்தார். மலர்களைத் தொடுத்து மாலையாக்குவதற்குச் சில நாள் பூங்குழலி வருவதுண்டு என்றும், ஆனால் இன்றைக்கு வரவில்லையென்றும் கூறினார். "எங்கேயாவது காட்டில் மான்களைத் துரத்திக் கொண்டிருப்பாள். அல்லது கடற்கரையோடு திரிந்துகொண்டிருப்பாள். அவளைத் தேடிப் பிடித்துக் கேட்டுப் பார்!" என்றார். "தம்பி! ஒரு விஷயத்தில் ஜாக்கிரதையாக இரு. அவள் பொல்லாதவள். தப்பர்த்தம் செய்து கொள்ளும்படியாக அவளிடம் ஏதாவது சொல்லி விடாதே. காவியங்களில் படித்திருப்பதை நினைத்துக் கொண்டு சிருங்கார ரஸத்தில் இறங்கி விடாதே! உடனே பத்திரகாளியாக மாறி விடுவாள். அப்புறம் உன் உயிர் உன்னுடையது அல்ல!" என்று எச்சரிக்கை செய்தார் பெரியவர். முதல் நாள் கனவை நினைத்துக் கொண்டு வந்தியத்தேவன் உடல் சிலிர்த்தான். பிறகு காட்டிற்குள் பூங்குழலியைத் தேடிக்கொண்டு போனான். காட்டிலே எங்கே என்று தேடுவது? சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்கு அலுத்துப் போய் விட்டது. காட்டிலிருந்து வெளியேறினால் போதும் என்று ஆகி விட்டது. வெளியேறிய பின்னர் கடற்கரையை நோக்கிச் சென்றான். கடற்கரையோடு நீண்ட தூரம் அலைந்தும் பலன் ஒன்றும் இல்லை. பூங்குழலி

யைக் காண வில்லை. "எப்படியும் மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவான் அல்லவா? அங்கு பார்த்துக் கொள்ளலாம்!" என்று திரும்பினான். திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. அலையும் ஆட்டமும் அதிகமில்லாமல் அமைதியாக இருந்த அந்தக் கடலில் இறங்கிக் குளிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. இந்தப் பக்கத்தில் கடலில் ஆழம் அதிகம் இல்லை யென்று முன்னமே கேள்விப்பட்டதுண்டு. முதல் நாள் மாலையில் பூங்குழலியும் சொல்லியிருக்கிறாள். பின்னை, இறங்கிக் குளிப்பதற்கு என்ன தடை? கடல் விஷயத்தில் அவனுக்கிருந்த பயத்தைப் போக்கிக் கொள்வதும் அவசியம். படகிலும் கப்பலிலும் ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. கடலைக் கண்டு பயப்பட்டால் முடியுமா? அந்தப் பயத்தைப் போக்கிக் கொண்டே ஆகவேண்டும்.

இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்த கருள் துணியையும் கத்தியையும் எடுத்துக் கடற்கரையில் வைத்து விட்டுக் கடலில் இறங்கினான். மெள்ள மெள்ள ஜாக்கிரதையாகக் காலை எடுத்து வைத்து நடந்தான். போகப் போக முழங்கால் அளவு ஜலத்துக்கு மேல் இல்லை. சிறிய அலைகள் வந்து மோதியபோது ஜலம் இடுப்பளவுக்கு வந்தது. அதற்கு மேலே இல்லை. "அழகான சமுத்திரம் இது! அமிழ்ந்து குளிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லையே!" என்று சொல்லிக் கொண்டே இன்னும் மேலே சென்றான்.

அடேடே! ஆழம் இல்லை என்று எண்ணிக் கொண்டே கரையிலிருந்து வெகு தூரம் வந்து விட்டோமே? திடீரென்று கடல் பொங்கினால்? அலைகள் பெரிதாகி மோதினால்?-இந்த எண்ணம் தோன்றிக் கரைப் பக்கம் திரும்பிப் பார்த்தான். அதிக தூரம் கரையிலிருந்து வந்து விட்டது என்னமோ உண்மைதான்! ஆனால் அப்படியொன்றும் கடல் திடீரென்று பொங்கி விடாது!...ஓகோ! அதோ பூங்குழலி வருகிறாளே! கரையேறி அவளைப் பிடித்துக் கொள்ள வேண்டும். பிடித்துக் கொண்டு நயமான வார்த்தைகளினால் மறுபடி கேட்க வேண்டும். அவளும் நம்மைப் பார்த்து விட்டுத்தான் வருகிறாள் போலிருக்கிறது! நாம் இருக்கும் திசையை நோக்கியே வருகிறாள்! ஏதோ நம்மைப் பார்த்துச் சமிக்ஞை கூடச் செய்கிறாளே!......


ஓ! ஓ! இது என்ன? கரையில் குனிந்து அவள் என்ன பார்க்கிறாள்? என்னத்தை எடுக்கிறாள்? நம்முடைய இடுப்பில் சுற்றும் கருள் துணியையல்லவா எடுக்கிறாள்? பெண்ணே! அதை எடுக்காதே! அது என்னுடையது!......நாம் சொல்வது அவள் காதில் விழவே யில்லை! இந்தக் கடல் அலைகளின் இரைச்சல்!


இதோ நம் குரல் அவளுக்குக் கேட்டு விட்டது! நம்மைப் பார்த்து அவளும் ஏதோ சொல்கிறாள்! பூங்குழலி! அது என்னுடையது! எடுக்காதே!......

இந்தா! சொன்னால் கேட்க மாட்டாயா? உன் உடைமை போல் கையில் எடுத்துக் கொண்டு நீ பாட்டுக்குப் போகிறாயே! நில்! நில்!......

வந்தியத்தேவன் கரையை நோக்கி ஓட ஆரம்பித்தான்! ஒரு தடவை பூங்குழலி அவனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு அவளும் ஓடத் தொடங்கினாள். வீடும் கலங்கரை விளக்கமும் இருந்த பக்கத்துக்கு எதிர்ப் பக்கமாகக் காட்டை நோக்கி ஓடினாள்!

ஆகா! இவள் துஷ்டப் பெண்! துஷ்டப் பெண்ணா? அல்லது வெறும் பைத்தியமா? இந்தப் பைத்தியத்தி





ளிடமிருந்து நமது அரைச் சுருளை எப்படியும் வாங்கியாக வேண்டும்?...

இரண்டு தடவை கடலில் இடறி விழுந்து ஒரு வாய் உப்புத் தண்ணீரும் குடித்துவிட்டு வந்தியத்தேவன் மெதுவாகக் கரையேறினான். பிறகு அந்தப் பெண்ணைத் தொடர்ந்து ஓடினான். ஓட ஓட, அவனுடைய ஓட்டத்தின் வேகம் அதிகமாயிற்று. சற்றுத் தூரத்தில் ஐம்பது அறுபது மான்களின் கூட்டம் ஒன்று ஓடியது. மான்கள் மிரண்டு பாய்ந்து ஓடுவது,—தாவித் தாவிக் குதித்து ஓடுவது,—என்ன அழகான காட்சி! ஏன்? இதோ இந்தப் பெண் குதித்துக் குதித்து ஓடுகிறாளே? இதுவும் அந்த மான்களின் ஓட்டத்தைவிட அழகில் குறைவாயில்லை! இம்மாதிரி இயற்கையாகவும் யதேச்சையாகவும் வாழும் பெண்களின் அழகே அழகு தான்!...ஆனால் இதையெல்லாம் அவளிடம் சொல்லக் கூடாது. சொன்னால் காரியம் கெட்டுப் போய்விடும்! பெரியவர் தான் எச்சரித்திருக்கிறாரே?...இருந்தாலும், இவள் எதற்காக இப்படி வீம்பு பிடித்துக் கொண்டு ஓடுகிறாள்! காட்டில் புகுந்து விட்டால் அப்புறம் அவளைக் கண்டு பிடிப்பது எப்படி?... இதோ காட்டிற்குள் புகுந்தே விட்டாள்! காரியம் கெட்டுக் குட்டிச் சுவராகி விட்டது. நம்மைப் போன்ற மௌடீகன் உலகிலேயே வேறு யாரும் இருக்க முடியாது!...குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை திரும்பி வருமா?

வந்தியத் தேவனும் சிறிது நேரத்தில் காட்டிற்குள் புகுந்தான். அங்கு மிங்கும் அலைந்தான். அவசரத்தினாலும் பரபரப்பினாலும் செடிகளைச் சரியாக விலக்கி விட்டுக் கொண்டு நடக்காமல் உடம்பெல்லாம் முட்களால் கீறிக் கொண்டான். "பூங்குழலி! பூங்குழலி!" என்று கூச்சலிட்டான். பிறகு, "மரமே! பூங்குழலியைக் கண்டாயோ?" "காக்காய்! பூங்குழலியைக் கண்டாயோ?" என்றெல்லாம் கேட்க ஆரம்பித்தான். இது ஏது? நமக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே!—என்று அவன் நினைக்கத் தொடங்கிய சமயத்தில், திடீரென்று மரத்தின் மேலிருந்து ஏதோ விழுந்தது! ஆ! அவனுடைய அரைத் துணிச் சுருள்தான்! மிக்க ஆவலுடன் அதை எடுத்துச் சுருளைப் பிரித்துப் பார்த்தான். ஓலை, பொற்காசுகள் எல்லாம் பத்திரமாயிருந்தன!

"பணம் பத்திரமாயிருக்கிறதா?" என்று ஒரு குரல் மேலேயிருந்து வந்தது. வந்தியத்தேவன் அண்ணாந்து பார்த்தான். பூங்குழலி மரக் கிளையில் உட்கார்ந்திருந்தாள்.

வியர்த்து விருவிருத்துப் போயிருந்த வந்தியத்தேவன் தன்னை மீறிய கோபத்தினால் "உன்னைப் போன்ற மந்தியை நான் பார்த்ததேயில்லை!" என்றான்.

"உன்னைப் போன்ற ஆந்தையை நான் பார்த்ததில்லை. அம்மம்மா! என்ன முழி முழித்தாய்?" என்றாள் பூங்குழலி.

"எதற்காக இப்படி என்னை அலைக்கழித்தாய்? உனக்குப் பணம் வேண்டுமென்றால்..."

"சீச்சீ! உன் பணம் இங்கே யாருக்கு வேண்டும்?"

"அப்படியானால் எதற்காக இதைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தாய்?"

"அவ்விதம் நான் செய்திராவிட்டால் நீ காட்டுக்குள் வந்திருக்க மாட்டாய். எங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போயிருப்பாய்?......"

"போயிருந்தால் என்ன?"

"இந்த மரத்தின் மேல் ஏறிப் பார், தெரியும்!"

"என்ன தெரியும்?"

"பத்துப் பதினைந்து குதிரைகள் தெரியும்! வாள்களும் வேல்களும் மின்னுவது தெரியும்!"

அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து அவள் கூறுவது உண்மையாயிருக்கலாம் என்று தோன்றியது. ஆயினும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள விரும்பி வந்தியத்தேவன் மரத்தின் மேல் ஏறினான். ஏறுவதற்கு முன் அரைச் சுற்றுச் சுருளைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டான். ஒரு வேளை இவள் மரத்தின் மேலிருந்து அதைத் தவறிப் போட்டிருக்கலாம். இப்போது மறுபடியும் அதை அபகரிப்பதற்குச் சூழ்ச்சி செய்கிறாளோ, என்னமோ, யார் கண்டது?

மரத்தின் மேலேறிக் கலங்கரை விளக்கின் பக்கம் நோக்கினான். ஆம்; பூங்குழலி கூறியது உண்மைதான். அங்கே பத்துப் பதினைந்து குதிரைகள் நின்றன. குதிரைகளின் மீது வாள்களும் வேல்களும் பிடித்த வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் யாராக இருக்கும்?......நம்மைப் பிடிப்பதற்கு வந்த பழுவேட்டரையரின் ஆட்கள் தான்! வேறு யாராயிருக்க முடியும்?

பூங்குழலி தன்னைப் பெரும் அபாயத்திலிருந்து காப்பாற்றினாள். எதற்காக? என்ன நோக்கம் பற்றி?—இன்னும் சில விஷயங்களும் தெளிவாகவில்லை!

இருவரும் மரத்திலிருந்து கீழே இறங்கினார்கள். "பூங்குழலி! என்னைப் பேரபாயத்திலிருந்து காப்பாற்றினாய். உனக்கு மிக மிக நன்றி!" என்றான் வந்தியத்தேவன்.

"வெறும் பொய்! ஆண் பிள்ளைகளுக்கு நன்றிகூட உண்டா?" என்றாள் பூங்குழலி.

"எல்லா ஆண் பிள்ளைகளையும் போல் என்னையும் எண்ணிவிடாதே!"

"நீ எல்லாரையும் போல் இல்லை; ஒரு தனி மாதிரிதான்."

"பெண்ணே! உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா?"

"தாராளமாகக் கேட்கலாம்; மறுமொழி கூறுவது என் இஷ்டம்."

"என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று ஏன் எண்ணினாய்? என் பேரில் திடீரென்று தயவு பிறக்கக் காரணம் என்ன?"

பூங்குழலி சும்மா இருந்தாள். அவள் சிறிது திகைத்துப் போனாள் என்பது முகத்திலிருந்து தெரிந்தது.

அப்புறம் யோசித்துப் பார்த்து, "அசடுகளைக் கண்டால் எனக்கு எப்போதும் கொஞ்சம் பரிதாபம் உண்டு" என்றாள்.

"சந்தோஷம்; இந்த வீரர்கள் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள் என்பதை எப்படி அறிந்தாய்?"

"உன்னைப் பார்த்தால் தெரியவில்லையா?—நீ தப்பி ஓடி ஒளிந்து கொள்ள வந்திருக்கிறவன் என்று. நேற்றைக்கே ஊகித்தேன். இன்றைக்குக் காலையில் உன் சிநேகிதன்—வைத்தியர் மகன்—மூலமாக அது ஊர்ஜிதமாயிற்று."

"அவன் என்ன உளறினான்?"

"காலையில் எழுந்ததும் காட்டிலே மூலிகை தேட வேண்டும் என்றான். நான் அழைத்துப் போவதாகச் சொல்லி இங்கே அழைத்துக்கொண்டு வந்தேன். என்னிடத்தில் காதல் புரிய ஆரம்பித்தான். 'உன்னுடைய சிநேகிதன் உன்னை முந்திக்கொண்டு விட்டானே?' என்று சொன்னேன்..."

"என்ன சொன்னாய்?"

"கொஞ்சம் பொறு; கேட்டுக் கொண்டு வா! நீ என்னிடம் காதல் புரியத் தொடங்கி விட்டதாகச் சொன்னேன். அப்போதுதான் உன்பேரில் அவனுடைய சந்தேகத்தை வெளியிட்டான். ஏதோ இராஜ தண்டனைக்குப் பயந்து நீ ஓடித் தப்பி வந்திருக்கிறாய் என்று அவனுக்கு வழியில் பல காரணங்களால் சந்தேகம் தோன்றியதாம்! 'அப்படிப்பட்டவனை நம்பி அநியாயமாய்க் கெட்டுப் போகாதே! என்னைக் கலியாணம் செய்துகொள்!' என்றான். 'ரொம்ப அவசரப்படுகிறாயே? பெரியவர்களைக் கேட்க வேண்டாமா?' என்றேன். 'பழந் தமிழ் மரபை யொட்டிக் களவு மணம் புரிந்து கொள்வோம்!' என்று உன் அழகான சிநேகிதன் சொன்னான். எப்படியிருக்கிறது கதை?"



"அட சண்டாளப் பாவி!" என்று கத்தினான் வந்தியத்தேவன்.

"இதற்குள்ளே குதிரைகள் வரும் சத்தம் கேட்டது. நான் மரத்தின் மேல் ஏறிப்பார்த்து விட்டு இறங்கி வந்து அவனை ஏறிப் பார்க்கச் சொன்னேன். மரத்தின் மேலே நின்று பார்த்தபோது அவனுடைய கால்கள் வெட வெட என்று நடுங்கியதை நினைத்தால் இப்போதும் எனக்குச் சிரிப்பு வருகிறது..." என்று சொல்லி விட்டுப் பூங்குழலி சிரித்தாள்.

"விளையாட்டு இருக்கட்டும்; அப்புறம் என்ன நடந்தது?"

"அவன் மரத்தின் மேலேயிருந்து இறங்கி வந்தான். 'பார்த்தாயா? நான் சொன்னது சரியாகப் போயிற்று. அவனைப் பிடிப்பதற்குத்தான் இராஜசேவகர்கள் வந்திருக்கிறார்கள்!' என்றான். 'அப்படியானால் அவனுடன் வந்த உன்னையும் பிடிப்பார்கள் அல்லவா? நீ ஓடி எங்கேயாவது ஒளிந்து கொள்!' என்றேன். 'அப்படித்தான் செய்ய வேண்டும்' என்றான். என்னை விட்டுப் பிரிந்து சென்றான். நான் எதிர்பார்த்தபடியே நடந்தது......"

"என்ன? என்ன நடந்தது?"

"ஓடி ஒளிந்து கொள்வதாக என்னிடம் சொல்லிவிட்டு நேரே அந்தக் குதிரைக்காரர்கள் இருந்த திசையை நோக்கிப் போய் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டான்......"

"ஐயோ! பாவம்!"

"அதிகமாகப் பரிதாபப்பட்டு விடாதே! கொஞ்சம் மிச்சம் வைத்துக் கொள்!"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"முழுவதும் கேள்! நீயே தெரிந்து கொள்வாய்! அவர்களிடம் நேரே போனான். அவர்கள் இவனை அதிசயத்துடன் பார்த்தார்கள். உற்று உற்றுப் பார்த்து ஒருவரோடொருவர் இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். 'நீங்கள் யார்?' என்று இவன் கேட்டான். 'நாங்கள் வேட்டைக்காரர்கள்; மான் வேட்டையாட வந்திருக்கிறோம்' என்று அவர்களில் ஒருவன் சொன்னான். 'இல்லை; நீங்கள் என்ன வேட்டையாட வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்' என்றான் இவன். அவர்கள் இன்னும் வியப்படைந்து இவனைத் தூண்டி விட்டார்கள். 'வந்தியத்தேவனைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவன் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். என்னைச் சும்மா விட்டு விடுவீர்களா?' என்று கேட்டான். அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். இவன் அவர்களை அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டுப் பக்கம் போனான்......"

"துரோகி! சண்டாளன்!......"

"அவர்கள் போன பிறகு 'நான் உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன். நீ கடலில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தாய்......"

"என்னிடம் அங்கேயே இதையெல்லாம் ஏன் சொல்லவில்லை? இந்தத் துணிச் சுருளை எடுத்துக் கொண்டு ஏன் ஓடி வந்தாய்?"

"இல்லாவிட்டால், நீ அவ்வளவு வேகமாக ஓடி வந்திருப்பாயா? அந்த வேட்டைக்காரர்களை ஒரு கை பார்க்கிறேன் என்று அவர்களைத் தேடிப் போயிருந்தாலும் போயிருப்பாய்! என் பேச்சையே ஒருவேளை நம்பியிருக்க மாட்டாய். இவ்வளவையும் சொல்லி உன்னை என்னுடன் வரும்படி செய்வதற்குள் அவர்கள் உன்னை ஒருவேளை பார்த்திருப்பார்கள்......"

ஆகா! இந்தப் பெண்ணையா நாம் பைத்தியக்காரி என்று எண்ணினோம் என்று வந்தியத்தேவன் நினைத்து வெட்கம் அடைந்தான். இவளிடம் பூரண நம்பிக்கை வைத்தே யாக வேண்டும். இவளுடைய உதவியில்லாவிட்டால் நாம் கடலைக் கடந்து



இலங்கை செல்ல முடியாது. இவ்வளவு தூரம் வந்ததும் வீணாகும். பழுவேட்டரையர்களிடம் திரும்ப அகப்பட்டுக் கொள்ளவும் நேரலாம்.

"பெண்ணே! நீ எனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறாய் என்பதைச் சொல்லி முடியாது. மிச்ச உதவியையும் நீதான் செய்ய வேண்டும்....."

"என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்று கேட்டான்.

"என் சிநேகிதனுடைய இலட்சணத்தைப் பார்த்து விட்டாய் அல்லவா? அவனை நம்பிப் பயன் இல்லை யென்று தெரிந்து கொண்டாய் அல்லவா? நீ தான் படகு வலித்து வந்து என்னை இலங்கையில் சேர்ப்பிக்க வேண்டும்!"

பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

"நான் தப்புக் காரியம் எதுவும் செய்யக் கூடியவன் அல்ல என்று உனக்கு நம்பிக்கை ஏற்படுகிறதா? பெண்ணே! இலங்கைக்கு மிக முக்கியமான காரியமாக நான் உடனே போய்த் தீர வேண்டும். இந்த உதவி எனக்கு நீ அவசியம் செய்தேயாக வேண்டும்......"

"செய்தால் எனக்கு என்ன தருவாய்?" என்று பூங்குழலி கேட்டாள்.

அவளுடைய முகத்தில் முதன் முதலாக நாணத்தின் அறிகுறி தென்பட்டது. கன்னங்கள் குழிந்தன. அவளுடைய முகத்தின் அழகு பன்மடங்கு அதிகமாகிச் சுடர்விட்டு ஒளிர்ந்தது.

முதல் நாள் இரவு கண்ட கனவில் இதேமாதிரி அவள் கேட்டது வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. தான் அதற்குக் கூறத் தொடங்கிய மறுமொழியும் நினைவு வந்தது. அதே வார்த்தைகள் மறுபடியும் அவன் நாவில் வருவதற்குத் துடித்தன. பல்லினால் நாவைக் கடித்துக் கொண்டு அந்த வார்த்தை வராமல் நிறுத்தினான்.

"பெண்ணே! இந்த உதவி நீ எனக்குச் செய்தால் உயிர் உள்ள அளவும் மறக்க மாட்டேன். என்றென்றும் நன்றி செலுத்துவேன். உனக்கு நான் இதற்குப் பிரதியாகச் செய்யக் கூடியது எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ ஏதாவது செய்யும்படி சொன்னால், கட்டாயம் செய்வேன்!"

பூங்குழலி சிந்தனையில் ஆழ்ந்தாள். சொல்ல எண்ணியதைச் சொல்லலாமா, வேண்டாமா என்று தயங்கியதைப்போல் காணப்பட்டது.


"என்னால் உனக்கு ஆகக்கூடிய பிரதி உதவி ஏதேனும் இருந்தால், சொல்! நிச்சயம் செய்கிறேன்......"

"இது சத்தியமான வார்த்தைதானா?"

"சத்தியம்! சத்தியம்!"

"அப்படியானால், சமயம் வரும்போது சொல்லுகிறேன். அப்போது மறந்துவிட மாட்டாயே?"

"ஒரு நாளும் மறக்கமாட்டேன். நீ எப்போது பிரதி உதவி கேட்பாய்



என்று காத்திருப்பேன். அதுவரையில் உனக்குக் கடன் பட்டிருப்பதாகவே எண்ணியிருப்பேன்."

பூங்குழலி மீண்டும் சிறிது நேரம் சிந்தனை வயப்பட்டிருந்தாள்.

"சரி; என்னுடன் வா! இந்தக் காட்டில் ஓரிடத்துக்கு உன்னை நான் அழைத்துப் போகிறேன். அங்கே இன்று பொழுது சாயும் வரையில் நீ இருக்க வேண்டும். பட்டினியாகத்தான் இருக்க வேண்டும்......"

"அதைப்பற்றிக் கவலை இல்லை! காலையில் உன் அண்ணி பழைய சோறு போட்டாள். அவளுடைய வயிற்றெரிச்சலைக் கிளப்புவதற்காகவே அதிகமாகச் சாப்பிட்டேன். இனி இராத்திரி வரையில் சாப்பாடு தேவையில்லை......"

"இராத்திரி கூடச் சாப்பாடு கிடைக்கிறதோ, என்னமோ? கையில் கொஞ்சம் எடுத்துவரப் பார்க்கிறேன். நான் சொல்லும் இடத்தில் இருட்டும் வரை நீ இருக்க வேண்டும். இருட்டிய பிறகு, நான் திரும்ப வந்து ஒரு சத்தம் செய்வேன். குயில் 'குக்கூ' என்று கூவுவதைக் கேட்டிருக்கிறாயா?"

"நன்றாய்க் கேட்டிருக்கிறேன். அப்படிக் கேட்டிரா விட்டாலும், உன் குரலைத் தெரிந்து கொள்வேன்."

"நான் குரல் கொடுத்ததும் நீ இவ்விடத்திலிருந்து வெளி வரவேண்டும். இருட்டி ஒரு ஜாமத்திற்குள் படகில் ஏறி நாம் புறப்பட்டுவிட வேண்டும்."

"குயிலின் குரல் எப்போது வரும் என்று காத்திருப்பேன்."

காட்டின் மத்தியில் மணல் மேடு இட்டிருந்த ஓரிடத்துக்குப் பூங்குழலி வந்தியத் தேவனை அழைத்துப் போனாள். மேட்டின் மறு பக்கத்தில் மரஞ் செடி கொடிகள் மற்ற இடத்தை விட அதிக நெருக்கமாயிருந்தன. அவற்றை லாகவமாகக் கையினால் விலக்கிக் கொண்டு ஒரு மரத்தின் வழியாகப் பள்ளத்தில், இறங்கினாள். வந்தியத்தேவனும் அவளைப் பின்பற்றி இறங்கினான். அங்கே ஒரு பழைய மண்டபத்தின் மேல் விளிம்பு காணப்பட்டது. இன்னும் உற்றுப் பார்த்ததில் இருளடைந்த மண்டபத்தின் இரு தூண்கள் தெரிந்தன. இவை எல்லாவற்றையும் மரங்களும் செடி கொடிகளும் மறைத்திருந்தன. எந்தப் பக்கமிருந்து பார்த்தாலும் அந்த மண்டபம் அங்கே இருப்பது தெரியவேதெரியாது.

"இந்த மண்டபத்தில் ஒரு சிறுத்தை குடியிருந்தது. அது போன பிறகு நான் இதில் இருக்கிறேன். என்னுடைய சொந்தத் தனி வீடாக வைத்துக் கொண்டிருக்கிறேன். மனிதர்களைக் காணப் பிடிக்காதபோது இவ்விடத்துக்கு நான் வந்து விடுவது வழக்கம். சட்டியில் தண்ணீர் இருக்கிறது. இன்று பகலெல்லாம் இங்கேயே இரு! நாலாபுறமும் மனிதர்கள் குரல் கேட்டாலும் குதிரைகள் ஓடும் சத்தம் கேட்டாலும் வேறு என்ன தடபுடல் நடந்தாலும் நீ வெளியில் தலை காட்ட வேண்டாம். மேட்டின்மேல் ஏறிப் பார்க்க வேண்டாம்!" என்று பூங்குழலி கூறினாள்.

"இருட்டிய பிறகும் இங்கேயே இருக்கச் சொல்கிறாயா? காட்டு மிருகம்,—புலி, சிறுத்தை ஏதாவது வந்தால்?........." என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"புலி, சிறுத்தை இங்கே ஒன்றும் இப்போது இல்லை. வந்தால் நரியும் காட்டுப் பன்றியும் வரும். நரிக்கும் பன்றிக்கும் பயப்பட மாட்டாயே!"

"பயம் ஒன்றுமில்லை. இருட்டில் வந்து மேலே விழுந்தால் என்ன செய்வது? கையில் வேல்கூட இல்லை. வீட்டில் வைத்து விட்டேன்."

"இந்தா! இந்த ஆயுதத்தை வைத்துக் கொள்!" என்று பூங்குழலி மண்டபத்தில் கிடந்த ஓர் ஆயுதத்தை எடுத்துக் கொடுத்தாள். அது ஒரு விசித்திரமான ஆயுதம். இருபுறமும் வாள் போல் கூர் கூரான முட்கள் இருந்தன. முட்கள் இரும்பை விடக் கெட்டியாயிருந்தன. இந்திரனுடைய வஜ்ராயுதம் இப்படித்தான் இருக்கும்போலும்!

"இது என்ன ஆயுதம்? எதனால் செய்தது?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இது ஒரு மீனின் வால்! இந்த மண்டபத்தில் குடியிருந்த சிறுத்தை என்மீது பாய வந்தபோது இதனால் அடித்துத்தான் அதைக் கொன்றேன்!" என்றாள் பூங்குழலி.

(தொடரும்)

மானிடர்கள் விரும்பும் பரிமளத்திற்கு

காஷ்மீர் புக்கே

சாமான்களை உபயோகியுங்கள்





காஷ்மீரோடுகூடிய புதுமைக்கும், இன்பந்தரும் மிருதுத் தன்மைக்கும், நீடித்த இனிமைக்கும் காஷ்மீர்புக்கே டால்கம்பவுடரை உங்கள்மேலே தூவுங்கள். அது வியர்வையை உறிஞ்சிவிடும்.... அரிப்பு, எரிச்சலை அடக்குகிறது ... உங்களை குளுமையுடனும், நறுமணத்துடனும், நாள் முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.


இன்றே ஒருடின் காஷ்மீர் புக்கே டால்கம் பவுடரை வாங்கி வீட்டிற்கு எடுத்துச்செல்லுங்கள்!

காஷ்மீர் புக்கே டால்கம் பவுடர்

1806-ம் வருஷத்திலிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்கு பேர்போனது.

ப்ரூக் லாக்ஸ்

சாக்லெட்மலமிளக்கி



உங்கள் ஆரோக்கியத்திற்கு வேண்டிய முதல் தரமான பேதி மருந்துமாத்திரைகள். சிகப்பு டப்பியில் கிடைக்கும் ப்ரூக்லாக்ஸையே வாங்கவும்.

3, 8, 24. அடங்கிய வாட்டமான கேஸ்களில் கிடைக்கும். பெரிய கேஸ் வாங்குவது மிகவும் சிக்கனமானது.

ஒரே இரவில் மலச் சிக்கலை அறவே அகற்றுகிறது.

WL-2-A

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜன்டுகள்:
மெஸர்ஸ். ஓரியன்டல் மெர்கன்டைல் ஏஜன்ஸீஸ் 99-A, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

36. சில சந்தேக விளக்கம்

ஆசனம் பழகுபவர்கள் புகை பிடிக்கலாமா? வெற்றிலைப் பாக்குடன் புகையிலை போட்டுக் கொள்ளலாமா! இவைகள் பல அன்பர்களின் முக்கிய கேள்விகளாகும்.

மிக மிக முக்கியமான கேள்விகள்தான். விடையை ஒரே வார்த்தையில் 'கூடாது' என்று சொல்லி விடலாம். ஆனால், மதியை மயக்கும் வஸ்துக்களாகிய கள், சாராயம், கஞ்சா முதலியவைகளுடன் புகையிலையும் சேர்ந்ததுதான். ஆரோக்கிய விதிகளில் புகையிலைப் பழக்கம் கூடாது என்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஜனங்களில் பெரும்பாலோர் புகையிலை சம்பந்தப்பட்ட வஸ்துக்களை, ஏதாவது ஒரு ரூபத்தில் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலிய புகை பிடிக்கும் வஸ்துக்களாகவும், சிலர் வெற்றிலையுடனும், சிலர் பொடியாகவும் உபயோகப் படுத்துகின்றனர்.

இவைகள் என்ன அப்படி ருசியில் மிகுந்ததா! இனிப்பானதா! மணம் மிகுந்ததா! குணத்தைக் கொடுக்கக் கூடியதா! என்று ஆராய்ந்து பார்த்தால், எப்படிப் பார்த்தாலும் இல்லையென்ற விடையே கிடைக்கும். மதுவையும், கள்ளையும் பருகி வந்தார்களே அது என்ன, ருசியானதா! வாசனையுள்ளதா! உடம்புக்குத் தான் நல்லதா! ஒன்றுமே கிடையாது.

பின் ஏன் உபயோகிக்கிறார்கள்! அதில் ஒரு வித லாகிரியைக் கொடுக்கும் விஷத்தன்மை இருக்கிறது. அதை உபயோகித்தவுடன் அது உள்ளே சென்று கிண்டி விடுகிறது. எல்லா அவயவங்களும் சுறுசுறுப்பெய்தி வேலை செய்கிறது. ஆனால் அதன் வேகம் அடங்கினவுடன், யோசிக்கவும் சக்தியற்றுப் போகிறான். உடனே அவன் வழக்கமாய் உபயோகப் படுத்தும் ஏதாவது ஒரு லாகிரியை உபயோகித்தால் தான் அவன் பழையபடி இருக்க முடியும். இம்மாதிரி வாழ்க்கையெனும் குதிரையை லாகிரிச் சவுக்கால் அடித்து அடித்து விரட்டி ஓட்டுகிறார்கள்.' சிலருடைய குதிரை அடி பொறுக்க முடியாமல் படுத்துக் கொண்டால் ஆச்சரியப் படுவதற்கில்லை அல்லவா!

முன்பெல்லாம் பெரியோர் முன் புகை பிடித்தல் மரியாதைக்குறைவாய் மதித்து வந்தார்கள். இக்காலத்தில் தன் சுயமரியாதையை அளக்கும் அளவு கோலாக இதை உபயோகிக்கிறார்கள். யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, இவர்களின் சுயமரியாதையைக் காட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். அது தவிர, இவை இப்பொழுது ஒரு மரியாதைக்குரிய பொருளாகவும் மாறி விட்டன. முன்பெல்லாம் வருபவர்களுக்கு வெற்றிலை பாக்குத்தான் வைப்பார்கள். இப்பொழுது சிகரெட் கொடுத்தால் போதும். நல்ல வேளை, இந்தப் பழக்கம் நமது பெண் மணிகளைப் பற்றவில்லை. நாலு நண்பர்கள் கூடும் இடத்தில், யாராவது ஒருவர் புகைக்க விரும்பினால், மற்றவர்களுக்கு மிக மரியாதையாய்த் தன் சிகரெட் பெட்டியைத் திறந்து காண்பிப்பார். பழக்க முள்ளவர்கள் வெகு நாசுக்காய் எடுத்துக் கொள்வார்கள். பழக்கமில்லாத ஆசாமியாய் இருந்தால் முகத்தில் அசடு வழிய வேண்டாம் என்று சொல்லுவார்.

என்னே நாகரிகம்! இப்படியும் ஒரு கதி நம்மவர்களுக்கு ஏற்பட வேண்டுமா! நம் ஆசாரம் எங்கே! அனுஷ்டானங்கள் எங்கே! மட்டு மரியாதை எங்கே! பெரியார் சிறியார் எங்கே! ஆரோக்கிய விதிகள் எங்கே! எதைச் சொல்லி எப்படி ஆற்றுவது! மூச்சு விடுவதற்கு ஆண்டவன் படைத்த மூக்கை, புகை போக்கிக் குழாயாக்கிக் கொள்கிறார்களே! இவர்கள் எப்பொழுதும் நினைத்த மாத்திரத்தில் வாயில் அக்னி வளர்த்து வேள்வி செய்து விடுகிறார்கள். இவர்களது நுரை ஈரல் அதனால் என்ன பாடு படுகின்றதோ!

பெருச்சாளியைப் பிடிக்கப் பானையில் வைக்கோல் போட்டு நெருப்பு வைத்துப் பொந்தில் வைத்து விடுவர். பெருச்சாளி புகைக்குத் திணறிக் கண் தெரியாமல் வெளியில் வந்து விடும். அதைப்போலப் புகை பிடிப்பவர்களின் உயிர், 'எப்பொழுது வெளியில் வரலாம்' என்று உள்ளே இருக்கப் பிடிக்காமல் தத்தளித்துக்கொண் டிருக்கும்.

வந்தவர் (கோபத்துடன் ஹோட்டல்காரரிடம்):— ஏன் ஸார், ஸ்டேஷனிலிருந்து உங்கள் ஹோட்டலுக்கு வருவதற்கு ஐந்து நிமிஷம்தான் ஆகும் என்று பத்திரிகையில் விளம்பரம் செய்திருக்கிறீர்கள். எனக்கு ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆயிற்றே! என்னத்துக்காக இப்படிப் புளுகி யிருக்கிறீர்கள்?

ஹோட்டல்காரர்:— ஓகோ! நீங்கள் ஸ்டேஷனிலிருந்து நடந்து வந்தீர்களாக்கும்! மோட்டார் காரில் வருபவர்களுக்குத் தானே அந்த விளம்பரம் செய்திருந்தோம்!



அதிகப் பழக்க முள்ளவர்களுக்குச் சற்று வய தானதும் ஈளை இருமல் போல லொக், லொக் என்று இருமல் வந்து விடும். அதற்கு ஒரு மருந்தும் கிடையாது.

ஒரு டாக்டர் நண்பர், சமீபத்தில் ஒரு ரகஸ்யத்தைச் சொன்னார். "உங்களைப் பார்க்கும் போதெல்லாம் இந்தப் புகைப் பழக்கத்தை விட்டு விட வேண்டும் என்று உறுதி செய்து கொள்கிறேன். ஆனால் இருக்க முடிவதில்லை. அது மட்டுமல்ல. ஒரு பெரும் ரகஸ்யத்தை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். இந்தப் புகைப் பழக்கம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் இருக்கிறதோ, அவ்வளவிற்கும் நரம்புகள் உணர்ச்சி அற்றுப் போகும். இல்லறத்தில் இன்பம் காண முடியாது. மனைவிமார்கள் கஷ்டப்பட மாட்டார்கள்" என்று சொன்னார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என்ன பயங்கரமான உண்மை! இதை எழுதவும் கூசுகிறது. "எத்தனையோ பேர் இப் பழக்கங்களில் மூழ்கி இருக்கிறார்களே! இவர்களுக்கெல்லாமே இக்கதி நேரிடுகிறதா!" என்றேன். "வாலிப முறுக்கில் தெரியாது. நாற்பது வயதானால் அதன் குணம் தெரியும். சிலருக்கு இன்னம் சீக்கிரமும் தெரியும்" என்றார்.

வாலிப அன்பர்களே விழியுங்கள்! இளங் காளைகளே, வேண்டாம் இந்தத் தீய வழக்கம்! வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்! விளையாட்டாகவும், வேடிக்கையாகவும் நாகரிகமெனக் கருதியும் இம்மாதிரி தீய வழிகளில் செல்லாதீர்கள். அழிவுக்கு ஒரு பக்கம் குழி தோண்டிக் கொண்டு, ஆக்கத்திற்காக லேகியங்கள், டானிக்குகள் அருந்துவதில் யாது பயன்!

எத்தனையோ நண்பர்கள் இதை விட முடியவில்லையே! என் செய்வது என்கின்றனர். எப்படியோ இவ் வழக்கம் பற்றிக் கொண்டது. விட முடியவில்லை. விட்டால் சுறு சுறுப்பு ஏற்படவில்லை என்கின்றனர். ஆம், வாஸ்தவம். இவர்களுக்கு வேண்டியது சுறுசுறுப்புத் தானே! அது ஆசனம் செய்தால் கிடைத்து விடுகிறது. புகையிலைப் பழக்கமுள்ளவர்களும் ஆசனம் ஆரம்பிக்கலாம். ஆசனம் அபிவிருத்தி ஆக ஆக இவ்வழக்கங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும். தானாகவே குறைத்துக் கொள்ளச் செய்யும். ஆனால் அவர்கள் அவ் வழக்கத்தை அறவே விடும் வரை சிரசாசனம் மட்டும் கட்டாயம் செய்யவே கூடாது.

ஒரு அன்பர் ஆசனம் கற்றுக் கொண்டு சென்றார். சில மாதங்களுக்குப் பின் அவரைச் சந்தித்தேன். "இப்பொழுது உடல் எப்படி இருக்கிறது! ஆசனம் செய்கிறீர்களா!" என்று கேட்டேன். "இல்லை. ஆசனம் பழகுவதை நிறுத்தி விட்டேன். சிரசாசனம் செய்து ஒரு நாள் கீழே இறங்கினேன். மூக்கிலிருந்து சளசள வென்று ரத்தம் கொட்டிற்று. சிரசாசனத்தினால்தான் அப்படி உண்டாயிற்று என்று பயந்து நிறுத்தி விட்டேன்!" என்றார். பழி ஓரிடம். பாவம் ஓரிடம். ஆசனத்தின்பேரில் பழி சுமத்தி விட்டார். "நீங்கள் ஏதாவது புகை பிடிப்பதுண்டா!" என்று கேட்டேன். "ஆம், நான் ஒரு நாளில் 3, 4 சிகரெட் பெட்டிகளைக் காலி செய்வேன்" என்றார். முதலில் இது



"டேய், சீக்கிரம் சினிமாவுக்குக் கிளம்புடா! 'க்யூ' வரிசையில் முன்னால் நின்றால் தான், எல்லாருக்கும் முன்னாலே டிக்கெட் வாங்கிக் கொண்டு போகலாம்!"

"கடைசியில் நின்றால் கூட முன்னால் போகலாம்!"

"அது எப்படி?"

"கடைசியில் நின்றால் டிக்கெட் கிடைக்காமல் வீட்டுக்கு முன்னாலே போகலாம் அல்லவா?"

தெரிந்திருந்தால் சிரசாசனம் சொல்லித் தந்திருக்கவே மாட்டேன். பிறகு யார் வந்தாலும் இந்தக் கேள்வியைக் கேட்டுத்தான் சிரசாசனம் சொல்லிக் கொடுக்கிறேன்.

ஏற்கனவே புகையை மூக்கின் வழியாய் விட்டு விட்டு, பலவீனப் பட்டு நலிந்து மெலிந்திருந்த மூக்கின் நரம்புகள், சிரசாசனத்தில் ரத்தம் அதிகம் அந்த இடத்திற்கு வரவே, நரம்புகள் புடைத்து வெடித்து விட்டிருக்கிறது. இம்மாதிரி சாதாரணமாய் யாருக்கும் வராது. புகை வழக்க முள்ளவர்களுக்குத்தான் வரும். இம்மாதிரி புகையிலையைப் பற்றி எவ்வளவோ எழுதிக் கொண்டு போகலாம். இதில் இடங் கொள்ளாது. ஒரு சிறு துண்டுப் புகையிலையில் இருக்கும் நிகோடைன் விஷம் ஒரு யானையைக் கொல்லப் போதுமானதாகும். அப்பேர்ப்பட்ட விஷ வஸ்துக்களை மனிதன் அருந்தித் தன்னையே குறைத்துக் கொள்கிறான். ஆகவே ஆசனப் பழக்கமுள்ளவர்கள் எந்தவிதமான லாகிரி வஸ்துக்களையோ, புகையிலை வஸ்துக்களையோ கட்டாயம் உபயோகிக்கக் கூடாது.

இன்னும் சில அன்பர்கள் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவ்வப்பொழுது அந்தந்த ஆசனங்களைப் பற்றி எழுதும்பொழுது எழுதுகிறேன். பொதுவாக ஆசனம் பழகும் ஒவ்வொரு அன்பர்களும் புகை குடித்தல், புகையிலை போடுதல், அடிக்கடி காப்பி குடித்தல் முதலிய தீப்பழக்கங்களைக் குறைத்துக் கொண்டே வந்தால் ஆசனம் போடுவதின் பலனை இன்னும் வெகு சீக்கிரத்தில் அடையலாம். விடாமல் ஆசனப் பயிற்சி செய்வதுடன் மேற்கூறிய கெட்ட வழக்கங்களையும் முயற்சி செய்து விட்டு விட்டால் கட்டாயம் ஆரோக்கியமாக வாழலாம். டாக்டரின் உதவியின்றி வாழலாம். (தொடரும்)

எத்தனை நிலம் வேண்டும்?

நம் நாட்டின் ஜனத்தொகையில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் விவசாயிகள். வேறு எந்த நாட்டிலும் இந்த நிலைமையில்லை. விவசாயிகள்தான் கண்கண்ட தெய்வம். நமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களும் அவர்களே. அவர்கள் க்ஷேமடைந்தால் தேசம் சுபிட்சமடையும்.

ஒரு பிரிட்டிஷ் விவசாயி 26 ஏக்கர் பயிரிடுகிறான். கனடாக்காரன் 140 ஏக்கர் பயிரிடுகிறான். ஆனால் நம் சகோதர விவசாயியோ நான்கு ஏக்கர்தான் பயிரிடுகிறான்.

விளைச்சல் விஷயத்திலும் நாம் பிற்போக்கிலேயே இருக்கிறோம். பிரிட்டனில் 2,000 பவுண்ட் தானியம் ஏக்கருக்கு விளைகிறது. நம் நாட்டிலே 590 பவுண்ட் தானியம்தான் ஒரு ஏக்கருக்கு விளைகிறது.

எகிப்தில் ஏக்கருக்குச் சராசரியாக 450 ராத்தல் பருத்தி எடுக்கிறார்கள். அமெரிக்காவில் 200 ராத்தல் கிடைக்கிறது. ஆனால் நம் நாட்டில் 93 ராத்தல்தான் விளைகிறது.

கரும்பு விளைச்சலிலும் நாம் பிற்போக்கிலேயே இருக்கிறோம். ஜாவா நாட்டில் ஏக்கருக்கு 40 டன் கிடைக்கிறது. நம் நாட்டிலோ 10 டன் தான் கிடைக்கிறது.

இம்மாதிரியான குறைபாடுகளுக்குக் காரணம் யாது? நமது நிலங்கள் மோசமானவைகளா என்று பார்த்தால் அப்படியும் தெரியவில்லை. காரணம் விவசாயிகளின் படிப்பின்மை, பட்டினி, அறிவின்மை, பல விவசாயிகளுக்குச் சொந்த நிலமில்லாமை முதலியவைகள் தான்.

ஒரு விவசாயி சுகமாக வாழக் குறைந்தது 20 ஏக்கர் நிலமாவது வேண்டும்.

நாம் இன்று பேசுவதை யெல்லாம் காரியத்தில் செய்தால் நாமும் பிற நாட்டாரைப் போல் வளர்ச்சியுறலாம். இதற்கு நாம் செய்ய வேண்டுவது யாது? கூட்டுறவுப் பண்ணை முறையைக் கையாண்டு தலைக்கு 20 ஏக்கரா நிலங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

அந்த 20 ஏக்கரா நிலமும் தனி மனிதனுக்கென்று சொந்தமாக விற்கும்படியாகவோ அடகு வைக்கும்படியாகவோ இருக்கக்கூடாது. அரசாங்கத்துக்கே அந்த நிலங்கள் எல்லாம் சொந்தமாக இருக்க வேண்டும்.

சிங்காநல்லூர்
2—5—51

ஜி. ஸ்ரீநிவாஸ்

★

நம் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் முக்கியமாக விவசாயிகள். நிலச்சொத்துக்கு ஒரு குறிப்பிட்ட வரையறை செய்வதை முழு மனதுடன் ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. 'ஒரு மனிதன் இவ்வளவுதான் நிலம் வைத்துக் கொள்ளலாம்' என்று சட்டம் ஏற்படாதவரை விவசாயத்தையே நம்பி உயிர் வாழும் எண்ணற்ற ஏழை இந்தியக் குடியானவர்களுக்கு விமோசனம் இல்லை. ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் இருந்த போதிலும் போதுமென்ற மனப்பான்மையில்லாத மிராசுதார் வர்க்கம் மேலும் மேலும் தங்களின் உடைமையை விஸ்தரிக்கத்தான் விரும்புவார்கள். அவர்களின் அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் அடி பணிந்து தங்களுக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச நிலத்தையும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்து விட்டுப் பிழைக்க வகையின்றித் திண்டாடும் விவசாயிகள் அநேகர் இந்நாட்டில் இருக்கத்தான் செய்கின்றனர்.

எனவே, பர்மா, காஷ்மீர் முதலிய நாடுகளில் செய்ததுபோல் நம் நாட்டிலும் 'தனி மனிதன் ஐம்பது ஏக்கரா நிலத்துக்கு மேல் வைத்திருக்கக் கூடாது' என்று சட்டம் செய்யவேண்டும்.

அதிக நிலம் இருந்தால்தான் நவீன முறையில் சாகுபடி செய்யலாம் என்று சிலர் விவாதிக்கலாம். ஏன், நாற்பது ஐம்பது ஏக்கரா நிலத்தை நவீன முறையில் சாகுபடி செய்யக் கூடாதா? என்ஜினும் பம்பும் வைத்து நீர்ப்பாசனம் செய்வதாயிருந்தாலும் பத்து ஏக்கரா நிலம் போதுமே!

"சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள் முதலியன தங்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களுக்கு நம் நாட்டு விவசாயத்தையே நம்பியிருக்கின்றன. மூலப் பொருள்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க வேண்டுமானால் அவை பரந்த அளவில் பயிரிடப்பட வேண்டும்; நில வரையறை இருந்தால் இது பாதிக்கப்படும்" என்று சிலர் கூறலாம். அவர்களின் கூற்று சரியல்ல என்பது என் அபிப்பிராயம். கரும்பு, வேர்க்கடலை விவசாயத்தில் உலகத்தில் முதன்மை ஸ்தானமும், பருத்தி, சணல் முதலியவற்றில் இரண்டாவது ஸ்தானமும் வகிக்கும் இந்தியாவில் மேற்கூறிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் பஞ்சமாகிவிடும் என்று கூறுவதில் அர்த்தமேயில்லை. பரந்த அளவில் 'டிராக்டர்' முதலிய நவீன ஆயுதங்களைக் கொண்டு சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்கிப் பஞ்சக் குறையைப் போக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமுடையவர்கள் தங்களைப் போன்ற ஒரு சிலரைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு செய்யலாமே!

காக்கிநாடா
30—4—51

எஸ். கருப்பையா

★

பாரத நாடு விவசாய நாடு. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலோர் குடியானவர்கள். இவர்களின் ஒரே தொழில் உழுது பாடுபடுவதே. ஆனால் பாடுபட்டதன் பலனை அவர்கள் அநுபவிப்பதில்லை. பாடுபட்டும் பட்டினியாகவே காலம் கழிக்கிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. எல்லாவற்றிலும் முக்கியமானது குடியானவர்களுக்குச் சொந்த நிலம் கிடையாததுதான். அவர்கள் மிராசுதார்களிடம் கூலிக்கு உழைக்கிறார்கள். கூலி உழைப்புக்குத் தக்கபடி கிடைப்பதில்லை. கொஞ்ச நஞ்சம் நிலமுள்ள குடியானவர்களுடைய நிலைமையும் இதுமாதிரிதான் இருக்கிறது. பாசனமழை இல்லாததாலோ அல்லது வேறு காரணத்தாலோ விளைவு நஷ்டமாகி விடுகிறது. பிறகு அடுத்த சாகுபடிக்காக விதை, உரம் முதலியவை வாங்குவதற்குப் பணமில்

லாது கடன் வாங்கிப் பயிரிடுகிறார்கள். பிறகு குறித்த சமயத்தில் கடனைத் திருப்பிக் கொடுக்க நிலத்தையே விற்கும் நிலைமை வந்துவிடுகிறது. பிறகு அந்தக் குடியானவர்கள் மிராசுதாரர்களிடம் கூலி வேலை பார்க்க ஆரம்பிக்கிறார்கள்.

உழுது சாகுபடி செய்வதே தொழிலான குடியானவர்கள் நிலச் சொந்தக்காரர்களானால் அவர்கள் விவசாயம் செய்வதில் அதிகம் கவனம் செலுத்துவார்கள். உணவு உற்பத்தியும் அதிகரிக்கும். இந்தக் குடியானவர்கள் தானியத்தைச் சேர்த்து வைத்து அதிக விலைக்கு விற்கவும் மாட்டார்கள். அப்படிச் செய்யவும் அவகாசம் கிடையாது. ஏன் என்றால் குடும்பச் செலவுக்கும் மற்றபடி தேவைக்கும் வேண்டிய பணம் அவர்களிடம் தனியே கிடையாது. ஆகையால் தானியத்தை விற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இரண்டாவது, எல்லாக் குடியானவர்களிடமும் தானியம் இருக்கும் பொழுது அதிக விலைக்குப் பொது ஜனங்கள் வாங்கவும் மாட்டார்கள். தன்னுடைய நிலம், இதில் எவ்வளவு பாடுபட்டாலும் அதன் பலனை தன் குடும்பம்தான் அனுபவிக்கப் போகிறது என்றால் அந்தக் குடியானவர்கள் ரொம்ப சிரத்தையுடன் வேலை செய்து அதிக உற்பத்தி செய்வார்கள். விவசாயத்தைத் தவிர வேறு வேலை இல்லாத விவசாயிகள் அதிக கவனத்தோடு அதிக வேலை செய்வார்கள்.

ஆகையால் நிலங்கள் குறைந்த எண்ணிக்கையுள்ள ஜமீன்தார்களிடம் இருப்பதை விடக் குடியானவர்களிடம் இருப்பதுதான் நல்லது.

சென்னை
3—5—51 கே. மகாலிங்கம்

★

பயிரிடும் நிலங்கள் சில தனிப்பட்ட நபர்களின் ஏகபோக உரிமையாயிருப்பதால் விவசாயத் தொழிலில் ஈடுபட்ட மக்கள் தங்கள் உழைப்பின் பலனை முழுதும் அனுபவிக்க முடியாமல் போகின்றது. அதிக நிலமுடையவர்கள் விவசாயக் கூலிகளுக்கு (குத்தகை, வாரம், பண்ணை இந்த முறையில் தொழில் செய்வோர்) நியாயமான கூலி கொடுப்பதில்லை. வாழ்க்கை நடத்துவதற்குப் போதிய வருமானமில்லாத தொழிலில் எவனும் தன் உழைப்பைக் கொடுக்க விரும்ப மாட்டான். இந்நிலையில், கிராமிய ஏழை விவசாயி நகர்ப்புறத்துத் தொழிலாளியாக மாறிவிட வேண்டுமென்று விருப்பங் கொள்வதில் வியப்பென்ன! இதனாலும் பயிர்த் தொழில் அபிவிருத்தி பாதிக்கப் படுகிறது.

நிலங்கள் தனிப்பட்ட சிலருடைய சொத்தாக இருப்பதில் மற்றொரு தீங்கு, மக்களின் உடனடியான — அவசியத் தேவையைப் புறக்கணித்து விட்டு, லாபம் தரத்தக்க பொருள்களையே உற்பத்தி செய்வதுதான். உதாரணமாக, நெல் விளையும் நிலத்தில், அதிக லாபமில்லையென்பதற்காகக் கரும்பு பயிரிடப் படுகிறது. எதுவுமே மக்களின் தேவையை அனுசரித்து அதற்கென்று திட்டமிட்டு உற்பத்தி செய்யப்படுவதில்லை.

நம் நாட்டில் பயிரிடுவதற்குத் தகுதியான பல லட்சம் ஏக்கரா நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இவற்றைக் கூட்டுறவுப் பண்ணை முறையில் நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்து நவீன விவசாய சாதனங்களைக் கொண்டு பயிரிடச் செய்ய வேண்டும்.

இன்றைய நம் நாட்டின் பொருளாதார நிலையில், அதிகமான அளவிற்கு நவீன யந்திர சாதனங்களை அளிக்க முடியாது. என்றாலும் நீர்ப்பாசன வசதிக்காக, மேடு தட்டிப்போன கண்மாய்கள்—ஏரிகள் இவற்றை உடனடியாக மராமத்து செய்து, கால்நடை அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தினால் சுலபமாக இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காண முடியும்.

நிலம் சமுதாயப் பொதுவாக இருக்க வேண்டும். உழைப்பவர்களின் சக்தி திறமைக்கேற்ற வாறு நிலத்தைப் பங்கிட்டு செய்து விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு விவசாயிக்கும் தலைக்குக் குறைந்த பட்சம் 12 ஏக்கரா நிலம் இருக்க வேண்டும். அதிகபட்சம் 30 ஏக்கராக்களுக்குமேல் இருக்கக் கூடாது. இந்த அடிப்படையில் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டால், இன்று அமெரிக்காவையும், சைனாவையும், பர்மாவையும் உணவு கேட்டு நிற்கும் நம் நாட்டின் அவலநிலை மாறுமென்பதே என் திடமான அபிப்பிராயம்.

மன்னடி
30—4—51 ந. பரஞ்சோதி

★

விவசாயிகளில் பெரிய நிலச் சுவான்தார், நடுத்தர விவசாயிகள், சிறிய துண்டு நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள், விவசாயக் கூலிகள் என்று பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 1,000 ஏக்கர்களுக்குமேல் வைத்துக் கொண்டிருப்பவர்கள் பெரிய நிலச் சுவான்தார்கள். இந்த ரக விவசாயிகளில் 100-க்கு 90 பேர் தங்கள் பூமிகளைத் தாங்களே சாகுபடி செய்யாதவர்கள். குத்தகைக்குக் கொடுத்தோ, வார சாகுபடிக்குக் கொடுத்தோ பணம் பெறுகிறார்கள். பலர் பட்டணங்களில் வசித்துக் கொண்டு சுகபோகிகளாய்ப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் அரசியல் விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பவர்கள் சிலருக்கும் தங்கள் பூமிகள் எங்கிருக்கின்றன, அவைகள் என்ன நிலைமையில் இருக்கின்றன என்பதுகூடத் தெரியாது. இதனால் பூமிகளைச் சீர்திருத்துவதிலும் மழையால் 'அரிபாடுகள்' ஏற்படாமல் பந்தோபஸ்து செய்வதிலும் அக்கறை கொள்வதில்லை. இவர்களுடைய குறிக்கோள் எல்லாம் தங்களுக்கு வரவேண்டிய குத்தகைப் பணமும் வாரத் தொகையும் வசூலாகிறதா என்பதுதான். குத்தகைக்குச் சாகுபடி செய்பவர்களோ பூமிகளுக்கு எரு விடுவதிலோ நிலத்தைப் பண்படுத்துவதிலோ அக்கறை கொள்வதில்லை ஏனென்றால் அடுத்த வருஷமே தான் சாகுபடி செய்யும் பூமி தனக்கே இருக்கும் என்ற நிச்சயமில்லாதது தான். இதன் பலனாக நாளடைவில் உற்பத்தி குறைந்து இருதரப்பினரும் பலனடையாமல் அதிக சேதம் ஏற்படுகிறது.

பெரிய நிலச் சுவான்தார்களிடம் உள்ள நிலங்களைத் திடீரென்று பறிமுதல் செய்வதென்பதும் சாத்தியமல்ல. தேசத்தில் குழப்பமும் அமைதியின்மையையும் உண்டாக்கும். ஆகையால் நீண்டகாலத்திற்கு ஒரு நியாயமான

குத்தகைக்கு விட்டு விடும்படி யோசனை கூறி அம்மாதிரி செய்வதற்கு வசதியாக சட்டமும் செய்தால் உழுபவனுக்குப் பூமியில் சிரத்தை ஏற்படும். நிலச்சுவானுக்கும் நிச்சயமாக குத்தகை கிடைக்கும். இதனால் உற்பத்தி பெருகுவதுடன் சிறு விவசாயிகளுக்கெல்லாம் வேலையும் கிடைக்கும்.

நடுத்தர விவசாயிகள்தான் விவசாயத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள். இவர்களில் பலர் 50 ஏக்கர் நிலமுள்ளவர்கள். இவர்கள் தம் பூமிகளைச் சொந்தத்தில் சாகுபடி செய்பவராக இருந்தால் எரு விடுவதிலும் பூமிகளைப் பண்படுத்துவதிலும் சிரத்தை கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த தரமுள்ள விவசாயிகளால் நல்ல உற்பத்தி ஏற்படுகிறது. இம்மாதிரி குடும்பங்களுக்குச் சகஜமாக ஒரு கஷ்டம் ஏற்படுகிறது. கொஞ்ச காலத்தில் மேற்படி சொத்துக்கள் பாகம் செய்யப்பட்டு விவசாயத்துக்கு லாயக்கில்லாத துண்டு நிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒருவரும் சாகுபடி செய்ய லாயக்கில்லாமல் போய் விடுகிறது. ஆகையால் 50 ஏக்கர் நிலமுள்ள நடுத்தர விவசாயக் குடும்பங்கள் பாகம் செய்துகொண்டு நிலங்களைத் துண்டு துண்டாகப் பிரிக்காமல் ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் ஒரு நபருக்கு அதிக பட்சம் 50 ஏக்கராவுக்கு மேல் நிலமும் இருக்கக் கூடாது.

சூரியநல்லூர்
1—5—51 சிவசுப்ரமணியம்

★

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை
செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்"

என்ற அமரகவி பாரதியாரின் பாடலை இசைத்தட்டிலே கேட்டு இன்புறுகிறோம். ஆனால் அப்பாடலின் கருத்துப்படி இன்று நாட்டிலே நடைபெறுகிறதா! இல்லை. உழைத்து உழைத்து உருக்குலைந்து போன உழவன் உதாசீனப்படுத்தப் படுகிறான். உண்ண உணவில்லாமல் உலர்ந்த வயிறும் குழி விழுந்த கண்களுடனும் காட்சியளிக்கிறான். அதே சமயத்தில் அந்த விவசாயியின் வியர்வையினால் உயர்ந்தவன் ஆக்கப்பட்ட நில முதலாளிக்குச் சமுதாயத்திலே உயர்ந்த நிலை. கள்ள விலைக்கு நெல்லை விற்கும் அந்தக் கல் நெஞ்சக் கூட்டத்திற்குப் பட்டம் பதவிகள் வேறு கிடைக்கின்றன.

கம்யூனிசம் பரவ விடாமல் தடுக்க வேண்டுமானால் நிலங்கள் தனி நபர்களிடம் குவிந்து கிடப்பதை அனுமதிக்கக் கூடாது. ஒரு தனி நபர் 10 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கலாகாது என்ற சட்டம் அவசியம். காஷ்மீர், பர்மா முதலிய நாடுகளைப் போல் தனி நபர் 50 ஏக்கர் வைத்திருக்கலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தால் பெரிய நிலச் சுவான்தார்களை ஒழித்துக் கட்டிச் சிறிய சிறிய நில முதலாளிகளை வளர்ப்பவர்களாவோம். பாடுபட்டும் பலன் அடையாது குத்தகைக்கு விளைந்ததைச் செலுத்தி விட்டு இருக்கும் விவசாயிகள் சுலபமாகப் பொது உடைமைப் பிரசாரத்தில் மயங்கி விடுவார்கள். எனவே கம்யூனிசம் வளராமல் தடுக்க வேண்டுமானால் தனி நபர் 10 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்ற சட்டம் அவசியம்.

அதிக நிலம் இருந்தால்தான் நவீன முறையில் சாகுபடி செய்து உணவு உற்பத்தியைப் பெருக்கலாம் என்றால் நம் நாட்டில் எவ்வளவு உழவர்கள் நவீன முறையைப் பின்பற்றுகிறார்கள். நூற்றுக்கு ஒருவர்கூட நவீன முறையைக் கைக்கொள்வதில்லை. நவீன முறையில் விவசாயம் செய்யும் நிலை வந்து விட்டால் பத்துப் பதினைந்து நபர்கள் சேர்ந்து கூட்டுப் பண்ணை முறையில் தாராளமாக விவசாயம் செய்யலாம்.

தனி நபரிடம் ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலங்கள் இருப்பதால் உணவுப் பொருள்கள் ஏராளமாக அவர் சேகரித்துப் பதுக்கி வைக்க முடிகிறது. கள்ள விலையில் கூட அவரிடம் அதிக விலை கொடுத்து மக்கள் வாங்கவேண்டியிருக்கிறது. நிலங்கள் பலபேரிடம் சிதறியிருந்தால் உணவுப் பொருள் விலை அதிகமாகாது. நன்றாக அதிக உணவு உற்பத்தி செய்ய முடியும். கள்ளச் சந்தையும் மறையும்.

பெரியகுளம்
30—4—51 வி. தங்கவேலு

★

குறைவான நிலம் உடைய தனி மனிதனும், ஏராளமாகத் தேவைக்கு மேற்பட்டு நிலம் உள்ள மனிதனும், இரண்டு உபயோகமற்ற கோடிகளைக் குறிக்கின்றனர். தனி மனிதன் சிறு நிலத்தில் அதிகம் முயன்றாலும் பயன் தரக் கூடியதாக இராது. ஆனால் அவன் பெரிய நிலங்களுள்ள மிராசுதாராயிருந்தால், முதல் நிறையப் போட்டு, நவீன சாதனங்கள், விஞ்ஞான வசதிகளைக் கொண்டு, அதிகப் பயன் பெறலாம். ஆனால் அது ஏக போக உரிமை. செல்வம் ஓரிடத்திலேயே குவிகிறது. கட்சிப் பிரதி கட்சிகளும், சமத்துவமின்மையும் தாண்டவமாடும். இதைத் தடுக்க, நிலத்தை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பது, கழுவை விட்டுத் தொழுவில் மாட்டுவது போல்தான்.


ஆனால் இதற்கு வேறு வழி கிடையாதா எனில் உண்டு. வேறு அழகான, நேர்த்தியான வழி இருக்கிறது. மேனாட்டில் பொதுப் பண்ணை மூலம் வழி கண்டுள்ளனர். குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள குடியானவர்கள், இப் பண்ணைகளில் சேர்ந்து உழைக்க வேண்டும். விளைவு, வரவு, கூலி, பயன், லாபம் யாவும் அரசாங்கத்தின் கண்காணிப்பு. இம்முறையின்படி, தனி உடைமை கிடையாது; ஏக போக அமர்க்கள வாழ்வும் கிடையாது. இது நல்ல முறையானாலும், கண்டிப்பும், அரசாங்கத்தின் அதிகமான கெடுபிடியும், சில குறைகளாகத் தோன்றும். இருந்தாலும் இதில் லாபத்தை ஒருவனே கொள்ளை அடிக்க முடியாது. ஆகவே, இம்முறைதான் சிறந்தது. தனி மனிதனின் சிறு நிலத்தில் வீண் முயற்சியும் வேண்டாம்; அல்லது அதிக நிலம் பெற்று லாபம் சேர்க்கும் வர்க்கமும் வேண்டாம். பொதுப் பண்ணை முறையைக் கொண்டு, சமூகத்தைப் பலமுள்ளதாகச் செய்வோம்.

திருச்சிராப்பள்ளி
2—5—51 ஏ. ராஜலட்சுமி

புயல்

பி. பத்மராஜு

மொழிபெயர்ப்பு : எஸ். வி. எஸ்.





[அகில உலகச் சிறு கதைப் போட்டிக்காக 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை நடத்திய அகில இந்தியச் சிறு கதைப் போட்டியில் **இரண்டாவது பரிசு** பெற்ற கதை.]

மூலக் கதை : தெலுங்கு

வானத்தில் மேகம் கவிந்து இடியும் மின்னலுமாக, இருந்தது. மழை இப்போதே பெய்து விடுமோ, அல்லது இன்னும் கொஞ்ச நேரத்தில் பெய்துவிடுமோ என்றிருந்தது. இந்தச் சமயம் பார்த்து, ரயில் வண்டியும் ரொம்பவும் நேரங் கழித்து வந்தது. வண்டி வந்ததும் நம் ராவ் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் நுழைந்தார். நுழைந்ததும் நுழையாததுமாகத் தம்முடைய வீடு எவ்வளவு சுத்தமாகவும் நாகரிகமாகவும் இருக்கும் என்று நினைத்துக் கொண்டார். அத்துடன், அவர் படிக்கும் அறையிலிருந்த கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட அழகிய மேஜை, அந்த மேஜையின் மேல் ஒரு பக்கத்திலிருந்த பச்சை நிற மூடியணிந்த மின்சார விளக்கு, மெத்தை போட்ட நாற்காலி, (அந்த மெத்தைதான் இவர் உடல் கோணலுக்கும் பாரத்துக்கும் தகுந்தபடி எல்லாம், மெலிந்தும் பருத்தும் இருந்தது!) கொஞ்சமும் கலக்கமின்றி அப்படியே சோபாவில் படுத்துக் கிடக்கும் அவர்



மனைவி. அவருடைய தற்பெருமைக்குக் காரணமாக இருந்த இரண்டு புதல்வர்களும், இரண்டு புதல்விகளும்—இத்தனை பேரும் இத்தனை விஷயங்களும் அவர் நினைவுக்கு வந்தன. அவர் நுழைந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியிலிருந்த மூன்று இடங்(பெர்த்)களிலும் தங்கள் தங்கள் படுக்கைகளை விரித்து நாலு பேர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். ஆனால் நம் ராவுக்கு அந்த நாலு பேரைப் பார்ப்பதற்கு முன்பே அவர்களிடம் அவருக்கு ஒருவித அருவருப்பு உண்டாகி விட்டது. ஆகவே, அவர் இன்னொரு பெட்டியைத் தேடிக் கொண்டு போகலாமோ என்று சற்று யோசித்தார். ஆனால் அவருடைய சாமான்களை எடுத்து வந்த 'போர்ட்டர்' அவருடைய தோல் பெட்டியையும் குடையையும் மேல் தட்டில் வைத்து விட்டான். வண்டியும் நகரும் சமயம் ஆகிவிட்டது. அந்தக் கம்பார்ட்மெண்டில் உட்கார்ந்திருந்த ஒருவர் தம் படுக்கையைக் கொஞ்சமாக மடித்து ராவ் உட்காரும் அளவுக்கு இடம் பண்ணிக் கொடுத்தார். அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு உட்கார்ந்து, தம்மைச் சுற்றி என்ன என்ன சாமான்கள் இருக்கின்றன என்று கணக்கெடுக்கலானார்.

அந்தப் பெட்டியிலிருந்த நான்கு பேரும் வெகு தூரத்திலிருந்து வருபவர்கள் என்று பார்த்த மாத்திரத்திலேயே ராவ் தெரிந்து கொண்டார். அவர்களுடைய பூட்ஸ்கள் கீழே உள் பக்கமாகத் தள்ளப்பட்டிருந்தன. விதவிதமான கால் சட்டைகள், அந்தப் பெட்டியிலிருந்த மூலைகளில் மாட்டப்பட்டிருந்தன. அந்த நால்வரும் ஜன்னல்களை ஒட்டினாற் போலிருந்த இரண்டு இடங்(பெர்த்)களிலும் இரண்டு இரண்டு பேராக உட்கார்ந்திருந்தனர். உள்பக்கமிருந்த நீண்ட இடத்தில் ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் உட்கார்ந்திருந்தனர். அவர்களைப் பார்த்தவுடனேயே கணவன் மனைவியாகத்தான் இருக்க வேண்டும் என்று ராவ் தீர்மானித்தார். ராவுக்குச் சற்றும் பிடிக்காத சுருட்டுப் புகையே அந்தப் பெட்டி முழுதும் கவிந்து மூக்கைத் திணறச் செய்தது!

ரயிலில் பிரயாணம் செய்யும் போது, புகை பிடிக்கலாமா, கூடாதா என்பது பற்றி அவருக்கு ஒரு முடிவு கட்டிய அபிப்பிராயம் உண்டு. ஏன், பல விஷயங்களைப் பற்றி அவருக்குத் திட்ட வட்டமான அபிப்பிராயங்கள் உண்டு. இப்போது அவருக்கு ஐம்பது

வயதாகிறது. இந்த வயதில், அவர் தம் சென்ற கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தாரானால் பெருமையும் ஆத்ம திருப்தியும் அடையக் கூடும். அப்படி மிகக் கண்யமாகவும் சுறுசுறுப்பாகவும் வெற்றிகரமாகவும் வாழ்க்கை நடத்தியவர். அவர் வக்கீல் தொழில் புரிந்து வந்தார். எந்த இக்கட்டான நிலைமையிலும், முன்னறிவிப்பின்றிப் பேச வேண்டியிருந்தாலும் மிகச் சாமர்த்தியமாகப் பேசி நிலைமையைச் சமாளிப்பார் என்ற பெயர் அவருக்கு உண்டு. மேலும் அவருக்குத் தம் குரலிலேயே ஒரு ஈடுபாடு. இப்பொழுது தொழிலிலிருந்து விடுபட்டு ஓய்வு பெற்று வருகிறார். எனினும் பொது மேடைகளில் ஏறி ரொம்ப ரொம்பப் பேசத்தான் செய்கிறார். ஏன், இப்பொழுதுகூட ஆஸ்திகர்களின் சங்கம் என்ற ஒரு சங்கத்தில் பிரசங்கம் செய்யத்தான் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்.

திடீரென்று காற்று எழும்பி, அந்தப் பெட்டியின் ஜன்னல்களை விடாமல் சத்தப்படுத்திக் கொண்டேயிருந்தது. இருந்திருந்தாற் போல் உள்ளே எல்லாம் இருள் சூழத் தொடங்கியது. அதற்குள் சாயங்காலம் ஆகியிருக்க முடியாது — அப்படி இருள் கவிய. ராவுக்குப் பக்கத்திலிருந்தவர், தாம் படித்துக் கொண்டிருந்த துப்பறியும் நவீனத்தைச் சற்றுத் தாழ்த்தி ராவைப் பார்த்து. "ஸார், மணி என்ன இருக்கும்?" என்று கேட்டார். ராவ் ஒருகணம் யோசித்தார். ஆமாம், அவர் கையில் ஒரு கைக்கடியாரம் கட்டிக் கொண்டிருந்தார்; எனினும் ஒரு கணம் யோசித்துவிட்டு, கொஞ்சம்கூட அவசரப்படாமல், "மூன்று மணி இருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றார்.

"அதற்குள் இவ்வளவு இருட்டிவிட்டதே!" என்றார் அவர். ராவ் பதில் ஒன்றும் சொல்லாமல் அவர் முகத்தைப் பரிசீலனை செய்தார். ராவுக்கு என்ன வயதிருக்குமோ, அதே வயது தான் அவருக்கும். ஆகவே, ராவ் அவரைப் பார்த்து 'இந்த வயதில் கொலையும் குத்தும் நிறைந்த துப்பறியும் கதைகளைப் படிக்க எப்படித்தான் முடிகிறதோ' என்று வியந்தார். இந்த மனுஷன் உண்மையில் தம்மை விட, அதிக வயசானவர் போல் தோற்றமளிப்பதாக நினைத்தார்.

இப்பொழுது தம்மைப்பற்றி நினைத்துக் கொண்டார். தம்முடைய தேக ஆரோக்கியத்தை நினைத்துப் பெருமைப்





"நேற்றைக்கு 'லைப்ரெரி'க்குப் போயிருந்தேன். நீ எழுதிய புஸ்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தேன்!"

"பேஷ், தேவலையே! தேடிப் பிடித்து என் புத்தகமாக வாங்கி வந்தாயாக்கும்!"

"இல்லை, இல்லை! லைப்ரெரியில் வேறு எந்தப் புஸ்தகம் கேட்டாலும் 'வேறொருவர் எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்!' என்கிறான். உன்னுடைய புத்தகம் ஒன்றுதான் எப்பொழுதும் 'லைப்ரெரி'யில் இருக்கிறது!"

பட்டுக் கொண்டார். அவருடைய மனைவி அவரைவிட வயதானவள் போல் தோற்றமளித்தாள். ஆகவே, அவளை ஜனங்கள் ராவினுடைய தமக்கை என்றோ, ஏன் தாயாராகக்கூட இருக்கும் என்று நினைப்பதாகச் சொல்லுவதில் அவருக்கு ஒரு தனி உற்சாகம். உண்மையிலேயே இருபத்தைந்து வயதான மகனுக்குத் தந்தையாக இருக்கக் கூடியவர் என்று ராவைப் பார்த்தால் யாரும் நினைக்கமாட்டார்கள். தந்தையின் தொழிலை, தனயன் சமீபத்தில்தான் ஏற்றுக் கொண்டான். ஆமாம், உண்மையிலேயே ராவைப் போன்ற மனிதர்கள் இருப்பது அரிதுதான். அவ்வளவு நன்றாகத் தொழில் நடந்து கொண்டிருக்கும் போது, அந்த வயதில் ஓய்வு எடுத்துக் கொள்பவர்களின் தொகை வக்கீல்கள் உலகில் மிகமிகச் சொற்பம்தான்.

★

இதற்குள் எல்லா ஜன்னல் கதவுகளும் மூடப்பட்டன. வெளியில் காற்று 'உஸ்' 'உஸ்' என்ற பேர் இரைச்சலுடன் வீசிக்கொண்டிருந்தது. இலேசாக மழை கூடத் தூறத் தொடங்கிவிட்டது. அந்த மழை நீர் பெட்டியின் உள்ளும் வரத் தொடங்கியது. பெட்டிக்குள் இருந்த எல்லாச் சாமான்களும் சில்லிட்டு விட்டன. இளைஞன், அந்த இளமங்கையின் அருகில் நெருங்கி நெருக்கமாக உட்கார்ந்தான். ஆனால், அவள் அந்தப் பெட்டியிலிருந்தவர்களை ஒருமுறை சுற்றிப் பார்த்து விட்டு அவனை விட்டுச் சற்று நகர்ந்து உட்கார்ந்தாள்!

"வர வர ரொம்பவும் புழுங்குகிறதல்லவா?" என்றான் அந்த இளைஞன். ராவுக்குப் பக்கத்திலிருந்தவர் தமது புஸ்தகத்திலிருந்து முகத்தைத் தூக்கிப் பார்த்தார். அந்தக் கேள்விக்குத் தாம்தான் பதில் சொல்ல வேண்டும் என்று நினைத்தார். தம்மிடமிருந்து யாரும் பதில் எதிர்பார்க்கவில்லை என்பது தெரிந்தவுடன், மறுபடியும் படிக்கத் தொடங்கி விட்டார்.

இளைஞன் ஒரு சிகரெட்டை எடுத்துக் கொளுத்தினான். அந்த இள நங்கை முகத்தைச் சுளித்துக் கொண்டு அவனை விட்டுத் தூர விலகி உட்கார்ந்து கொண்டாள். இளைஞன் சிரித்து விட்டுப் புகை விடத் தொடங்கினான். அந்த நங்கை வெகு அழகாக ஆடைகள் அணிந்திருந்தாள். அவள் கன்னத்திலும், நெற்றியிலும் கூந்தலின் சில அழகிய சுருள் கற்றைகள் வெகு நேர்த்தியாக நர்த்தனமாடின. அவளைப் பார்த்ததும் ராவுக்குத் தம்முடைய குமாரிகளின் நினைவு வந்தது. அவர்களுடைய பழக்க வழக்கங்கள், மதாசாரங்கள், சாப்பாடு, சிநேகம், உடை எல்லாவற்றையும் ஸ்ரீமான் ராவ்தான் தீர்மானிப்பார். அவருடைய அபிப்பிராயத்தில் எது நேர்த்தியானதோ அழகானதோ அதைத்தான் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ராவுக்கு எதிரில் மூலையில் உட்கார்ந்திருந்தவர் தமது படுக்கையிலிருந்து ஒரு கம்பளிச் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டார். அந்தக் கம்பளிச் சட்டையும் பைஜாமாவும் அணிந்து அவர் அளித்த காட்சி, ராவுக்கு வெகு ஹாஸ்யமாக இருந்தது. நாடகத்தில் வரும் 'காமிக்' நடிகனைத் தோன்றியது! கிழவர் தமது பிளாஸ்கிலிருந்து கொஞ்சம் சூடான காப்பி எடுத்துக்குடித்தார். அதைப் பார்த்ததும், ராவுக்குத் தமது பெட்டியிலிருந்த பிளாஸ்கின் நினைவு வந்தது. அதில் 'ஓவல்டின்' கொண்டு வந்திருந்தார். அதை வெளியில் எடுத்தார். ஓவல்டின் என்றால் ராவுக்கு ரொம்பவும் பிரியம். அதற்காக அவர் ஒரு நாளைக்கு இரண்டு தடவைக்கு மேல் சாப்பிட்டது கிடையாது. அந்த இரண்டு தடவையில் ஒவ்வொரு தடவையும் ஒரு கோப்பைக்கு மேல் ஒருதுளி கூட அதிகமாக அருந்த மாட்டார்!

★

இப்பொழுது 'சோ' என்று மழை கொட்டத் தொடங்கி விட்டது. சுழன்று

சுழன்று அடிக்கும் காற்றின் பேர் இரைச்சலில் வண்டியின் சத்தம் அடங்கி விட்டது.

"புயல் அடிக்கிறாப் போலிருக்கிறது" என்றான் அந்த யுவன் தன் காதலியிடம். அவள் ஒரு கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டாளே தவிர பதில் ஒன்றும் சொல்லவில்லை. ராவ், இதென்ன மழையும் காற்றுமாக இருக்கிறதே என்று கவலை கொள்ளத் தொடங்கினார்.

போய்க் கொண்டிருந்த வண்டி சின்னஞ் சிறு ஸ்டேஷனில் நின்றது. அப்பொழுது அந்தப் பெட்டியின் கதவு இருந்திருந்தாற் போல் திறக்கப்பட்டது! திறந்த கணத்தில் பயங்கர வேகத்தில் காற்றும் மழையும் பெட்டிக்குள் நுழைந்தது.


ஒரு பெண் பிள்ளை, பாதி நனைந்தும் நனையாமலுமிருந்த கிழிந்த ஆடையில் உள்ளே நுழைந்தாள். உடனே 'உள்ளே வரக்கூடாது' என்று பெட்டியிலிருந்த அனைவரும் கத்தத் தொடங்கினர். ஆனால் அவள், கதவை நிதானமாகச் சாத்தி விட்டுத் தன் ஆடையிலிருந்து சொட்டுசொட்டு என்று தண்ணீர் சொட்ட ஒரு மூலையில் நின்றாள். அந்தக் கிழவர், "இது இரண்டாம் வகுப்புப் பெட்டி என்று உனக்குத் தெரியாது?" என்று கோபத்தில் எரிந்து விழுந்தார்.

"ஓ! தாத்தா! என் அன்பார்ந்த தாத்தா! ஒரு ஏழைப் பெண் பிள்ளை ஒரு ஓரமாக நின்று கொண்டு போகக்கூடவா சம்மதிக்க மாட்டீங்க! ஐயா, அன்பார்ந்த அப்பாமாரே! நாலு ஐந்து குழந்தைகளைப் பெற்ற தந்தைமாரே! இந்த ஏழைப் பெண் பிள்ளைக்கு ஒரு காலணா கொடுங்க அப்பா! பசியாலே, உயிர் போய்விடும் போலிருக்கிறதே! நீங்கள் எல்லோரும் பெரிய மனுஷங்க! செல்வம் படைத்த பணக்காரங்க! நீங்கள், இப்படி ஒரு ஏழைப் பெண் பிள்ளையைப் பசியாலே வாடி உயிர் துறக்க விடமாட்டீங்க என்பது எனக்குத் தெரியும்......"

ராவ் அவளைக் கூர்ந்து பார்த்தார். அவளுடைய கண்களில் ஒரு துடுக்குத் தனம் நிரம்பிய ஒளி மினுக் மினுக் என்று வீசியது. அது, அவர் உள்ளத்தில் ஒரு வெறுப்பை உண்டு பண்ணியது. அவளுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். அவள் அறுகலை உண்டு சாப்பிட்டவள் போல் காணப்படவில்லைதான். என்றாலும் பசியால் வாடி இறந்து விடுபவள் போல் நிச்சயமாகக் காணப்படவில்லை. அவள் தனக்கு இந்த உலகில் உதவி புரிபவர்கள் ஒருவருமே இல்லைபோல் நடித்தாலும் அவள் மிகுந்த தன்னம்பிக்கை யுடையவள் என்பது தெரிந்தது. ராவ் ஏழைகளைக் கண்டால் இரக்கப்படுவார்; சமுதாயத்தின் மூடக் கட்டுப்பாடுகளின் காரணமாகக் கஷ்டப்படுகிறவர்களைக் கண்டால் இரக்கப்படுவார். ஆனால் பிச்சை எடுத்தலைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. பிச்சை எடுத்தலை ஆதரிப்பது தவறான கொள்கை என்பது அவர் அபிப்பிராயம். ஆகவே, அவள் அவரை அணுகியபோது, தாம் அவளுக்குக் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாக முதல் தடவையே சொல்லிவிட்டார். ஆமாம், அவர் சொன்ன மாதிரியில், இவர் எப்படிக் கெஞ்சினாலும் கொடுக்க மாட்டார் என்பது அவளுக்கு நிதர்சனமாக விளங்கி விட்டது. ஆகவே, அவள் எதிர்ப்புறம் சென்று, அந்தக் கிழவரின் பாதங்களைத் தொட்டு வணங்கக் குனிந்தாள். அவர் கால்களை உள்பக்கம் இழுத்துக் கொண்டு, ஒரு விகாரச் சிரிப்புச் சிரித்து, "போ! போ! போய்விடு!" என்றார்.

"அப்படிச் சொல்லாதீங்க தாத்தா! அதோ இருக்கிறாரே ஒரு மனிதர் அவரைப்போல இரக்கமற்றவரல்ல நீங்க! அவருக்கு உள்ளத்திலே 'ஐயோ, பாவம்' என்கிற உணர்ச்சியே கிடையாது. அவர் 'இல்லை போ!' என்று என்னைப் போன்ற மிக மிக ஏழை, கஷ்டப்படும் பெண் பிள்ளையிடம்கூடச் சொல்லி விடுவார்!" என்றாள்.

இவ்வாறு கூறியபோது, "இல்லை போ!" என்ற வார்த்தைகள் ராவ் கூறியது போலவே கூறிக் கேலி செய்தாள். இந்த அவமரியாதையை ராவ் உணரத்தான் செய்தார். அதற்காக அவர் அவளை என்ன செய்ய முடியும்? சரி, அவளைப் பொருட்படுத்தக் கூடாது என்று வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.



ஒருவன்:—இந்தாருங்கள், ஸார்! இந்தத் தாயத்தைக் கட்டிக் கொள்ளுங்கள். ஒரு வாரத்தில் லக்ஷாதிபதியாகி விடுவீர்கள்! இதன் விலை இரண்டு ரூபாய்தான்!

அவர்:—அந்தத் தாயத்தைக் கொடு இங்கே. ஒரு வாரம் கழித்துப் பணம் வாங்கிக் கொள்!

இருந்தாலும், தமக்கு விருப்பமின்றியே அவளைக் கவனித்து வந்தார். ராவுக்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை. அந்த நிம்மதியை அவளுக்கு ஒரு காலணா கொடுத்து வாங்கலாமா அல்லது சும்மா இருந்து விடுவோமா?—எந்த முடிவுக்கும் அவரால் வர முடியவில்லை. அவளுக்கு ஒரு காலணா கொடுத்தால் சக பிரயாணிகளின் அதிருப்திக்குத் தான் காரணமாகக் கூடும் என்ற பயம் வேறு இருந்தது. ஆகவே, அவர் அனுவசியமான கோபத்துடன் 'போ, போ' என்று விரட்டினார். உடனே அவள் அழத்தொடங்கிவிட்டாள்.

"இந்தப் பெட்டியில் பணக்காரர்கள் இருப்பார்கள். அவர்கள் பசியால் என்னை மடிய விடமாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டு வந்தேன். இன்றையப் பொழுது போகச் சாப்பாட்டுக்குக் கிடைத்து விடும் என்று வந்தேன். இங்கே வந்து பார்க்கும்போது மூன்றாம் வகுப்பிலிருக்கும் ஏழைகள் தேவலை என்று ஆகிவிட்டது. அவர்கள் எவ்வளவோ தயாள சிந்தையோடு இருக்கிறார்கள். என்ன இருந்தாலும் அவர்கள் திட்டமாட்டார்கள். பிச்சை எடுப்பதற்காக முகத்தைக் கடுமையாக வைத்துக்கொள்ள மாட்டார்கள். நான் என்ன கஷ்டப்படுகிறேன் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் மனசில் ஈகையும் இரக்கமும் உண்டு......!"

இப்பொழுது எல்லாரும் அவளைக் கவனிக்கத் தொடங்கினர். ராவின் பக்கத்திலிருந்தவர், துப்பறியும் கதையைப் படிப்பதை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தார். அவருடைய ஆவல் அதிகரித்தது. அவர் "நீ எந்த ஊர்க்காரி?" என்றார்.

"எந்த ஊர் என்று சொல்லுவேன். உங்களைப் போன்ற பணக்காரர்களுக்குச் சொந்த ஊர் என்றிருக்கும். அங்கே பெரிய பெரிய மாளிகைகள் உங்களுக்கு இருக்கும்; அந்த வீடுகளில் பிச்சை கேட்க வரும் பிச்சைக்காரர்களை விரட்டுவதற்கு வேலையாட்கள் இருப்பார்கள். ஆனால் என்னைப் போன்ற ஏழைப் பிச்சைக்காரர்களுக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள எந்த ஊருமே கிடையாது!"

"ராவ், இவளுடைய நாக்கு ரொம்பத் துடுக்கில்லை?" என்றார் ஆங்கிலத்தில்.

"ஐயா! இங்கிலீசுலே திட்டாதீங்க. நான் ரொம்பவும் பரிதவிக்கத் தக்க ஏழைங்க!" என்றாள்.

*

வெளியிலே ஒரே இருளாக இருந்தது. காற்று நிமிஷத்துக்கு நிமிஷம்வேகம் பெற்று வந்தது. ரயில் வண்டி மிக மிக நிதானமாக முன்னேறிப் போய்க் கொண்டிருந்தது. வண்டியும் ராவ் இறங்க வேண்டிய ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருந்தது. தாம் பிரசங்கம் செய்யப் போகும் 'ஆஸ்திகர் சங்க'த்தின் அங்கத்தினர்கள் ஒரு சிலராவது ரயிலடிக்குத் தம்மை வரவேற்க வந்திருப்பார்கள் என்று எண்ணினார். 'எப்படித்தான் இந்த மழையிலும் புயலிலும் சாமான்களை இறக்கப் போகிறோமோ' என்று கவலைப்பட்டார். வெளியில் காற்று, கொந்தளிக்கும் கடல் போலக் கர்ஜித்தது. சட சட என்று மரங்கள் முறிந்து விழும் சத்தம் வேறு அவர் காதுக்குக் கேட்டது.

பிச்சைக்காரி, அந்த இளம் தம்பதிகளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் மறுபடியும் ஆரம்பித்தாள்: "இதோ! என் சின்னஞ்சிறு தாயார் இருக்கிறாள். தாயே! என் மேலே இரக்கம் கொள்ளு அம்மா! அந்தச் சிறிய அப்பாவைக் கேட்டு ஒரு காலணாக் காசு வாங்கிப் போடு அம்மா! ஏன் அம்மா, முகத்தை அப்படித் திருப்பிக் கொள்கிறாய்? என் குட்டித் தாயார் என் குட்டி அப்பாவிடம் சண்டை போட்டுக் கொண்டு விட்டாளா, என்ன? என் குட்டித் தந்தை அளவுக்கு மிஞ்சித் தான் புகை குடிக்கிறார். என் குட்டியம்மா, அதற்கு அனுமதிக்கக் கூடாது; நிறுத்தப் பார்க்கணும். ஹா! அதோ... அதோ! என் குட்டியம்மாவின் முகத்தில் புன்சிரிப்பு வருகிறது!"

இதைக் கேட்டுவந்த இளைஞன் விழுந்து விழுந்து சிரித்தான். பிறகு அவன், "நீ எங்களுடன் எங்க வீட்டுக்கு வருகிறாயா? உனக்குச் சோறும் துணியும் தருகிறோம்!" என்றான்.

"என்ன வேண்டியிருக்கிறது அவளிடம் பேச்சு! ஏதாவது கொடுத்து அனுப்புங்களேன்!" என்றாள் அந்த மங்கை.

"எனக்குத் தெரியும், என் குட்டித் தாயார் 'என் மேல் இரக்கப்படுவாள்' என்று. இப்போது தாத்தாகூட எனக்கு ஏதாவது கொடுப்பார். நானும் அவரை அப்படித் தொந்தரவு செய்திருக்கக் கூடாதுதான். அவர் ரொம்ப இரக்க முள்ள மனுஷ்யர் என்பது எனக்குத் தெரியும்......"

இவள் இப்படிப் பேசவே, எல்லோரும் அவளுக்கு ஏதேதோ கொடுத்தார்கள். ராவ் மட்டும் ஒன்றும் கொடுக்கவில்லை. ஆமாம். அவர்களுக்கெல்லாம் அந்தப் பிச்சைக்காரி பேசியது பிடித்திருந்தது. ஆனால் ராவ் மட்டும் புயலைப் பற்றியும், வரப்போகிற ஸ்டேஷனில் எப்படி இறங்குவது என்பதைப் பற்றியுமே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம் வண்டியும் நின்றது.

(அடுத்த இதழில் முடியும்)



பத்மாவின் தியாகம்

வ.சா. நாகராஜன்

தாம்ஸன் மோட்டார் கம்பெனி மானேஜர் வரதராஜனுக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது என்று தெரிந்ததும் அந்தக் கம்பெனியில் உத்தியோகம் வகித்த அனைவரும் கவலையில் ஆழ்ந்தனர். வேறு எதற்காகவும் இல்லை; மிகவும் குறுகிய காலத்திற்குள் அன்பினாலும் பரிவினாலும் தங்களுடைய உள்ளங்களைக் கவர்ந்த மானேஜருக்கு அவருடைய கல்யாணத்தின் போது என்ன பரிசளிப்பது என்ற யோசனையில்தான்.

அதே மாதிரிதான் திருச்சி குருநாத முதலியார் தம் பெண் பத்மாவுக்குச் சென்னையில் பெரிய மோட்டார் கம்பெனி ஒன்றில் மானேஜராக இருக்கும் ஒரு பையனை நிச்சயம் செய்து விட்டார் என்று தெரிந்ததும் திருச்சி ஜில்லா முழுவதும் இருந்த பணக்காரர்களும் உத்தியோகஸ்தர்களும் கவலைப்பட ஆரம்பித்தனர்.

இப்படியாக மாப்பிள்ளைக்குத் தெரிந்தவர்களும் பெண்ணின் தகப்பனாருக்குத் தெரிந்தவர்களும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் போது ஒரு நாள் பத்திரிகையில் “தாம்ஸன் கம்பெனி மானேஜர் வரதராஜனுக்கும் திருச்சி குருநாத முதலியாருடைய பெண் பத்மாவுக்கும் நிச்சயம் ஆகியிருந்த கல்யாணம் நின்றுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று இருந்த விளம்பரத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார்கள். அது உண்மையோ, பொய்தானோ என்று அறியக் கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடியும் வாசித்தார்கள் சிலர்.

* * *

குருநாத முதலியார் வீட்டின் முன் பக்கத்தில் இருந்த ஹாலில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவருக்கு எதிரில் இருந்த ஒரு ‘ஸோபா’வில் பத்மாவும் பங்கஜமும் உட்கார்ந்திருந்தார்கள். மூவரும் தீவிரமாக ஒரு விஷயத்தைப் பற்றி விவாதித்து அப்பொழுதுதான் சற்று ஓய்ந்து அவரவர்கள் தனித் தனியாகச் சிந்தனை செய்து கொண்டிருந்தார்கள்.

வெகுநேரம் கழித்து பத்மா சொன்னாள்: “பங்கஜம்! நான் கேட்கிறேன், இதை விட்டால் வேறு நல்ல வழிதான் என்ன சொல்வேன்? நிச்சயமாக இதற்கு நீ சம்மதித்துத்தான் ஆகவேண்டும். அப்பாவிடம் வாதாடி ஒரு வழியாக அவரைச் சம்மதிக்கச் செய்துவிட்டேன். உனக்கு நான் செய்துவிட்ட துரோகத்திற்கு இதுகூடச் செய்யக் கூடாதா? எப்படியும் நீ சம்மதித்துத்தான் ஆகவேண்டும்......” அவளுடைய குரலில் கனிவும் அநுதாபமும் ததும்பி நின்றன.

பங்கஜம் தலையைத் தூக்காமல் கீழே பார்த்தபடியே சொன்னாள்: “வரும் அதிர்ஷ்டத்தைப் பற்றி நான் கொஞ்சம் கூடக் கவலைப்படவில்லை, பத்மா. எனக்காகப் பிறர் ஒருவர் கஷ்டப்படுவதை ஒரு நாளும் நான் விரும்பமாட்டேன்......”

“திருப்பித் திருப்பி ‘எனக்காகப் பிறர் படும் கஷ்டம்’ என்று என்னைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாயே! இதோ பாரேன்; உனக்காகச் சொல்லவில்லை. நிச்சயமாக எனக்கு இப்பொழுது கல்யாணத்தில் பற்றுதல் இல்லை. டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் ஊறிவிட்டது. ஆனால் தாயில்லாத பெண்ணை வாஞ்சையுடன் வளர்த்த என் தகப்பனாரின் கடைசிக் காலத்தில் அவருடைய மனதைப் புண்ணாக அடிப்பானேன் என்றுதான் என் ஆவலையும் தணித்துக் கொண்டு இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதித்தேன். ஆனால் அதிருஷ்டவசமாக உன்னைச் சந்தித்தவுடன் என் எண்ணத்தை மறுபடியும் மாற்றிக் கொண்டு

விட்டேன், பங்கஜம்! நீ எனக்குச் செய்த பெரிய உதவியின் மூலம் உன் வாழ்க்கையே பாழாகிவிட்டது. நீ எனக்குச் செய்த அந்த உதவியினால்தான் டாக்டருக்குப் படிக்கலாம் என்ற என் ஆசையும் துளிர்விட்டது. அதனால் உன் சிநேகிதியிடம் உனக்கு அன்பு இருந்தால் நிச்சயம் இதற்கு நீ சம்மதித்துத்தான் ஆகவேண்டும். இதில் உனக்கு என்ன கஷ்டம், சொல்லேன்!" என்றாள் பத்மா.

***

அவர்களுடைய பேச்சு நமக்கு நன்றாகப் புரிய வேண்டும் என்றால் நாம் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்ததை அறிந்து கொள்ள வேண்டும்.

அப்பொழுது பத்மாவும் பங்கஜமும் திருச்சி பெண்கள் பள்ளிக்கூடத்தில் மாணவிகள். பத்மா திருச்சி ஜில்லாவில் பெரிய பணக்காரர்களுள் ஒருவராகிய குருநாத முதலியாரின் ஒரே பெண். பங்கஜம் திருச்சிப் பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்தியாயராக இருந்த ஒருவருடைய பெண். பத்மா, ஐந்து மைல்களுக்கு அப்பால் இருந்த கிராமத்திலிருந்து தினம் திருச்சிக்குக் குதிரை வண்டியில் வந்து படித்துவிட்டுப் போனால் அவளுடைய உடல் நலம் கெட்டுவிடும் என்று நினைத்த குருநாத முதலியார் தாமும் மகளுடன் திருச்சிக்கே வந்துவிட்டார். பங்கஜமோ, தினம் காலையில் எட்டரை மணிக்குச் சாப்பிட்டுவிட்டு இரண்டு மைல்களுக்கு அப்பால் இருந்த பள்ளிக்கூடத்திற்குத் தினம் இரண்டு தடவைகள் நடந்து போய் வந்தாள்.

இப்படி இருந்த இருவரும் ஐந்தாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தபோது தான் சிநேகமானார்கள். அன்பும், அடக்கமும், அறிவும் உடைய இருவரும் பழகிய சில நாட்களுக்குள்ளேயே மனமொத்த சிநேகிதிகளாகிவிட்டார்கள்.

குருநாத முதலியாருக்குப் பத்மா ஒரே பெண். அத்துடன் தாய் இல்லாதவள். அதனால் முதலியார் அவளை வீட்டில் அதிகம் படிக்க விடுவதில்லை. ராத்திரி வேளைகளில் எட்டு மணிக்குமேல் படித்தால் உடம்பு கெட்டுவிடும் என்பார். இந்த மாதிரியாக, முதலியாரின் அன்பு மிகுதியினால் பத்மாவின் வகுப்பில் முதலாவதாக நிற்கும் அளவுக்குப் படிக்க முடியவில்லை. பங்கஜம்தான் வகுப்பில் முதல் மார்க்கு வாங்குவாள். பத்மாவுக்குக் கணக்கில் மாத்திரம்தான் கொஞ்சம் பயம். மற்றப் பாடங்களில் நல்ல கெட்டிக்காரியாக இருந்தாள்.

அடுத்த வருஷம் அவர்கள் இருவருக்கும் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை வந்தது. வேறு பள்ளிக்கூடங்களிலிருந்து வந்த உபாத்தியாயர்கள் பரீக்ஷை ஹாலைப் பார்வையிடும் 'ஸூபரின்டண்டு'களாக இருந்தார்கள்.

பத்மாவும் பங்கஜமும் ஒவ்வொரு பரீக்ஷையிலும் நன்றாகவே எழுதி வந்தார்கள். கடைசி நாள் கணக்குப் பரீக்ஷை. அன்று பள்ளிக்கூடத்திற்கு வந்து கொண்டிருந்த போது பத்மா பங்கஜத்தினிடம் சொன்னாள்: "நிச்சயமாக 'பாஸ் மார்க்' வாங்குவதற்கு எனக்கு ஒரு சிரமமும் இருக்காது, பங்கஜம். ஒன்றே ஒன்று: முதல் கணக்கைப் போடும் போதே தப்பாகி விட்டதோ பாக்கியுள்ள அவ்வளவு கணக்குகளும் தப்பாகப் போய்விடும். முதல் கணக்கைச் சரியாகப் போட்டு விட்டேன் என்ற திருப்தி ஏற்பட்டுவிட்டால் அப்புறம் எல்லாக் கணக்குகளையும் தைரியத்துடன் போட்டுவிடுவேன். அதனால் பரீக்ஷைக் கேள்வித் தாளில் ஐந்தாவது கணக்கை நான் முதலில் போடுகிறேன். நீயும் முதலில் அதையே போட வேண்டும். அது முடிந்தவுடன் அந்தக் கணக்கின் விடையை நீ எனக்குக் காண்பிக்க வேண்டும். என்ன? அந்தக் கணக்குச் சரிதான் என்று ஆகி விட்டால்,



அப்புறம் எனக்குக் கவலையே இல்லை. மனம் தானாகவே தைரியம் அடைந்துவிடும். நூற்றுக்கு எண்பது 'மார்க்'வாங்கிவிடுவேன். ஆனால் அது நீ எனக்கு முதலில் தைரிய மூட்டுவதில் இருக்கிறது. ஐந்தாவது கணக்கின் விடையை எனக்கு முதலில் காண்பிக்கிறாயா? என்ன?" என்றான். பங்கஜமும் சம்மதித்தாள். அநேகமாகக் கணக்குப் பரீக்ஷைகளின் போதெல்லாம் அவர்கள் இப்படிச் செய்வது வழக்கம்தான்.

பரீக்ஷை ஹாலில் கேள்வித் தாள்களை எல்லோரிடமும் கொடுத்துவிட்டு 'ஸூபரின்டண்டு'கள் தங்கள் கழுகுக் கண்களால் ஹாலைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பத்மாவும் பங்கஜமும் எடுத்தவுடன் ஐந்தாவது கணக்கைப் போட ஆரம்பித்தார்கள். பத்மாவுக்கு அந்தக் கணக்கின் விடை 65 என்று வந்தது. தலையை நிமிர்த்தி முன் பெஞ்சியில் உட்கார்ந்திருந்த பங்கஜத்தைப் பார்த்தான். விடை எழுதிக்கொண்டு வரும் காகிதத்தைச் சற்றுத் தூக்கிப் பிடித்தாள் பங்கஜம். அதில் 65 என்று கொட்டை எழுத்துக்களில் இருந்த விடையைப் பார்த்தவுடன் பத்மா ஆனந்தத்துடன் அடுத்த கணக்கைப் படிக்கலானான்.

பங்கஜம், தான் காட்டியதைப் பத்மா பார்த்துவிட்டான் என்று தெரிந்ததும் அடுத்த கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவளுடைய மேஜைக்கருகில் 'சறக் சறக்' என்று 'பூட்ஸ்' சத்தம் கேட்டது. அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். ஹால் 'ஸூபரின்டண்டு' ஒருவர் அவள் எதிரில் நின்று கொண்டிருந்தார்.



அவர் "உன் பேப்பரை இப்படிக் கொடு" என்று பங்கஜத்தை நோக்கிக் கேட்டதும் அவள் உள்ளமும் உடலும் ஒருமுறை நடுங்கின. பிறகு பத்மாவின் விடைத்தாளை வாங்கிப் பார்த்தார். அதை அவளிடம் திருப்பிக் கொடுத்து விட்டுப் பங்கஜத்தின் விடைத்தாளுடன் ஹாலின் கோடிக்குப்போய், அங்கே உயர்ந்த மேடையில் உட்கார்ந்து கொண்டிருந்த தலைமை ஸூபரின்டண்டிடம் பங்கஜத்தின் விடைத்தாளைக் காட்டி, ஏதோ சொன்னார்.

பங்கஜத்தின் தலையைச் சுற்றியது; கண்களில் நீர் நிறைந்தது.

அவள் கண்களை ஒருமுறை கசக்கி விட்டுக் கொண்டபோது, தலைமை 'ஸூபரின்டண்டு' அவள் அருகில் வந்தார். "நீ வெளியில் போகலாம், அம்மா!" என்று மெல்லிய குரலில் சொன்னார்.

தான் பத்மாவுக்குக் கணக்கின் விடையைக் காண்பித்ததைக் காப்பி அடித்ததாக நினைத்துக் கொண்டு தன்னைப் பரீக்ஷை ஹாலை விட்டே வெளியேற்றுகிறார்கள் என்று தெரிந்தவுடன் வெட்கத்தினாலும், அவமானத்தினாலும் துக்கத்தினாலும் அவள் உடல் முழுவதும் குன்றியது. நேராக வீட்டுக்குப் போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

மத்தியானம் அவளுடைய தகப்பனார் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், அவருடைய முகத்தைப் பார்க்க நடுங்கிய பங்கஜம் கதவைத் திறக்காமல் விம்மிக் கொண்டிருந்தாள். அவளுடைய தாயும் தந்தையும் கதவைத் திறக்கும்படி எவ்வளவோ சொல்லியும் அவள் திறக்கவில்லை.

சாயங்காலம் பத்மா வந்த பிறகு தான் பங்கஜம் கதவைத் திறந்தாள். சிறிது நேரமாக ஓய்ந்திருந்த அவள், பத்மாவைப் பார்த்தவுடன் மறுபடியும் அழ ஆரம்பித்துவிட்டாள்.

பிறகு நடந்ததையெல்லாம் பங்கஜத்தின் தகப்பனாரிடம் பத்மாவே சொன்னான்.

* * *

சில நாட்களுக்கு முன்புதான் பங்கஜத்திற்குக் கல்யாணம் நிச்சயம் ஆகியிருந்தது. பொருளாதார நிலையில் மிகவும் கீழே இருந்த அவளுடைய தகப்பனாரால் தன்னைப் போல ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயரைத்

தான் பங்கஜத்திற்குப் பார்க்க முடிந்தது. அவரும் முப்பது வயதானவர். முதல் தாரம் தான். அந்த இடம் கூடிய வரையில் எல்லோருக்கும் திருப்தியாகத்தான் இருந்தது. பங்கஜத்தின் பரீக்ஷைகள் முடிந்தவுடன் கல்யாணத்தை வைத்துக் கொள்வதாகத் தீர்மானித்திருந்தார்கள்

ஆனால்—!

பள்ளிக்கூடத்திலிருந்து இந்த மாதிரி ஒரு நல்ல பெயருடன் வரும் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள அந்தப் பள்ளிக்கூட உபாத்தியாயர் சம்மதிக்கவில்லை. கல்யாணம் நின்றது.

அந்த வருஷக் கடைசியில் பங்கஜத்தின் தந்தை ஓய்வு பெற்றார். அதற்குப் பிறகு சென்னையிலேயே தனி நபர் நடத்தும் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் வேலை கிடைத்தது. தன் மனைவியையும் பங்கஜத்தையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தார். திருச்சியை விட்டுக் கிளம்பும்போது பத்மா, பங்கஜத்தின் வாழ்வைக் குலைத்ததற்காக அவள் காலடியில் விழுந்து கதறினாள். "பைத்தியமே, என் தலைவிதி இப்படி இருக்கும் போது நீ என்னடி செய்வாய்?" என்று பத்மாவைச் சமாதானப் படுத்திவிட்டுச் சென்னைக்குச் சென்றாள் பங்கஜம்.

சென்னைக்கு வந்ததும் பங்கஜத்தின் தகப்பனார் அவளுக்கு வரனுக்காக அலைந்தார். அதுவரையில் வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காமல் பங்கஜம் 'டைப்' அடிக்கக் கற்றுக் கொண்டாள்.

சில நாட்களில் பங்கஜத்திற்குத் தாம்ஸன் மோட்டார் கம்பெனியில் டைப்பிஸ்டு வேலை கிடைத்தது. தம்முடைய பெண்ணை உத்தியோகத்திற்கு அனுப்பக்கூடிய மனஉறுதி பங்கஜத்தின் தகப்பனாருக்கு இல்லை. ஆயினும் பொருளாதார நெருக்கடியும், நேரில் சந்தித்து விட்டு வந்த தாம்ஸன் கம்பெனி மானேஜர் வரதராஜனின் நல்ல குணமும் அவரைச் சம்மதிக்கச் செய்தன.

* * *

ஆபீஸ் முழுவதும் பரபரப்படைந்த மானேஜர் வரதராஜனின் கல்யாண விஷயம் பங்கஜத்தின் காதிலும் விழுந்தது. சில வருஷங்கள் மிகவும் நெருங்கிப் பழகிய தோழியை இனி மறுபடியும் வாழ்க்கையில் எங்கே சந்திக்கப்போகிறோம் என்று நினைத்திருந்த பங்கஜம், கடைசியில் பத்மா தன் ஆபீஸ் மானேஜரின் மனைவியாக வரப் போகிறாள் என்று அறிந்ததும் சந்தோஷமே அடைந்தாள். நல்ல குணமும் அன்பும் உடைய வரதராஜன் தன் தோழிக்குக் கிடைத்ததில் பெருமை யடைந்தாள்.

கல்யாணத்திற்குச் சில நாட்கள் இருக்கும்போது, கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுசெய்ய குருநாத முதலியார் பத்மாவை அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்தார்.

ஒரு நாள் மத்தியானம், தனக்கு வரப் போகும் மனைவிக்குத் தன் ஆபீஸைக் காண்பிக்க, பத்மாவை அழைத்துக் கொண்டு ஆபீஸுக்கு வந்தான் வரதராஜன். ஆபீஸின் கட்டிடத்தைச் சுற்றி வந்தவன், பங்கஜத்தின் அருகில் வந்தவுடன் "இவள்தான் ஆபீஸ் 'டைப்பிஸ்டு' பங்கஜம். அடக்கமும், பணிவும் கொண்ட இவள் உனக்குச் சிநேகிதமானால் ஆச்சரியமே இல்லை" என்று அறிமுகப் படுத்தினான். அப்போது கீழே விழுந்து விடாமல் இருக்க மேஜையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றாள் பத்மா. இதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பங்கஜம், பரபரப்படையாமல் தன் இடத்தில் எழுந்து நின்றபடியே பத்மாவை நோக்கிக் கை குவித்தாள்.

ஆபீஸில் மற்றக் குமாஸ்தாக்களின் நடுவில் 'நாடகம்' நடத்த விரும்பாத பத்மா மேலே நடந்தாள்.

* * *

அன்று சாயங்காலம் பத்மா தகப்பனாரிடம் தன் உத்தேசத்தை வெளியிட்டாள். தனக்கு ஒரே பெண்ணான பத்மா நல்ல உத்தியோகமும் லக்ஷணமும் உடைய வரதராஜனைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் டாக்டராகப் போகிறேன் என்று வாதாடுவதை அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் அவருடைய அன்பு மனம் பத்மாவின் இஷ்டத்திற்கு விரோதமாகவும் அவரை நடக்கச்செய்ய விடவில்லை.

இருவரும் வரதராஜனைச் சந்தித்தார்கள். பத்மா கண்களில் நீர் ததும்பப் பங்கஜத்தின் கதையைப் பற்றிச் சொல்லிவிட்டு, "அடக்கமும் அறிவும் நிறைந்த இவள் உனக்குச் சிநேகிதியானால் நான் ஆச்சரியப்படவே மாட்டேன்' என்றீர்களே. உங்களுக்கு அவள் மீது இவ்வளவு நல்ல அபிப்பிராயம் இருக்கும் போது, என் பொருட்டு தன் வாழ்க்கையையே இழந்த அவள் விஷயத்தில் கொஞ்சம் மனத்தைத் தளர்த்தி என் ஸ்தானத்தில் அவளை ஏற்றுக் கொள்ளக் கூடாதா? என் வாழ்க்கையின் லக்ஷ்யமும் டாக்டராக ஆக வேண்டும் என்பது. ஆனால் அப்பாவின் பிடிவாதமும்,

தங்கஜேப் பற்றி நான் கேள்விப் பட்டதும் நான் என்னை இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்கச் செய்தது. நீங்களும் லக்ஷ்யம் என்ற சொல்லை வாய் வார்த்தையுடன் நிறுத்திக் கொள்ளாமல் செய்கையிலும் காட்ட வேண்டும் என்றால் பங்கஜத்தைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்" என்றாள் பத்மா.

தன் லக்ஷியத்திற்காகத் தன் வாழ்க்கையையே நிர்மூலமாக்கிக் கொண்ட பங்கஜத்தின் நிலைமையை வரதராஜன் புரிந்து கொண்டான். அவனுக்கு அவள் மீது இருந்த அன்பு இரட்டித்தது.

அவன் பங்கஜத்தைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தான்.

* * *

"நான் டாக்டராக வேண்டும் என்றால்—என் கனவு நனவாக வேண்டும் என்றால் — நீ இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வேண்டும்; பங்கஜம் இல்லை என்றால் நானும் அவரைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். உனக்கு என்னை அறியாமல் செய்த துரோகத்திற்காக வாழ்நாள் முழுவதும் என் நெஞ்சு துடித்துக் கொண்டிருக்கும். இறந்த பிறகும் என் நெஞ்சு வேகாது?" என்றாள் பத்மா.

"ஓ! அந்த மாதிரி எல்லாம் சொல்லாதே, பத்மா! இதனால் அவருக்கு மனவருத்தம் இல்லை என்றால் ...."

"மனவருத்தமா? அந்த ஆபீஸில் நீ சேர்ந்தவுடனேயேதான் அவரை மயக்கி விட்டாயே......! அவருக்குப் பூரண சம்மதம்" என்றாள் பத்மா.

மறுநாள் பத்திரிகையில் ஆரம்பத்தில் கூறப்பட்ட விளம்பரத்தைப் பிரசுரிக்கப் பத்மா ஏற்பாடு செய்தாள். சில நாட்களுக்குப் பிறகு ஒரு ஆடம்பரமுமில்லாமல் திருநீர்மலைக் கடவுளின் சந்நிதியில் வரதராஜன் பங்கஜத்தின் கழுத்தில் மாலையிட்டான்.

முதல் தடவை மன்னிப்பு...

பரோடா கெய்க்வார் பிரதாப சிங்கின் தகப்பனர் சயாஜி ராவ் பரோடா மகாராஜாவாக இருந்த காலத்தில், வைஸ்ராய்க்கு மரியாதை செய்ய மறுத்து மகா வல்லமையுடன் விளங்கிய பிரிட்டிஷாரின் கோபத்துக்கு ஆளானர். எனினும் பிரிட்டிஷாரின் கோபம் அவரை எதுவும் செய்ய முடியவில்லை. ஆனல் அவரது புதல்வர் பிரதாப சிங் சுதந்திர இந்திய சர்க்காரின் கோபத்துக்கு இலக்காகி ராஜ்யம், பட்டம், பென்ஷன் எல்லாவற்றையும் இழந்தார். சயாஜி ராவ் அந்நியரை எதிர்த்து நின்றதால் வெற்றி பெற்றார். பிரதாப சிங் நம்மவரை எதிர்த்து நின்றதால் தோல்வியடைந்தார். மூன்று வருஷங்களுக்கு முன் அவர் பரோடா சர்க்கார் பொக்கிஷத்திலிருந்து மூன்று கோடி ரூபாய் எடுத்துச் செலவழித்ததாகப் புகார் கூறப்பட்டது. இறுதியில் சர்தார் பட்டேலின் தலையீடு காரணமாக அந்தத் தகராறு ஒரு வழியாகத் தீர்ந்தது. முதல் தடவையானதால் சர்தார் பட்டேல் அவரை மன்னித்ததாகச் செய்திகள் வெளியாயின. ஆனல் இரண்டாவது தடவையாக அவர் இழைத்த பெரும் தவறுக்காக, அதாவது மகாராஜாக்கள் சங்கம் அமைத்துச் சுதந்திர இந்தியாவுக்கு விரோதமாகச் செய்த சதிக்காக, சமஸ்தான இலாகா மந்திரி ஸ்ரீ என். கோபாலசாமி ஐயங்கார் அவரை மன்னிக்கவில்லை.



பிரதாப சிங்

சர்ச்சில் நடுங்குகிறார்!

பிரிட்டிஷ் அரசியலில் வின்ஸ்டன் சர்ச்சிலைக் கண்டு நடுங்காதவர்கள் யாருமே இல்லை. ஆனல் ஒரே ஒருவர் மாத்திரம் சர்ச்சிலையும் நடுங்க வைக்கும் ஆற்றல் படைத்திருக்கிறார். அவர்தான் சில தினங்களுக்கு முன் ஆட்லி சர்க்கார் மந்திரி சபையிலிருந்து ராஜிநாமா செய்த ஸ்ரீ அனூரின் பிவான். சர்ச்சில் பார்லிமெண்டில் எரிமலையைப் போல் தீயைக் கக்கினால், பிவான் பூகம்பம் போல் எழுந்து பார்லிமெண்டையே அதிரவைத்து விடுவாராம். எனவே, பிவானிடத்தில் மாத்திரம் சர்ச்சில் மரியாதையாக நடந்துகொள்ளத் தவறுவதில்லை. சுரங்கத் தொழிலாளியின் மகனான பிவான் தொழிலாளியைப் போலவே உடுத்திக்கொள்வார். ஒரு சமயம் பக்கிங்காம் அரண்மனையில் நடந்த ராஜ விருந்துக்கு பிவான் தம்முடைய வழக்கப்படி உடை உடுத்திச் சென்றார். அங்கிருந்தவர்கள் அதை ஆட்சேபிக்கவே, "என்னைப் பார்லிமெண்டுக்குத் தேர்ந்து அனுப்பியவர்கள் நான் அழகாக உடை உடுத்திக் கொள்வதற்காக அனுப்பவில்லை" என்று பதில் கூறினர். சென்ற பல மாதங்களாகத் தொழிற்கட்சி சர்க்காரைக் கவிழ்த்து விட்டுப் பொதுத் தேர்தல் நடத்தும்படி செய்வதற்காகப் பார்லிமெண்டில் சர்ச்சில் கோஷ்டியினர் தலைகீழாக நின்றும் முடியவில்லை. ஆனல் பிவானுக்குப் பார்லிமெண்டில் பல அங்கத்தினர்களின் ஆதரவு இருப்பதால் அவர் மனம் வைத்தால் எந்த விநாடியிலும் ஆட்லி சர்க்காரைக் கவிழ்த்துவிட முடியும்.



அனூரின் பிவான்



5. சுரங்கத்திற்குள்......

இரண்டு நாழிகைக் கெல்லாம் ஐயனார் கோயிலுக்கு அந்தப் போர் வீரன் வந்தான். போர் வீரனைப் பார்த்தவுடன் வீரசேனன் ஒரு கணம் மௌனமாக இருந்தான். அடுத்த கணம் தான் கண்ட கனவை அவனிடம் சொல்ல நினைத்தான். சட்டென்று ஏதோ ஒரு உணர்ச்சி வீரசேனனைத் தடுத்தது. போர் வீரனிடம் ஒன்றுமே சொல்லாமல் உட்கார்ந்திருந்தான்.

"என்ன தம்பி! ஒருமாதிரி உட்கார்ந்திருக்கிறாயே?" என்று கேட்டான் போர்வீரன்.

"ஐயா! எனக்கு என் தாயாரின் நினைவு வந்துவிட்டது. நான் திரும்பவும் ஊருக்குப் போகவேண்டும் என்று நினைக்கிறேன். வரும்போது உங்கள் குதிரையின் மீது ஏறிக்கொண்டு வந்து விட்டேன். திரும்பிப் போவதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அதை நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்" என்று சொன்னான்.

"தம்பி! நீ அதற்காகக் கவலைப் படாதே. நான் வந்த காரியமும் முடியவில்லை. ஆகையால் நானும் உடனே ஊருக்குத் திரும்பப் போகிறேன். குதிரையைச் சும்மாதான் பிடித்துக்கொண்டு போக வேண்டும். நீ வேண்டுமானால் அந்தக் குதிரையின்மீது ஏறிக்கொண்டு என்னுடன் வரலாம்" என்றான்.

வீரசேனன், "ஐயா! தாங்கள் செய்யும் உதவிக்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்" என்று கூறிவிட்டு உடனே புறப்பட்டான்.



வீரசேனனும் அந்தப் போர் வீரனும் குதிரைகள் மீது ஏறித் தலைநகருக்குத் திரும்பி கொண்டிருந்தனர். வீரசேனனை அந்தப் போர்வீரன் என்னென்னவோ கேள்விகள் கேட்டான். அவ்வீரனின் கேள்விகள் எல்லாம் வீரசேனனின் காதில் ஏறவில்லை. அவனுக்குச் சுரங்கமும் அதனுள் இருக்கும் செல்வங்களும் காட்டை மீட்கவேண்டும் என்ற தந்தையின் கட்டளையும் மாறி மாறி மனத்துக்குள் வந்து கொண்டே இருந்தது. எப்பொழுது சுரங்க மாளிகைக்குப் போகப்

சாரங்கம்



போகிறோம், தாயைப் பார்க்கப் போகிறோம் என்று ஆவலாகவே இருந்தது அவனுக்கு. ஏதோ பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காக அவ்வீரனின் கேள்விகளுக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பதில் சொல்லி வைத்தான்.

ஊர் நெருங்கநெருங்க வீரசேனன் குதிரையைச் சற்று வேகமாகவே தட்டி விட்டான். குதிரை தன் முழு சக்தியுடன் ஓடியும் அது வீரசேனனின் மனோ வேகத்துக்கு மிகவும் குறைவாகவே இருந்தது. தலை நகரின் எல்லை வந்ததும் 'டக்' கென்று குதிரையை நிறுத்தினான் வீரசேனன். "ஐயா! நான் இனிமேல் நடந்தே செல்லப் போகிறேன். என் வீடு இங்கிருந்து கொஞ்ச தூரம்தான் இருக்கிறது. தங்களுடைய உதவியை நான் மறக்க மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே குதிரையை விட்டு இறங்கினான்.

போர் வீரன் வீரசேனனை ஒன்றும் தடை செய்ய வில்லை. வாய் பேசாமல் வீரசேனனின் கையிலிருந்த குதிரைக் கடிவாளக் கயிற்றைப் பெற்றுக் கொண்டு, "தம்பி! உன் வீடு எங்கே யிருக்கிறது?" என்று கேட்டான்.

வீரசேனன் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல்,

பாப்பா மலர்

“ஐயா! தாங்கள் சொன்னீர்களே மார்த்தாண்ட மன்னரின் மனைவியையும் அவர் மகனையும் பற்றி, அவர்கள் இருக்குமிடம் எனக்குத் தெரியும். சமயத்தில் அவர்கள் மீண்டும் வந்து இந்த நாட்டு மக்களைக் காப்பாற்றுவார்கள்” என்று சொல்லி விட்டு வீரன் சென்று விட்டான்.

போர்வீரன் வீரசேனனை ஏதோ கேட்பதற்காக நினைத்து அவனைப் பார்த்தான். வீரசேனனைக் காணவில்லை. அவன் எப்படிப் போனான் எங்கு சென்றான் என்பதையே அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. உணர்ச்சியின்றிக் குதிரையைத் தட்டிவிட்டான். குதிரையும் தலைதெறிக்க ஓடத் தலைப்பட்டது.

வீரசேனன் அங்கிருந்து ஓட்டமும் நடையுமாகச் சுரங்க மாளிகைக்கு வந்தான். விடுவிடென்று மாளிகைக்குள் புகுந்தான். தன் தாயின் எதிரில் போய் நின்றான்.

எதிர்பாராத விதமாக வீரசேனனைப் பார்த்த அவன் தாய்க்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. ஒரே ஆச்சரியத்துடன் வீரசேனனைப் பார்த்தபடியே இருந்தாள்.

வீரசேனன் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க “அம்மா! அப்பாவைப் பார்த்தேன். இந்த மாளிகைக்குப் பின்னால் சுரங்கம் இருப்பதாகவும், அதில் ஏராளமான செல்வங்கள் குவித்து வைத்திருப்பதாகவும் அதை எடுத்துக் கொண்டு நாட்டை மீட்கவேண்டும் என்றும் சொன்னார்” என்று மூச்சு விடாமல் தான் வீட்டைவிட்டுக் கிளம்பியது முதல் திரும்பி வந்தது வரை நடந்த சம்பவங்களை எல்லாம் ஒன்று விடாமல் சொன்னான்.

வீரசேனனின் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. ஒருகால் அவன் சொல்வதெல்லாம் உண்மையாக இருந்தாலும் இருக்குமோ! போய்த்தான் பார்ப்போமே என்று நினைத்தாள். “வீரசேனா! வா போய்ப் பார்க்கலாம்” என்று சொல்லி வீரசேனனை அழைத்துக்கொண்டு மாளிகையின் தோட்டத்துக்குச் சென்றாள்.

ஏதோ வழிதெரிந்தவன் போலக் கிடுகிடென்று வீரசேனன் முன்னே சென்றான். ஒரு மரத்துக்கு நேரே வந்ததும் சட்டென்று நின்றான். அவன் கனவில் கண்டது போலவே ஒரு பெரிய பாறாங்கல் ஒன்று இருந்தது. அதை தன்னுடைய முழு பலத்தையும் உபயோகப்படுத்தித் தள்ளினான். கீழே இறங்கிச் செல்வதற்கு வசதியாகப் படிகள் இருந்தன. வீரசேனனும் அவன் தாயும் அதன் வழியாக இறங்கி உள்ளே சென்றனர். வீரசேனன் கனவில் கண்டது அத்தனையும் உண்மைதான்.

பயங்கர யாளிமுக வாசல் ஒன்று இருந்தது. அதற்குள் புகுந்து சென்றான். அவன் தாயும் அவனுடன் சென்று கொண்டிருந்தாள். பொய்ப் புலி, யந்திரப் பாலம், மாய மாளிகை எல்லாவற்றையும் கடந்து சென்றான். அங்கேதான் அவன் கனவில் பார்க்காத ஒரு காட்சியைக் கண்டான்.

மிகுந்த வேலைப்பாடுகள் நிறைந்த அழகிய மண்டபத்தின் மத்தியில் ஒரு பெரிய பூதம் போன்ற ஒரு உருவம் இருந்தது. ஒரு கையில் உறையிலிருந்து கழற்றிய கத்தியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது. இன்னொரு கையில் பயங்கரப் பாம்பு ஒன்றைப் பிடித்துக்கொண்டு அந்த பூதஉருவம் நின்று கொண்டிருந்தது. அந்த உருவத்தின் கரிய பெரிய பயங்கர விழிகளும், கனமான மீசையும், யானையின் துதிக்கையைப் போன்ற கைகளும் அதற்கேற்ற உடலும் கொண்ட அந்த பூத உருவத்தைப் பார்த்தவுடன் வீரசேனன் சற்றுப் பயந்தான். அவனு

விடுகதை


ஏழெழுத்துக் கொண்டிருக்கும்
எடுப்பாய் நிற்கும்
மகாலக்ஷ்மி வாசம் செய்யும் இடமதாகும்
பாங்கடர்க்கு ஏற்றதொரு சுடராய் நிற்கும்
முதலில் வரும் மூன்றெழுத்தும்
மூர்க்கமாகும்
பின்னே வரும் நான்கெழுத்தும்
விளக்கம் செய்யும்
அந்தகரே இப்பொருளை வேண்டாம்
என்பர்

விடை அடுத்த இதழில்

சென்ற இதழ் விடுகதைக்கு விடை:
மின்சார விசிறி

டைய தாய் அந்த உருவத்தை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள்.

வீரசேனன் சுற்று முற்றும் பார்த்தான். அந்த மண்டபத்தில் அதற்குமேல் போக வழியில்லை. அந்த பூத உருவத்தைச் சுற்றி வந்தான். அந்தப் பூதத்தின் காலடியில் ஏதோ ஒரு வளையம் போலிருந்தது. வீரசேனன் அந்த வளையத்தைப் பிடித்து இழுத்துப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! ஒரு சிறிய கதவு திறந்தது. அதற்குள் ஒரு கடிதமும் பளபள வென்று கண்ணாடி வைத்துப் பதித்த அற்புதமான மோதிரம் ஒன்றும் இருந்தது.



வீரசேனன் ஆவலுடன் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தான்:

"இந்த பூத உருவத்துக்குக் கீழே உள்ள சுரங்கத்தில் ஏராளமான செல்வங்கள் குவித்து வைத்திருக்கிறது. அதைப் பெறவேண்டுமானால் எல்லாக் கலைகளிலும் நிறைந்த ஒரு வீர வாலிபனும், சர்வலட்சணமும் பொருந்தியுள்ள ஒரு அரச குமாரியுமாகச் சேர்ந்து வந்து இந்த பூத உருவத்துக்கு முன்னால் நின்றால் இந்த பூத உருவம் நகர்ந்து வழிவிடும். சர்வலட்சணமும் பொருந்திய பெண் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இந்த மோதிரத்தை கையில் போட்டுக் கொண்டு அந்தப் பெண்ணின் முன் நின்றால் அவளுடைய உருவம் இந்த மோதிரத்தில் இருக்கும் கண்ணாடியில் தெரியும். சாதாரண பெண்களின் உருவம் இம் மோதிரக் கண்ணாடியில் தெரியாது" என்று எழுதியிருந்தது.

கடிதத்தைப் படித்து வெகு நேரம் ஆகியும் வீரசேனன் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. கையில் அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு அவன் யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

வீரசேனனின் தாயாருக்கு ஒரே பயமாகப் போய்விட்டது. மகனுக்கு என்ன நேர்ந்து விட்டதோ என்று பதறிப் போனாள். கடிதத்தை எடுத்துப் படித்தவன் படித்தபடியே அசையாமல் நின்று கொண்டிருந்தால் அவளுக்குப் பயமாயிருக்காதா? கடிதத்தில் ஏதாவது மாய சக்தி இருந்து மகனைப் பேச முடியாமல் செய்து விட்டதோ என்று நினைத்து நடுங்கினாள். ஆனால் அவளும் பயந்து போய் வாய் பேசாமல் இருந்து விடவில்லை.

"அப்பா, வீரசேனா! என்ன யோசனை செய்கிறாய்! உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்று அன்போடு கேட்டு வீரசேனனின் தாயார் அவனது தோள்களைப் பிடித்து, தூக்கத்தி லிருப்பவர்களை எழுப்புவது போல் உலுக்கினாள்.

சட்டென்று வீரசேனனின் யோசனை கலைந்தது.

"அம்மா, நான் இப்போதே புறப்பட வேண்டும்!" என்றான்.

"எங்கே அப்பா புறப்பட வேண்டும்?" என்று கேட்டாள் அம்மா.

"சர்வ லட்சணங்களும் பொருந்திய ராஜகுமாரி ஒருத்தியைத் தேடி எப்படியாவது இங்கு அழைத்து வந்தாக வேண்டும். அப்போதுதான் நம் காரியம் கைகூடும், அம்மா! எனக்கு விடை கொடுத்து அனுப்புங்கள்!" என்று சொல்லி வீரசேனன் அந்த மோதிரத்தை எடுத்துக் கையில் போட்டுக் கொண்டு தன் அருமைத் தாயாரை வணங்கினான்.


"மகனே! சந்தோஷமாகப் போய் வா!" என்று சொல்லி அவனை அழைத்துக் கொண்டு திரும்பினாள். சற்றுத் தூரத்தில் யாரோ ஒருவர் அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்தவுடன் வீரசேனனும் அவன் தாயும் மலைத்து நின்று விட்டனர். (தொடரும்)

தேன் ஜாடி



பாப்பா மலர்

- சாமா -

சின்ன மூத்து என்று ஒரு செல்வக் குழந்தை இருந்தான். அவனுக்கு வயது நாலு இருக்கும்.  விஷமம் செய்யாமல் அரை நிமிஷம் அவன் சும்மா இருக்க மாட்டான். தன் தாயாருக்குத் தெரியாமல் ஏதாவது விஷமம் செய்வான். பிறகு ஒரு பிரமாதமான யோசனை செய்து தாயாரை ஏமாற்றி விடுவான்.

ஒருநாள் சின்ன மூத்துவின் தாயார் சமையலறையை விட்டுச் சற்று வாசல் பக்கம் போய்க் காற்றாட நின்று கொண்டிருந்தாள். சின்ன மூத்துவுக்கு அப்போது ஒரு யோசனை தோன்றியது. அம்மா வருவதற்குள் தேன் ஜாடியை எடுத்துக் கொஞ்சம் குடித்து விடுவது என்று தீர்மானித்து விட்டான். சின்ன நாற்காலியைப் போட்டு அதன் மேல் ஏறித் தேன் ஜாடியை எடுத்து விட்டான்; பயந்து கொண்டே ஜாடியோடு வாயில் கவிழ்த்துக் கொண்டான். அவசரத்தில் சின்ன மூத்துவின் கன்னங்கள் கைகள் எல்லாம் தேனாகி விட்டன.


அந்தச் சமயம் பார்த்து வாசல் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. 'அம்மா வந்து விட்டா டோய்' என்று மெல்லச் சொல்லிக் கொண்டு சின்ன மூத்து என்ன செய்வது என்று தெரியாமல் ஓடினான். சின்ன மூத்துவுக்கு மட்டும் எப்பொழுதும் கடைசி நிமிஷ யோசனையில்தான் நம்பிக்கை அதிகம். ஓடும் போது காலில் ஏதோ தடுக்கிக் கீழே விழுந்தான். தடுக்கினது என்ன என்று பார்த்தான் அது ஒரு விளையாட்டு நாய்க் குட்டி. உடனே மூத்துவுக்கு ஒரு யோசனை உதித்தது. நாய்க் குட்டியை எடுத்துப் போய்த் தேன் ஜாடியின் அருகில் நிறுத்தி அதன் வாயில் தேனைத் தடவி, அதுதான் தேனைக் குடித்து விட்டது போல் ஜாடிக்குப் பக்கத்தில் நிறுத்தி விட்டு ஓடிப் போய் ஒளிந்து கொண்டே என்ன நடக்கிறது என்று பார்த்தான்.

இப்போதுதான் அவன் மனசில் நிம்மதி உண்டாயிற்று. தேன் ஜாடியைப் பார்த்ததும் அம்மா அவனைப் பற்றிச் சந்தேகப் பட மாட்டாள் அல்லவா?

அம்மா வந்தவுடன் தேன் ஜாடியைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். 'அடாடா! இவ்வளவு நாளாகத் தேடின தேன் ஜாடி எப்படி இங்கு கீழே வந்தது? இது என்ன, பொம்மை நாய் தேனைக் குடித்து விட்டது! குடிக்காமல் என்ன பண்ணும்! குடிக்காவிட்டால் சின்ன மூத்து சும்மா விடுவானா?' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு பிறகு "டேய் சின்ன மூத்து. இங்கே வா. தேன் ஜாடியை எப்படிக் கண்டு பிடித்தாய்? நான் அந்த ஜாடியை வைத்த இடம் தெரியாமல் திண்டாடினேன். நல்ல வேளையாக நீ கண்டு பிடித்து விட்டாய். சபாஷ்! நீ கண்டு பிடித்ததற்காக உனக்குக் கொஞ்சம் தேன் தருகிறேன். குடி!" என்றாள். மூத்துவின் முகம் மலர்ந்தது. தேனைக் குடித்தான். ஆகா, என்ன ருசி! அம்மாவுக்குத் தெரியாமல், பயந்து கொண்டே தேனைக் குடித்த போது அதில் ருசியே தெரியவில்லை. இப்பொழுது அம்மாவே கொடுக்கும்போது அதில் எவ்வளவு ருசி என்று சந்தோஷப் பட்டான்.



அம்மா "டேய் முனியா! இந்த நாயை எடுத்துப் போய் அதன் வாயில் இருக்கும் தேனைச் சுத்தம் செய். அப்படியே மூத்துவின் வாயையும் கைகளையும் சுத்தம் செய்" என்று சொன்னாள். அம்மாவுக்கு நடந்தது முழுவதும் தெரியும் என்பது மூத்துவுக்குத் தெரிந்து விட்டது.



சௌடி அரேபியா — 1

ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக் முதலிய நாடுகளை வரிசையாகப் பார்வையிட்டுக் கொண்டு, பாலைவனம் பரந்து கிடக்கும் தீபகற்பமான சௌடி அரேபியா தேசத்துக்கு இப்போது வந்திருக்கிறோம்.

மத்திய கேந்திர நாடுகளுக்குள் பூகோள ரீதியாக மிகப் பெரியது அரேபியாதான். அது மத ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இஸ்லாம் மதத்தை ஸ்தாபித்த முகமது நபி நாயகம் பிறந்த காரணத்தினால் அரேபியாவின் தலைநகரமான மெக்காவும், மெடினாவும் முஸ்லிம்களின் புனித ஸ்தலங்களாக விளங்குகின்றன.

கிறிஸ்துவ சகாப்தம் ஆரம்பமான பின் 570-ம் ஆண்டில் முகமது நபி நாயகம் பிறந்ததாகக் கூறுகிறார்கள். அவரது காலத்துக்கு முன் அரேபியா தேசத்தின் சரித்திரத்தில் குறிப்பிடத் தக்க சம்பவம் எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.


முகமது நபியின் காலத்தில்தான் இஸ்லாம் மதத்தை அடிப்படையாகக்கொண்டு அராபியர்கள் ஒன்று பட்டார்கள். முகமது நபியின் வாரிசுகளான கலீபாக்களின் ஆட்சியில் அராபியர்கள் மிகச் சக்தி வாய்ந்தவர்களாக விளங்கினர். ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய மூன்று கண்டங்களிலும் அவர்களுடைய சாம்ராஜ்யங்கள் ஏற்பட்டன.

ஆனால் 1258-ம் வருஷத்திலே பாக்தாத்தில் கலீபா வீழ்ச்சியுற்றதிலிருந்து, அரேபியாவின் பெருமை குன்ற ஆரம்பித்தது. பதினைந்தாவது நூற்றாண்டில் ஸ்பெயினிலிருந்து மூர்ஜாதியினர் (முஸ்லிம்கள்) விரட்டப்பட்டதிலிருந்து, ஐரோப்பாவிலிருந்த அராபிய சாம்ராஜ்யம் அடியோடு மறைந்தது.

பதினைந்தாவது நூற்றாண்டில் துருக்கியர்கள் அரேபியாமீது படையெடுத்து அங்கு தங்களுடைய ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொண்டனர். இருந்தாலும் யெமன் முதலிய சில பகுதிகள் மாத்திரம் துருக்கியர்களிடமிருந்து விடுதலையடைந்து சுயேச்சை பெறுவதில் வெற்றி பெற்றன.

பல்வேறு போட்டிக் கட்சித் தலைவர்களுக்குள் பலப் பரீட்சை நடந்த பிறகு இறுதியாக 1920-ம் வருஷம் இபின் சௌத் மன்னர் அரேபியாவில் தம்முடைய செல்வாக்கை ஸ்தாபித்துக் கொண்டார். பாலைவன வாசிகளாகவும் காட்டு மிராண்டிகளாகவும் இருந்த மக்கள் தங்களுடைய அநாகரிக வாழ்க்கையையும் கொள்ளை, கொலை முதலிய விபரீத முறைகளையும் கைவிடுவதற்காக, 'ஒரு கையில் குரானையும் ஒரு கையில் கலப்பையையும் பிடியுங்கள்' என்று உபதேசம் செய்தார். குரானை வாசிப்பதிலும் விவசாயத்திலும் அவர்கள் ஈடுபடுவார்களாயின், கொள்ளை, கொலை முதலிய அநாகரிக முறைகளைக் கைவிட்டு விடுவார்கள் என்பது இபின் சௌத் மன்னரின் எண்ணம்.

1914-ம் ஆண்டில் முதலாவது மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன் அரேபியா முழுவதும் தங்களுடைய ஆதிக்கத்தை



ஏற்படுத்த வேண்டும் என்று யெமன் பிரதேசத்தைச் சேர்ந்த இமாம், நெஜத் பிரதேசத்தைச் சேர்ந்த இபின் சௌத் முதலிய பல அராபியத் தலைவர்களுக்குள் போட்டா போட்டி உண்டாயிற்று. அந்தப் போட்டியைத் துருக்கியர்கள் தங்களுக்குச் சாதகமாக உபயோகப் படுத்திக் கொள்ள முயற்சித்தனர்.

அவ்வமயம் அரேபியாவின் ஒரு பகுதியில் துருக்கித் துருப்புகள் இருந்தன. எனினும் துருக்கியர்களின் அந்தரங்க நோக்கத்தை அறிந்த இபின் சௌத் திடீரென்று துருக்கியர்களைத் தாக்கியதால் மேற்படி துருப்புகள் சரண்புக நேர்ந்தது.

* * *

இபின் சௌத் வஹாபியர்கள் என்ற முஸ்லிம் பிரிவினரின் தலைவர். பதினெட்டாம் நூற்றாண்டில் அப்துல் வஹாப் என்பவரால் மேற்படி பிரிவு சிருஷ்டிக்கப்பட்டது. முஸ்லிம்களிடையே சில முக்கியமான சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே அந்தப் பிரிவினரின் கொள்கை.

முதலாவது மகா யுத்தம் நடந்த காலத்தில் பிரிட்டிஷாரின் சூழ்ச்சிகளுக்கு அரேபியா விளைக்களமாக இருந்தது. பல்வேறு அராபிய சிற்றரசர்களையும் தங்கள் வசப்படுத்திக் கொள்வதற்காகப் பிரிட்டிஷார் பிரிட்டனிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு வந்து வாரி இறைத்தனர். மேற்படி சிற்றரசர்களுக்கு எத்தனையோ ஆசை வார்த்தைகள் கூறினர். துருக்கிக்கு விரோதமாகப் புரட்சி செய்யும்படி அவர்களைத் தூண்டி விட்டனர்.


இதன் மத்தியில் துருக்கியர்களும் தங்களுடைய கைவரிசையைக் காட்ட முற்பட்டார்கள்.

முதலாவது மகாயுத்தம் மூண்டதும் பிரிட்டனுக்கு விரோதமாக மதப்போர் தொடங்கும்படி முஸ்லிம் நாடுகளைத் துருக்கி தூண்டிவிட முயற்சித்தது. ஆனால் அந்த முயற்சி கோரிய பலனைக் கொடுக்கவில்லை. அது பிரிட்டிஷாரின் தந்திரம் காரணமாக, துருக்கிக்கு ஆபத்தாகவும் முடிந்தது. பிரிட்டிஷாரின் பிரசாரத்துக்கு இணங்க, பல அராபியத் தலைவர்கள் துருக்கிக்கு விரோதமாகப் புரட்சி செய்ய ஆரம்பித்தனர். அப்போது பிரிட்டிஷார் இபின் சௌத் மன்னருக்குப் பக்கபலமாக இருந்தார்கள். பிரிட்டிஷாருக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்றும், யுத்தத்தில் நடுநிலைமை வகிப்பதென்றும் இபின் சௌத் கூறியதின் மீது, அவர்கள் அவருக்கு வருஷத்துக்கு அறுபதாயிரம் பவுன் வீதம் உதவித் தொகையும் கொடுக்கலாயினர்.

அதே சமயம் மெக்கா அதிபரான ஷெரீப் ஹுசேனுடனும் பிரிட்டிஷார் சமரசப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தனர். மகாயுத்தத்தில் தங்களுக்கு இராணுவ உதவி அளித்தால், தாங்கள் அரேபியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதாக பிரிட்டிஷார் அவருக்கு உறுதி கூறினர்.

அதைக் கேட்ட ஷெரீப் ஹுசேனுக்குத் தாம் அரேபியா முழுவதையும் ஒன்று சேர்த்து ஆட்சி புரியவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. எனவே, ஹுசேனின் குமாரரான பெய்ஸல் பிரிட்டிஷாருக்கு உதவியாக அராபியத் துருப்புகளை அனுப்பினார். இதனால் இபின் சௌத் மன்னருக்குப் பிரிட்டிஷார் மீதும் ஹுசேன் குடும்பத்தின் மீதும் சந்தேகம் உண்டாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் இபின் சௌத் மன்னரின் அதிர்ஷ்டவசமாக, முஸ்லிம் நாடுகளிலும் இந்தியாவிலும் ஹுசேன் மன்னருக்கு இருந்த ஆதரவும் செல்வாக்கும் குறையத் தொடங்கின.



பனித்திரை

ரா. பாலகிருஷ்ணன்

வலது கையில் புத்தகக் கட்டும் இடக் கரத்தில் டென்னிஸ் மட்டையும் தாங்கி ஒயிலாக நடந்து வந்து வீட்டுக்குள் பிரவேசித்த லலிதா, தன் தந்தை கட்டிலில் சுருண்டு படுத்திருப்பதைக் கண்டதும் பதைத்து நின்றாள். அதுவரை அவள் முணுமுணுத்துக் கொண்டிருந்த பாட்டும் தானாகவே நின்று விட்டது.

"என்ன அப்பா, உடம்புக்கு? ஏன் படுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இந்த நேரத்தில் நீங்கள் படுத்துக் கொள்ளும் வழக்கமேயில்லையே?" என்று கேள்விமேல் கேள்விகளை அடுக்கியவளாய்த் தந்தையின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். தளிர் போன்ற அவளது கை விரல்களின் ஸ்பரிசம் பட்டதும் விசுவம் கண் விழித்தார்.

ஜுரத்துக்கு அறிகுறி எதுவும் இல்லையென்றாலும், வியர்வையால் அவர் முகம் முழுவதும் நனைந்திருந்தது.

"கொஞ்சம் களைப்பு மேலிட்டுவிட்டது. அவ்வளவுதான். நீ பயப்படும்படி ஒன்றுமில்லையம்மா! இப்படி உட்கார்ந்து கொள்" என்றார் விசுவம். அவர் குரல் வழக்கம் போல்தானிருந்தது. நாற்காலியைத் தந்தையினருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த லலிதா, அவர் முகத்தை உற்று நோக்கினாள். அவர் முகத்தில் இனமறியாத ஒரு வேதனையின் சாயல் படர்ந்திருந்தது.

ஏராளமான செல்வத்துக்கு அதிபதியான தன் தகப்பனார் எதைக் குறித்து இப்படி வாட்டமுற்றிருக்கிறார் என்பது அவளுக்கு ஒரு புரியாப் புதிராகவே இருந்தது.

"விசேஷமாக எதுவுமில்லை, லலிதா! பெண்ணைப் பெற்றவர்கள் எல்லோருக்குமே சாதாரணமாக ஏற்படக்கூடிய அந்த ஒரே கவலைதான்!" என்று அவர் சம்பிரதாயமாகப் பீடிகை போட்ட பின்னர்தான் அவளுக்கு விஷயம் விளங்கியது.

லலிதா ஏதோ சொல்ல வாயெடுத்தவள் ஒருகணம் தயங்கி விட்டுப் பிறகு, "நான் நினைப்பது மட்டும் சரியானால், உங்கள் கவலையைத் தீர்த்து வைக்க என்னாலேயே முடியும்" என்றாள். இதைக் கேட்ட விசுவம் உற்சாகத்துடன் எழுந்து உட்கார்ந்தார்.

"மாப்பிள்ளை தேடுகிறீர்கள், நீங்கள்! என் ஊகம் சரிதானே?" என்று கேட்டு விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் லலிதா — தன் நாணத்தை மறைக்க.

"சபாஷ்! கண்டு பிடித்துவிட்டாயே, லலிதா! உன் அம்மா உயிரோடிருந்தால் இதற்குள் ஒரு வேளை நீ ஒரு குழந்தைக்குக் கூடத் தாயாராகியிருப்பாய். பாவம்! அவள் இருந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை! உன் மழலை மொழிகளைக் கேட்டுவிட்டுப் போய் விட்டாள்."

பேசிக் கொண்டே வந்த அவருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. லலிதாவின் கண்களும் கலங்கிச் சிவந்தன.

ஒருவிதமாகத் தன் உள்ளத்து உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு விசுவம் தொடர்ந்து கூறினார். "லலி! உனக்குப் பதினேழு வயது ஆகிவிட்டது. நான் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன் என்பதும் உலகறிந்த விஷயம். காலாகாலத்தில் உன்னைப் பொறுப்புள்ள ஒருவனிடம் ஒப்படைத்து விட்டால், அப்புறம் நான் நிர்விசாரமாயிருப்



எஜமான் :—முட்டாள்! ஒரு தபால் கார்டு வாங்கிக் கொண்டு வருவதற்கு இத்தனை நேரமா?

வேலைக்காரன் :— எஜமான்! நீங்கள் தானே எந்தச் சாமான் வாங்கினாலும் ஒரு இடத்துக்கு நாலு இடமாகப் பார்த்து விசாரித்து வாங்கவேண்டும் என்று சொன்னீர்கள்?

பேன். உன் குணத்துக்கும் அழகுக்கும் ஏற்ற வரன்தான் சுலபமாகக் கிடைக்க மாட்டேனென்கிறது!"

"உங்கள் இஷ்டப்படி ஒரு வரனை நானே சிபாரிசு செய்யட்டுமா, அப்பா?" என்று லலிதா அசாதாரணத் துணிச்சலுடன் கேட்டாள். அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.

'தன் மகள் யாரோ ஒருவனிடம் மனத்தைப் பறி கொடுத்து விட்டாள்; அவள் வாழ்க்கையில் காதல் புகுந்து விளையாடத் தலைப்பட்டுவிட்டது' என்பதை நொடியில் உணர்ந்து கொண்டார் விசுவம். ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், "சொல்லேன்! அப்படி யாராவது ஒருவனை நீயே தேர்ந்தெடுத்து விட்டால் என் கவலை தீர்ந்தது. உன் சுயம்வரத்துக்கு இப்போதே ஏற்பாடு செய்கிறேன். சங்கோசப் படாமல் சொல்லு. நீயோ படித்தவள். நீ யோசிக்காமல் ஒரு முடிவுக்கு வரக் கூடியவளல்ல. உன் சொந்தப் பிரச்னையில் உனக்கில்லாத ஆர்வமோ, சிரத்தையோ எனக்கு வந்துவிடப் போகிறதில்லை. இது விஷயத்தில் உன் அபிப்பிராயத்துக்குத்தான் நான் பிராதான்யம் அளிப்பேன். மனம் விட்டுச் சொல்லு" என்று விசுவம் உறுதியளித்தார்.

அந்த உறுதியினின்றும் பிறந்த தைரியத்துடன் லலிதா பேசினாள். "அவர் பெயர் சுகுமாரன். பி. ஏ. (ஆனர்ஸ்) கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கிறார். சென்ற வருடம் எங்கள் கல்லூரியில் 'கார்னிவல்' நடந்ததே, ஞாபகமிருக்கிறதா? அந்தக் கலாட்டாவில் என்னைப் போன்ற பல மாணவிகள் பத்திரமாக வீடு வந்து சேரப் பெரிதும் உதவி செய்தார். அப்போதுதான் அவர் முதன் முதலாக எனக்கு அறிமுகம் ஆனார். மிகவும் தங்கமான குணமுடையவர். எல்லாவிதத்திலும்......" என்று இழுத்தாற்போல் நிறுத்தினாள் லலிதா.

"எனக்கு மாப்பிள்ளையாகத் தகுந்தவர்! அதுதானே நீ சொல்ல வந்தது? எனக்கும் திருப்திதான். சரி, அவரது விலாசத்தைக் கேட்டு வருகிறாயா?" என்றார் விசுவம்.

"அவர் தந்தை ராமபத்திரன் மயிலாப்பூரில் இருக்கிறார். மாஜி ஜில்லா கலெக்டர் அவர்" என்று சொல்லி விட்டுத் தன் தந்தையின் சம்மதம் கிடைத்துவிட்டது குறித்து எல்லையற்ற பூரிப்புடன் அங்கிருந்து எழுந்து போய்விட்டாள் லலிதா.

"என்ன? ஜில்லா கலெக்டர் ராமபத்திரன் பிள்ளையா?" என்று விசுவம் மனக் கசப்புடன் திருப்பிக் கேட்டது லலிதாவின் காதுக்கு எட்டிவிராது. அவர் முகத்தில் ஆயிரம் கோணல்கள் தோன்றின. ஆயாசத்துடன் 'பொத்'தென்று படுக்கையில் சாய்ந்த விசுவம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

* * *

ஏறக்குறையப் பதினைந்து வருடங்களுக்கு முன் நிகழ்ந்த அந்தச் சம்பவம் திரைப் படம் போல் விசுவத்தின் மனத் திரையில் விரிந்தது.

அன்று விசுவநாதன் காரியாலயத்துக்குக் கிளம்பும் போது வழக்கத்தை விட நேரமாகி விட்டது. அன்று அவன் யார் முகத்தில் விழித்தானோ? வாழ்க்கையில் புயலடித்தது, இடி இடித்தது என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அவை யாவற்றையும் பரிபூரணமாக அன்று அநுபவித்தான் விசுவநாதன்.

காலையில் தூங்கி யெழுந்ததுமே குழந்தையின் உடம்பு 'கண, கண' வென்று சுட்டது. அவன் ஆபீசுக்குக் கிளம்பும்போது குழந்தைக்குக் காய்ச்சல் முற்றிவிட்டது. 'டாக்டரிடம் காண்பித்து விட்டுப் போகலாமே?' என்றாள் அவன் மனைவி. அவனுக்கும் அது தான் சரி யென்று பட்டது. ஒரு ரிக்ஷாவைத் தேடிப் பிடித்துக் குழந்தையுடன் டாக்டர் வீட்டுக்குச் சென்றான். 103 டிகிரி ஜுரம். ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எச்சரித்து விட்டு ஒரு ஊசி போட்டு, ஒரு பொட்டலம் மருந்தையும் கொடுத்தார் டாக்டர்.

வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் புறப்படும்போது மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டது. ஒரு மணி நேரம் தாமதித்து வந்தால் மேலதிகாரி—அதுவும்

புதிதாக டெபுடி கலெக்டர் பதவிக்கு உயர்ந்திருக்கும் ஆசாமி, சும்மா யிருப்பாரா?

"விசுவநாதன்! நீர் தாமதித்து வருவது இது முதல் தடவையல்ல. நான் பொறுத்துக் கொள்ளுவது இதுதான் கடைசித் தடவை!" என்று கர்ஜித்தார் டெபுடி.

விசுவநாதன் கெஞ்சும் குரலில் "ஸார்! இன்று குழந்தைக்கு உடம்பு சரியில்லை. டாக்டரிடம் போயிருந்தேன்..." என்றான். வார்த்தைகள் தடங்கலின்றி வெளி வரவில்லை. துயரம் நெஞ்சை அழுத்தும்போது நாக்கும் சொன்னபடி கேட்பதில்லையல்லவா?

டெபுடி குறுக்கிட்டார்: "அந்தக் கதையெல்லாம் எனக்குத் தேவையில்லை. உம் இஷ்டப்படி வந்து போக, இது தர்ம சத்திரம் இல்லை. குழந்தை, குட்டிகளைக் கவனித்துக்கொண்டு சௌக்கியமாக வீட்டிலேயே இருப்பதுதானே? ஆபீசுக்கு ஏன் வந்து தொலைய வேண்டும்?" என்ற மேலதிகாரியின் இடியோசையைச் செவிமடுத்த விசுவநாதன் தொங்கிய முகத்துடன் வாய் பேசாமல் தன் ஆசனத்துக்கு வந்து சேர்ந்தான்.

"என்னடா, விசுவம்! என்ன சொன்னான், இரண்ய கசிபு?" என்று குசலம் விசாரித்தான் டைபிஸ்ட் ராமசப்பு.

"குழந்தைக்குக் கடுமையான ஜுரம். காஷுவல் லீவு போட்டால் கத்தப் போகிறனே என்று பார்த்தால் ... இப்படியாகி விட்டது!" என்று அலுத்துக் கொண்டான் விசுவநாதன். அவன் தன் ஏழு வருட உத்தியோக வாழ்வில் இம்மாதிரி அமல் நடத்தும் டெபுடியைக் கண்டதே யில்லை! அவன் மட்டுமென்ன? டெபுடி கலெக்டர் ராமபத்திரன் என்றால் அந்தக் காரியாலயத்திலிருந்த எல்லாக் குமாஸ்தாக்களுக்குமே குலை நடுக்கமாய்த்தானிருந்தது.

"இரண்யன் முகத்திலே இன்று எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது. வீட்டிலே அவனுக்கு 'தேவி'யின் அர்ச்சனை கொஞ்சம் அதிகமோ என்னவோ? அதை உன் மீது வைத்துத் தாக்கி விட்டான்" என்று அநுதாபத்துடன் கூறினார் காஷியர்.

"இவர்களைப் போன்ற இரு தயவில்லாத பாவிகளால்தான் அந்நியர் ஆதிக்கம் இங்கே தான் பறக்கிறது. இல்லாவிட்டால் வெள்ளைக்காரன் என்றைக்கோ மூட்டை கட்டியிருப்பானே?" என்றார் ஹெட்கிளார்க் கிழவர். எந்த விஷயமாயிருந்தாலும் அதை வெள்ளைக்காரன் ஆட்சியில் பிணைத்துத்தான் பேசி முடிப்பார் அவர்!

எதிரிலிருந்த கடியாரம் ஒழுங்காக அதன் வேலையைச் செய்து கொண்டிருந்தது. விசுவநாதனுக்கு என்னவோ, வேலையில் மனம் செல்லவே யில்லை. மணி ஒன்றடித்தது. காஷியர் ஹோட்டலுக்குக் கிளம்பி விட்டார். ஹெட் கிளார்க்கும் மேஜையின் மீது டிபன் பொட்டணத்தைப் பிரித்துவைத்தார். விசுவநாதன் தீவிரமாக யோசித்தான்: "அரைமணி நேரம் இடை வேளை, டைபிஸ்ட் ராமசப்புவின் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்க் குழந்தையைப் பார்த்து விட்டுத் திரும்பினால் என்ன? ஐந்து நிமிஷம், பத்து நிமிஷம் அதிகமாகி விட்டாலும் தலையா போய்விடும்? ஏதாவது சால்ஜாப்பு சொல்லிக் கொண்டாகயிற்று.



இப்படியே உட்கார்ந்திருந்தால் மணி ஐந் தடித்தால் கூட வேலையில் கவனம் செல் லாது. போய் வந்தால் என்ன ?

"ஆனால்......எதிர்பாராத விதமாய் ஏதாவ தும் தாமதம் சேர்ந்து விட்டால்...? இங்கே இராமனிடம் மீண்டும் பல்லைக் காட்ட நேருமே?......"

"என் அப்பா! மத்தியானம் எங்கணமா?" என்ற ராமசப்புவின் குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தான் விசுவநாதன். பளிச்சென்று ஒரு முடிவுக்கு வந்தவனாய், "உன் சைக்கிளை எடுத்துக் கொண்டு என் வீடுவரை போய் விட்டு வருகிறேன். குழந்தையைப் பார்த்து விட்டு வந்தால்தான் மனத்துக்கு நிம்மதியா யிருக்கும் என்று தோன்றுகிறது" என்றான்.

"சரி, சீக்கிரம் வந்துவிடு" என்று சொல்லியனுப்பினான் டைபிஸ்ட்.

பத்தே நிமிஷங்களில் வீட்டையடைந் தான் விசுவநாதன். சைக்கிளை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே நுழையும்போது, ஆடிக்காற்றில் அதி உயரத்தில் பறக்கும் காற்றாடி போல் படபட வென்று அடித் துக் கொண்டது அவன் இருதயம். நல்ல காலம்! குழந்தை சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. அப்போதுதான் அவ னுக்குப் போன உயிர் மீண்டும் திரும்பி வந்தது போலிருந்தது.

சில நிமிஷங்களுக் கெல்லாம் மனைவி கொண்டு வந்த காப்பியை வாங்கி ஒரே மூச் சில் குடித்துவிட்டு விசுவநாதன் சைக்கிளில் ஏறிப் புறப்பட்டான். கொஞ்சதூரம் போன தும் 'படார்' என்ற சத்தத்துடன் சைக்கிள்



கணவன் :— இன்றைக்குத் தேதி பத்துத்தானே ஆகிறது? நீ எழு திக் கொடுத்த கடிதத்தில் பதி னைந்து என்று போட்டிருக்கிறாயே!

மனைவி :— ஆமாம். உங்களிடத் தில் கடிதத்தைக் கொடுத்துத் தபா லில் போடச் சொல்லுவதற்காகத் தான் அப்படித் தேதியைத் தள்ளிப் போட்டிருக்கிறேன் !

சக்கரத்தின் ரப்பர்க் குழாய் வெடித்து விட் டது. ஒரு கருங்கல் ஜல்லி செய்த வேலை!

அடுத்தகணம் டெபுடி கலெக்டர் ராமபத் திரனின் இரண்யாவதாரம் அவனது சொந்த மனத்தில் தோன்றி மறைந்தது. 'ஈசுவரா' என்று முணு முணுத்தபடியே சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தான்.

அவன் எதிர்பார்த்ததுபோல் டெபுடி அவன் மீது சீறி விழவுமில்லை. அவனை அழைத்து விசாரிக்கவு மில்லை. அவன் மனம் விவரிக்க இயலாத ஒரு ஏக்கத்தினால் —பயத்தினால் புழுங்கித் தவித்தது. மாலை வீடு திரும்பும் போது டைபிஸ்ட் ராமசப்பு ஏதோ அரைகுறையாகச் சொன்னதை அவ னால் நம்பவும் முடியவில்லை; நம்பாமலும் இருக்க முடியவில்லை.

சோகமே உருவாக வீடு திரும்பிய விசுவ நாதனைச் சிரித்த முகத்துடன் மனைவியும் குழந்தையும் வரவேற்றனர். சாதாரண நாட்களாயிருந்தால் அவன் நடந்து கொள் ளும் விதமே வேறு. ஆனால் அன்றைக்கோ அவன் வாய் திறக்காமல் அவர்களைத் தாண்டி உள்ளே சென்று விட்டான்.

"என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? இன்றைக்கு வேலை ரொம்பக் கடுமையோ ?" என்று கேட்டாள் அவன் மனைவி.

விசுவநாதனுக்கு என்ன சொல்லுவ தென்றே புரியவில்லை. அவன் மூளைதான் ஒரேயடியாகக் குழம்பிக் கிடந்ததே! சிறிது நேரத்துக் கெல்லாம் தட்டுத் தடுமாறிக் கொண்டு "ராமசப்பு சொன்னதுதான் தெரியும். இன்று காலையில் தாமதித்துப் போனதற்கே வக சகலா. மத்தியானம் இங்கே வந்து விட்டுப் போகும்போது வழி யில் சைக்கிள் ரிப்பேராகி விடவே, மீண்டும் தாமதமாகி விட்டது. போதாக் குறைக்குக் காலையில் ஒரே குழப்பத்துடன் கொஞ்ச நேரம் வேலை செய்ததில் ஏதோ ஒரு பெரிய தவறுதல் நிகழ்ந்து விட்டதாம். இருப்பதைப் பார்த்தால்..... ஏழு வருஷ உத்தியோகமும் வியர்த்தமாகிவிடும் போலிருக்கிறது!" என் றான். அதைச் சொல்லும் போது அவன் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது.

"நீங்கள் சொல்லுவது சரியாகப் புரிய வில்லையே?" என்றாள் அவள்.

"எனக்குந்தான் புரியவில்லை" என்றான் அவன் சுருக்கமாக.

அன்று மர்மமாக இருந்து அவனை வாட்டி வதைத்த அந்தச் சிக்கல் மறுநாள் தெளிந்து

விட்டது. ஒரு மாத நோட்டீஸ் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான்.

“கல்நெஞ்சன்! அவனிடம் எவ்வளவு மன்றாடியும் பிரயோஜனமில்லை!” என்று சொல்லியபடியே அந்தக் காகிதத்தைச் சுருட்டி மேஜைமீது வீசி யெறிந்தான்.

“பிள்ளை குட்டிக்காரராயிற்றே என்று கூடப் பார்க்காமல் இப்படிச் செய்து விட்டானே, பாவி!” என்று மனமாரச் சபித்தாள் அவன் மனைவி. அவனுக்கு அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை. மனைவியையும் குழந்தையையும் பிரிந்து வடக்கே வேலை தேடிச் சென்றான். சில மாதங்களில் திரும்பி வந்து இருவரையும் அழைத்துக் கொண்டு போனான். அடுத்த மாதம் மற்றொரு பேரிடி! அவன் மனைவி ஒரு வாரம் மலேரியா ஜுரத்தினால் அவஸ்தைப் பட்டு விட்டு, குழந்தையை அவன் தலையில் கட்டி விட்டுப் போய் விட்டாள்.

மேலும் அங்கே இருக்கப் பிடிக்காமல் விசுவநாதன் குழந்தையுடன் பம்பாய்க்குப் புறப்பட்டான். அதிர்ஷ்ட தேவதை பம்பாய் சினிமா ஸ்டுடியோ ஒன்றில் அவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். சில வருஷங்களில் வெறும் விசுவநாதன்—மாஜி குமாஸ்தா விசுவநாதன்—பிரபல டைரக்டர் விசுவமாக மாறி விட்டான். கார், பங்களா, புகழ் எல்லாம் அவனைத் தேடிவந்து சரண் புகுந்தன. குழந்தை லலிதா செல்வத்தில் புரண்டாள். லலிதாவின் மீதுள்ள பாசத்தினால் வாழ வேண்டும் என்ற ஆசை மீண்டும் அவன் உள்ளத்தில் தளிர் விட்டது.

* * *

“சாப்பிடாமலேயே தூங்கி விட்டீர்களே, அப்பா!” என்ற லலிதாவின் குரல் கேட்டுத் திரும்பினார் விசுவம். அவர் உண்மையில் தூங்கவா செய்தார்?

“ஓகோ! மாப்பிள்ளை சுலபமாகக்கிடைத்து விட்டால், கவலை பறந்து விட்டதாக்கும்! சாப்பாடு ஆறிவிடும். நான் போய் இலையைப் போடுகிறேன். சீக்கிரம் சாப்பிட வாருங்கள்” என்று நாணம் கலந்த குரலில் கூறிவிட்டு லலிதா சமையலறைப் பக்கம் சென்றாள்.

அவள் அங்கிருந்து அகன்றதும் விசுவத்தின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. அவர் உள்ளத்தில் புயலும், தென்றலும் மாறி மாறி வீசின. உக்கிரமான போர்; மறுகணம் மோகன அமைதி! அவருள்ளிருக்கும் மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையே ஒரு மகத்தான சிந்தனைப் போர் மூண்டது.

“அந்தக் கிராதகன் பிள்ளைக்கா என் பெண்ணைக் கொடுப்பேன்? என் மனைவி இறக்க நேர்ந்ததே அந்தப் பாவியினால் தானே? சே! இந்தச் சம்பந்தம் கூடவே கூடாது. லலிதாவிடம் விவரமாகக் கூறி அவள் மனத்தை மாற்றிவிட வேண்டும்’—மிருகபுத்தியின் வாதம் இது.

மறு விநாடி குரோதம் மறைந்ததும், மனித புத்தி தலை தூக்கியது. ‘அவள் மனத்தை மாற்றுவது அவ்வளவு லேசான காரியமா? அப்படியே மாற்றி விட்டால்கூட அது நியாயமில்லையே? இவ்வளவு நாட்களும் அரும்பாடு பட்டு வளர்த்த பெண்ணை, அவளுடைய இஷ்டத்துக்கு மாறாக நடக்கத் தூண்டுவது தர்மமான செய்கையா?’

மிருக புத்தியின் வேகம் லகுவில் தணிந்து விடுமா? பேயாட்டம் ஆடி விட்டுத் தானே அது ஓய்வு பெறும்? ‘நான் வேலையை இழந்து சோற்றுக்குத் திண்டாடியதை வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதே? அந்தக் கல்நெஞ்சன்தானே அதற்குக் காரணம்? என் பெண்ணை அவன் பிள்ளைக்கா?......சே! ஒருக்காலுமில்லை.”

‘தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்; பின்னர் தருமம் வெல்லும்’ என்றபடி இறுதியில் அவரது மனித புத்திதான் வென்றது.

குழந்தையின் சுகந்தானே தகப்பனின் சுகம்? பெரியவர்களுக்கிடையே எப்போதோ ஒரு காலத்தில் மூண்ட மனக்கசப்புக்கு, ஒன்றுமறியாத இளம் பெண்ணின் இன்பத்தைப் பணயமாக வைத்துச் சூதாடுவதா? மேலும், தகப்பன் கல்நெஞ்சன் என்றால் பிள்ளையும் அவ்விதமே இருக்க வேண்டும் என்பதுண்டா? அவன் ஏன் நல்லவனாக இருக்கக் கூடாது? லலிதா அவனுடன் பழகி, அவன் குணத்தை அறிந்துதானே ஒரு முடிவுக்கு வந்திருக்கிறாள்? தவிரவும், என்னுடைய இந்தக் குபேர வாழ்வுக்கு ராமபத்திரன்தானே மறைமுகமாகக் காரணமாயிருந்திருக்கிறார்? அன்று அவர் என்னை வேலையிலிருந்து நீக்கியிரா விட்டால், இன்று நான் கஷ்டதசையில் ஒரு ஏழைக் குமாஸ்தாவாகத்தானே இருந்து கொண்டிருப்பேன்? வாழ்வின் போக்கை நிர்த்தாரணம் செய்வது மனிதனால் முடியாத காரியம்.

இந்த உணர்வு பிறந்ததும், அவர் மனக் கண்களின் முன்னாலிருந்த பனித்திரை விலகியது. மகளின் இச்சையைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டுமென்ற ஒரே எண்ணந்தான் நிலைத்து நின்றது.



"அரவிந்தா! நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும், போய் வா!" என்று ஆசீர்வதித்து அனுப்பினார் கிருஷ்ண அய்யங்கார்.

குருவினிடம் விடை பெற்றுக் கொண்ட அரவிந்தன் அஞ்சனாவிடம் விடைபெற்றுக் கொள்ளுவதற்காக வீட்டுக்குள் நுழைந்தான். தலை குனிந்தபடி நின்றிருந்த அஞ்சனாவைப் பார்த்து, "அஞ்சனா! நான் போய் வரட்டுமா?" என்று கேட்டான். அவள் சரியென்பது போல் தலையசைத்தாள். அவள் கண்களில் நீர் ததும்பியது.

"என்ன அஞ்சனா அது?"

"உம்... ஒன்றுமில்லை. இன்னும் கொஞ்ச நாட்களுக்கு உங்கள் வேணுகானத்தைக் கேட்க முடியாதே என்று வருத்தமாக இருக்கிறது."

"பொறுத்துக்கொள், நான் மாயவரம் போய் வந்து விடுகிறேன். பிறகு உனக்குத் திருப்தி உண்டாகும் வரை வேணுகானம்தான்! சரிதானே?"

மழையினூடே பிரகாசிக்கும் வெய்யிலைப் போன்று புன்னகையொன்று அவள் கன்னத்தைக் குழித்தது. அரவிந்தன் அந்த நினைப்புடனே வீட்டை விட்டு வெளியே வந்தபோது, கோபாலன் தன்னைக் குரோதத்துடன் வெறித்துப் பார்ப்பது தெரிந்தது.

அரவிந்தனும் கோபாலனும் திருவானைக்காவல் கிருஷ்ணையங்காரிடம் வேணுகானம் பயிலும் மாணவர்கள். கிட்டத்தட்ட ஒரே வயதுடையவர்கள். ஆனால் கலைவாணி தன் கிருபையை அரவிந்தனிடமேய வாரி இறைத்திருந்தாள். கோபாலனும் புல்லாங்குழல் வாசிப்பான். ஆனால் அது சர்வ சாதாரணமாகவே இருக்கும். ஆனால் அரவிந்தன் வேய்ங்குழலைக் கையில் எடுத்து விட்டால் நாத வெள்ளம் கேட்பவர்களைச் சௌந்தர்ய உலகத்துக்கே இழுத்துச் சென்று விடும். சாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மாவின் வேணுகானம் போலவே, அரவிந்தனின் புல்லாங்குழல் இசை எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தது. அவனுடைய மேதையைக் கண்டு குரு கிருஷ்ணையங்காரே மூக்கின் மீது விரலை வைத்தபோது, சாதாரண மனிதர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

தன் நண்பன் புல்லாங்குழல் வாசிப்பதில் தன்னை மிஞ்சி விட்டானே என்று கோபாலன் வருத்தப்படவேயில்லை. ஆனால் மகுடியின் முன் ஆடும் பாம்பு போல் அஞ்சனா அரவிந்தனின் வேணுகானத்தைக் கேட்டு மனம் நெகிழ்ந்ததைக் கண்டுதான் அவனுடைய உள்ளம் கொதித்தது.

அஞ்சனா கிருஷ்ணையங்காரின் செல்வப் புதல்வி; பருவமங்கை. அவளுடைய அழகைக் கண்டு அரவிந்தனும் கோபாலனும் சொக்கிப் போனார்கள். முதலில் அஞ்சனா அவ்விரு இளைஞர்களையும் ஒரே மாதிரியாகத்தான் பாவித்தாள். நாட்கள் செல்லச் செல்ல, அரவிந்தனின் கலைத்திறனைக் கண்டு வியந்து அவனிடம் கொஞ்சம் தாராளமாகவே பழக ஆரம்பித்தாள்.

அதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற அரவிந்தன் தன் கலைத்திறனை மேன் மேலும் அபிவிருத்தி செய்து கொண்டேயிருந்தான். தினம் தினம் ஒரு புதிய கீதம், ஒரு புதிய நாதம், ஒரு புதிய பாணி அவனுடைய புல்லாங்குழலின் வழியே வந்து, குருவின் மனத்தையும் அஞ்சனாவின் உள்ளத்தையும் குளிரச் செய்தன. ஆனால் கோபாலனின் உள்ளமோ பொறாமைத் தீயால் கருகித் தீய்ந்து கொண்டிருந்தது!

தன்னை நோக்கி எவ்வளவு அசட்டையாக இருக்கிறாள் அஞ்சனா? எல்லாம் இந்த அரவிந்தப் பயலினால் அல்லவா? அவனைத் தொலைத்து விட்டால் அஞ்சனாவின் மனம் தானாகவே நம்மிடம் திரும்பாதா?—இவ்வாறெல்லாம் கோபாலனின் மனத்தைச் சிந்தனை வண்டு ஆலைத்துக் கொண்டிருந்தது. ஆகவே, தன் எண்ணத்தைத் தருணம் பார்த்து நிறைவேற்றக் காத்திருந்தான் கோபாலன்.

அப்பொழுதுதான் அரவிந்தனை மாயவரத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டிருந்தார் பெரியவர். தக்க ஆதரவின்றித் தன் சிஷ்யனின் கலை வீணாகப் போகக் கூடாது என்று நிச்சயித்த அவர் மனம் தர்மலிங்க முதலியாரை நினைத்தது.

தர்மலிங்க முதலியார் மாயவரத்தில் பெரிய பிரமுகர். நல்ல செல்வாக்கு உள்ளவர். கலைகளைப் போற்றி வளர்க்கும் வள்ளல். அத்துடன் கிருஷ்ணையங்காருக்கு அத்யந்த நண்பர். ஆகவேதான் கிருஷ்ணையங்கார் அரவிந்தனுக்கு வழி செய்யும்படி தன் சிநேகிதரான முதலியாருக்கு எழுதினார். அதற்குத் தர்மலிங்க முதலியார் தன்னால் முடிந்ததைக் கட்டாயம் செய்வதாகப் பதில் எழுதவே, மேற் கொண்டு நடக்க வேண்டியதைக் கவனிக்கலானார்.

* * *

தன் குரு கொடுத்த கடிதத்துடன் மாயவரம் சென்று, தர்மலிங்க முதலியாரைப் பார்த்தான் அரவிந்தன். அவர், அவனை வரவேற்று, ஆசனத்திலிருத்தி "என்னால் முடிந்ததைச் செய்கிறேன். முதலில் நான் உன் கலையின் சிறப்பை அறிய வேண்டும்" என்றார்.

தன் புல்லாங்குழலை எடுத்து இசைக்க ஆரம்பித்தான் அரவிந்தன். அவன் எழுப்பிய சப்த ஜாலங்களின் இன்னிசையைக் கேட்டு ஸ்தம்பித்துப் போன தர்மலிங்க முதலியார், "பேஷ்! இந்த ஊர் ஆலயத்தில் இன்னும் பத்து நாட்களில் வசந்தோற்சவம் துவங்கும். தினமும் நீ கச்சேரி செய்ய ஏற்பாடு செய்கிறேன். உன் கலைக்குத் தக்க சன்மானமும் நானே அளிக்கிறேன்" என்றார்.

இந்த நற்செய்தியைத் தன் குருவுக்குக் கடிதமூலம் தெரிவித்தான் அரவிந்தன். கிருஷ்ணையங்கார் சந்தோஷத்துடன் அச்செய்தியை எல்லோருக்கும் தெரிவித்தார்.



அதைக் கேட்ட கோபாலனின் வயிறு எரிந்தது. தன் ஊருக்குப் போய் வருவதாகக் கிருஷ்ணய்யங்காரிடம் சொல்லிவிட்டு மாயவரம் வந்து சேர்ந்தான்.

வசந்தோற்சவம் ஆரம்பமாகியிருந்தது. எங்கும் அரவிந்தனின் வேணுகானத்தைப் பற்றியே பேச்சாக இருந்தது. "அடடா! என்ன தெய்வீகமான கலை! உலக சிந்தனைகளையெல்லாம் அகற்றி, இறைவன் திருவடிகளையன்றோ நம் கண் முன் நிறுத்துகிறது. இவனுடைய புல்லாங்குழலின் இதம்! கிருஷ்ணய்யங்காரின் சிஷ்யன் அவரையே மிஞ்சி விடுவான் போல் இருக்கிறதே!" என்று எல்லோரும் வியந்தார்கள். அதைக்கண்ட கோபாலனுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. நாளுக்கு நாள் வளரும் அரவிந்தனின் புகழைக் கேட்டால் அஞ்சனாவின் மனத்தில் நமக்கு எப்படி இடம் கிடைக்கும்? ஆகவே, அரவிந்தனை எப்படியாவது கவிழ்க்க வேண்டும் என்று தீர்மானித்தான் கோபாலன்.

வசந்தோற்சவம் முடியும் தருணம். மாயவரத்தை விட்டுத் தன் குருவின் ஊரையடைந்த கோபாலன் அவரெதிரில் கைகட்டி வினயத்துடன் நின்றான்.

"என்ன கோபாலா?"

"ஒன்றுமில்லை, அரவிந்தனைப் பற்றி..."



"என் செருப்பை எவனோ அடித்துக் கொண்டு போய் விட்டான், ஸார்! அயோக்கியன்! நேற்று இரண்டு கல்யாணங்களுக்குப் போயிருந்தேன். இரண்டாவது கல்யாண வீட்டில் தான் அது போயிருக்க வேண்டும்!"

"ஏன் முதல் கல்யாண வீட்டில் போயிருக்கக் கூடாது?"

"அது எப்படி முடியும்? அங்கேயிருந்து தானே அதை எடுத்துக் கொண்டு வந்தேன்!"

"எல்லோரும் வானளாவப் புகழ்கிறார்கள் என்றுதானே சொல்லப் போகிறாய்?"

"இல்லை...வந்து...ஆமாம். எல்லோரும் அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால்..."

"நீ சொல்லவில்லையாக்கும்?"

"நானும்தான் சொல்கிறேன். ஆனால் சில கெட்ட பழக்கங்கள் அவனிடம் தோன்றியிருக்கின்றன."

"என்ன! அரவிந்தனுக்கா? கெட்ட பழக்கங்களா?"

"ஆமாம், கையில் பணம் துள்ளவே செய்வது என்னவென்று அறியாது......"

"கோபாலா! நீ என்ன சொல்கிறாய் என்று உனக்குத் தெரியுமா? இது உண்மையில்லை. ஆனால்..."

"குரு! என்னிடம் நீங்கள் கோபிக்கக்கூடாது. கண்ணால் பார்த்ததைத்தான் நான் சொல்கிறேன்."

"நீ எங்கே மாயவரத்துக்குப் போனாய்?"

"அதற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். எங்களூருக்குப் போய்விட்டு, அப்படியே அரவிந்தனையும் பார்க்கலாம் என்று போனேன். அப்பொழுதுதான்..."

"நேற்றுக்கூட தர்மலிங்க முதலியார் கடிதம் எழுதியிருக்கிறாரே. அதில் ஒன்றும்......"

"அவரிடம் அதையெல்லாம் அவன் காண்பித்துக் கொள்வானா?"

"ஆனால் நீ சொல்வதை நான் கொஞ்சமும் நம்பவில்லை."

"நம்புவதற்காக நான் சொல்லவில்லை. பின்னால் ஒருநாள் ஏன் சொல்லவில்லை என்று நீங்கள் கேட்காதிருக்கவே, இப்பொழுது எச்சரிக்கிறேன்."

இதைக் கிருஷ்ணய்யங்கார் நம்பாவிட்டாலும், அவர் மனம் வேதனைக்குள்ளாயிற்று. 'ஒருவேளை, தான் அரவிந்தனை அதிகம் நேசிப்பது கண்டு, பொறாமையினால் கோபாலன் உளறுகிறானா? அல்லது அஞ்சனாவின் மனத்தில் அரவிந்தனைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயம் விழ அவ்வாறு செய்கிறானா?' என்று ஒன்றும் புரியாமல் தவித்தார் அவர்.

ஒருநாள்; இரவு நேரம். 'சோ'வென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது. இடியும் மின்னலுமாக இருந்தது. மரங்கள் பேழ்விழுந்து விடுவதுபோல் பயங்கரமாக அசைந்தாடின. அந்நேரத்தில் கதவை யாரோ தட்டவே கிருஷ்ணய்யங்கார் எழுந்து சென்று திறந்தார்.

வெளியே சொட்டச் சொட்ட நனைந்தபடி அரவிந்தன் நின்றிருந்தான். அவனுடைய கையில் ஒரு சிறு மூட்டையிருந்தது. அதிலே புல்லாங்குழலும் இருந்தது. ஆச்சரியத்துடன், "அரவிந்தா!

"என்ன இது? ஏன் இப்படி மழையில் நனைந்துகொண்டு வந்திருக்கிறாய்?" என்று கேட்டார் கிருஷ்ணையங்கார்.

அரவிந்தன் வீட்டினுள் நுழைந்து, அச்சிறு மூட்டையைத் தன் குருவின் கையில் கொடுத்தான். பிறகு, "நடுவழியில் நான் வந்த மாட்டுவண்டி விபத்துக்குள்ளாகியது. ஆகவே இந்த மழையில் நடந்து வரவேண்டியதாயிற்று" என்று விளக்கினான்.

"உள்ளே போய் முதலில் ஈரத்துணிகளைக் களைந்தெறி. பிறகு பேசலாம்" என்று தன் குரு கூறவே அவன் பேசாமல் உள்ளே சென்றான். பெரியவர் அவன் கொடுத்த மூட்டையை அவிழ்த்தார். அதில் வெள்ளி நாணயங்களாக ஐந்நூறு ரூபாய்கள் இருந்தன.

அங்கே வந்த அரவிந்தன், "தர்மலிங்க முதலியார் தங்கமான மனிதர். வசந்தோற்சவத்தில் நடந்த என் கச்சேரிகளுக்காக ஐந்நூறு ரூபாய் அளித்தார். இனிமேல் நல்லகாலம் ஆரம்பமாகிறது. என் வாசிப்பை மாயவரத்தில் கேட்ட பலர் என் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்வதாக வாக்களித்துள்ளார்கள். உங்கள் ஆசி எனக்கு எப்பொழுதும் இருக்கவேண்டும்." என்றான்.

"கட்டாயம் இருக்கும். உன்னைச் சிஷ்யனாக அடைந்தது என் பாக்கியம்."

"குரு! நான் மாயவரத்தில் இருந்தபோது உங்களைப் பற்றியும், அஞ்சனாவைப் பற்றியுமே சிந்தித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது உங்களிடம் வந்து சேர்ந்த பிறகு தான் என் மனம் நிம்மதியுற்றது. உங்களுக்குக் காணிக்கையாக இந்த ஐந்நூறு ரூபாய்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்."

"அரவிந்தா! நீதான் உண்மைச் சீடன்" என்று சொல்லிய பெரியவரின் குரல் உணர்ச்சி வசப்பட்டுக் கம்மியது. இப்பேர்ப்பட்ட குணசீலனைப் பற்றியா கோபாலன் அவதூறாகப் பேசினான்? அம்மாதிரி ஒருநாளும் இருக்காது. எல்லாம் சுத்தப் பொய் என்று மனத்துள் சொல்லிக் கொண்டார்.

மறுநாள் அரவிந்தனின் முகத்தில் களையே யிருக்கவில்லை. பெரியவர், "என்ன அரவிந்தா, ஏதோ போல் இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை!" என்று இழுத்தாற்போல் பதில் வரவே, அவனுடைய உடம்பைத் தொட்டுப் பார்த்தார். அனலைப் போல் சுரம் தகித்துக் கொண்டிருந்தது.

"என்ன காரியம் செய்திருக்கிறாய் நீ? மழையில் நனைந்துகொண்டு யாராவது இப்படி வருவார்களா? எங்காவது மழைக்கு ஒதுங்கி யிருந்துவிட்டு, மழை விட்ட பிறகு வரக்கூடாதோ? உடம்பு நெருப்பாய்க் கொதிக்கிறது. போ. உள்ளே போய்ப் படுத்துக்கொள்" என்று அவனை அன்புடன் கடிந்து விட்டு, "அஞ்சனா! அரவிந்தனுக்கு என் கம்பளிப் போர்வையைக் கொடு. போர்த்துக் கொண்டு தூங்கட்டும். சுரம் தானாகவே பறந்து போய்விடும்" என்று தன் புதல்விக்கும் உத்தரவிட்டார்.



நோயாளி (பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்):— டாக்டர் ஸார், உங்களுக்கு முன்னாலிருந்த டாக்டரை விட உங்களைக் கண்டால் எங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடிக்கிறது!

டாக்டர் (சந்தோஷத்துடன்):— அப்படியா? ஏன்?

நோயாளி:—உங்களைப் பார்த்தால் எங்களிலே ஒருத்தர் மாதிரியே இருக்கிறது!

ஆனால் அந்தப் பாழும் சுரம் சீக்கிரம் போவதாயில்லை. ஒரு வாரமாகியும் குணத்தைக் காணாத கிருஷ்ணையங்கார், தம்மிடமிருந்த நாட்டு மருந்து புத்தகத்தைப் புரட்டினார். "சரி, இதைக் கொடுத்துப் பார்ப்போம்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். பிறகு கோபாலனைக் கூப்பிட்டுச் சில மூலிகைகள் கொண்டு வரச் சொன்னார்.

அஞ்சனா அந்த மூலிகைகளைக் கொண்டு கஷாயம் இறக்கினாள். அந்தக் கஷாயத்தைப் பசும்பாலில்கலந்து நோயாளிக்குக் கொடுக்குமாறு சொல்லி விட்டுக் கிருஷ்ணையங்கார் எங்கேயோ வெளியே சென்றார்.

அஞ்சனா முதலில் பாலைக் காய்ச்சி அரவிந்தனின் அறையில் கொண்டுவந்து வைத்துவிட்டுக் கஷாயத்தை எடுத்து வருவதற்காக உள்ளே சென்றாள். அப்பொழுது அரவிந்தன் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கி யிருந்தான்.

அதே சமயம் ஓசைப்படாமல் அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு நோயாளியின் அறையில் நுழைந்தான் கோபாலன். தன்

எண்ணம் நிறைவேறும் தருணம் அது தான் என்று கண்டு, தன் பையிலிருந்து சிறு புட்டியொன்றை வெளியில் எடுத்தான். அதன்மேல் 'விஷம்' என்று எழுதியிருந்தது. அதைத் திறந்து அதிலிருந்த திரவத்தைக் கோப்பையிலிருந்த பாலில் கலந்து விட்டான். பிறகு சிறிதும் சத்தம் செய்யாமல் வெளியே போய் விட்டான்.

கஷாயத்தை எடுத்துக் கொண்டு நோயாளியின் அறையில் அஞ்சனா நுழைந்தபோது, அரவிந்தன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்தான். தன் பக்கத்திலிருந்த கோப்பையைக் கையில் எடுத்தவாறே அவன் அஞ்சனாவைப் பார்த்து, "அஞ்சனா! மிகவும் பசிக்கிறது. இந்தப் பாலைச் சாப்பிடட்டுமா?" என்று கேட்டான்.

"இருங்கள். இந்தக் கஷாயத்தையும் அதில் கலந்து விடுகிறேன். பிறகு நீங்கள் குடிக்கலாம்" என்று சொல்லிக்கொண்டே, பால் கோப்பையை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள். ஏதோ சந்தேகம் தோன்றவே, கோப்பையை முகர்ந்து பார்த்தாள். அவளுடைய முகம் விகாரமடைந்தது. பாலில் விஷம் கலக்கப்பட்டிருந்ததை உணர்ந்தாள்.

அஞ்சனா அந்தப் பாலைக் கீழே கொட்டிவிட்டு, புதுப்பாலில் கஷாயத்தை விட்டு அரவிந்தனுக்கு அளித்தாள். கோபாலனின் நடவடிக்கையை அறிந்த அவளுக்குப் பாலில் விஷம் கலந்தது யாராயிருக்கலாம் என்பதை ஊகிக்க வெகுநேரம் பிடிக்கவில்லை.

அரவிந்தன் கஷாயத்தின் உதவியால் பூரண குணமடைந்து விட்டான். கோபாலன் அவனை விஷமிட்டுக் கொல்ல நினைத்ததை அஞ்சனா யாரிடமும் சொல்லவில்லை. எனவே வாழ்க்கை முன் போலவே மேடுபள்ளமில்லாமல் போய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த அரவிந்தனின் செவிகளில், தன்னைப்பற்றித் தன் குருவும் அஞ்சனாவும் பேசிக் கொண்டிருப்பது விழுந்தது.

"அஞ்சனா! உனக்கு இந்த வருஷம் கலியாணம் செய்துவிடப் போகிறேன்."

"..............."

"அரவிந்தன் இருக்கிறானே, அவனுக்கு உன்னிடம் ரொம்ப ஆசை. அவன் நல்ல மேதை. பிற்காலத்தில் கட்டாயம் முன்னுக்கு வருவான். உனக்கும் அவனிடம் பிரேமை உண்டு என்பதை நான் அறிவேன். ஆகவே......"

"அப்பா! அரவிந்தரின் கலைத்திறன் அபாரமானது. தெய்வீகமானது. அதன் சக்தியில் கட்டுண்டவள் நான். தெய்வத்திடம் நாம் பக்திகொள்ள முடியுமே தவிர, அதைக் கலியாணம் செய்து கொள்ள முடியுமா? அதுபோலத்தான் என் நிலையும்."

"அப்படியானால், அவனிடம் நீ காட்டிய அன்பெல்லாம்......?"


"அவரிடம் நான் காட்டிய அன்பை நீங்கள் தவறுதலாக எண்ணிவிட்டீர்கள். அவ்வளவுதான். பக்தி, மரியாதை—இவையெல்லாம் காதலாகுமா?"

"நீ அவனை நேசிக்கவில்லை என்று சொல்கிறாய்! அப்படியானால் யாரைத்தான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாய்?"

"தெய்வீகச் சாயையில்லாத, முற்றிலும் மனிதத்தன்மை வாய்ந்த கோபாலனையே என் மனம் நாடுகிறது. அவரிடம் நான் கொண்டிருப்பது காதல். பக்தியல்ல! அவர் நடத்தை மனிதத் தன்மையுடையது. நானும் சாதாரண மனிதத் தன்மையுடைய பெண்தான். ஆகவே நாங்கள் இருவரும் மணம் செய்து கொண்டு......"

அப்பொழுது மூங்கில் கழியொன்றை யாரோ முறிப்பது போன்ற ஓசை உண்டாகவே, தந்தையும் மகளும் திடுக்கிட்டு வாசற்புறம் வந்து பார்த்தார்கள்.

அங்கே அரவிந்தனைக் காணவில்லை. ஆனால் அவனுடைய தெய்வீகப் புல்லாங்குழல் இரு துண்டாக உடைக்கப்பட்டுத் தரையில் கேட்பாரற்றுக் கிடந்தது!



வேலைக்காரன்:—எல்லாக் குமாஸ்தாக்களும் பார்க்கும்படி மானேஜர் இந்த 'சர்க்குலரை' ஒட்டச் சொன்னாருங்க! எங்கே ஒட்டறதுங்க?

தலைமைக் குமாஸ்தா:—முட்டாள்! கடிகாரத்தின் மேல் ஒட்டேண்டா!



மதராஸ் ஆபீஸ் :

5-149, பிராட்வே

ஜி. டி., மதராஸ்

அதி அற்புத ரகங்கள்!


புகழ் பெற்ற ஸ்விஸ் பாக்டரிகளில் தயாரானது
ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாத முள்ளவை

NO-81  Size 7¼"

5 ஜுவல்	க்ரோம்	30/-	ரோல்டுகோல்டு	33/-
7 ,,	க்ரோம்	35/-	உயர் ரகம்	38/-
15 ,,	க்ரோம்	44/-	ரோல்டுகோல்டு	48/-

NO-82  Size 7¼"

5 ஜுவல்	க்ரோம்	28/-	ரோல்டுகோல்டு	33/-
7 ,,	க்ரோம்	33/-	உயர் ரகம்	35/-
15 ,,	க்ரோம்	42/-	ரோல்டுகோல்டு	45/-

NO-83  Size 12"

முழுவதும் ஜுவல்	19/-	உயர் ரகம்	21/-
ரேடியத்துடன்	21/-	செக். செகண்டு	23/-
ஸ்பெஷல் உயர்ந்த		ரக மெஷின்	27/-

NO-84  Size 8½"

5 ஜுவல்	க்ரோம்	26/-	ரோல்டு கோல்டு	32/-
7 ,,	க்ரோம்	32/-	ரோல்டு கோல்டு	36/-
15 ,,	க்ரோம்	48/-	ரோல்டு கோல்டு	58/-

NO-85  Size 6½"


5 ஜுவல் க்ரோம்	22/-	உயர் ரகம்	26/-
5 ,, ரோல்டு கோல்டு	30/-	உயர் ரகம்	33/-
15 ,, க்ரோம்	45/-	ரோல்டு கோல்டு	55/-
டைம் பீஸ்	20/-	உயர் ரகம்	25/-
பாக்கெட் வாட்ச்	12/-	உயர் ரகம்	15/-

தபாற் செலவு பிரத்தியேகம். இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு தபாற் செலவு இலவசம்


PIONEER WATCH Co

POST BOX NO 11428 CALCUTTA




நீங்கள் உங்கள் பற்களை
இன்று மக்ளீன் செய்தீர்களா ?
"உங்கள் பெராக்ஸைட் பற்
பசையை ஒரு மாதத்திற்கு
முன் நான் உபயோகிக்கத்
தொடங்கினேன். அது ரொ
ம்ப நன்றாயிருப்பதை அறி
ந்தேன். என் பற்கள் விகா
ரமாகக் கறை படிந்திரு
ந்தன; ஆனால் உங்கள்
பற் பசையை உபயோகி
ப்பது முதல் அவை வெ
ள்ளை வெளேரென்றாகி
விட்டன."
மூச்சின் நாற்றத்தை போக்குகிறது
ஈறுகளைப் பாதுகாக்கிறது.
பற்களுக்கு வெண்மை தருகிறது
உங்களுக்கு சிறந்ததோர் பற் பசை வேண்டுமானால், மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற் பசையை உபயோகியுங்கள். மக்ளீன்ஸ் ஒன்றில்தான் பற்களை வெண்மையாக்கக் கூடிய பெராக்ஸைடு இருக்கிறது. இதன் பிரத்யேக மான தயாரிப்பு முறையினால் பல் கெடுவதைத் தடுக்க உதவுகிறது, வாயில் ஊறும் நீரை மிதப்படுத்தி, கறைகளைப் போக்கி, பற்களைப் பள பளப்பாகவும் வெளுப்பாகவும் ஆக்கி, சுவாசத்திற்கு பெப்பர்மெண்டின் நறு மணத்தைத் தருகிறது.
இன்றே மக்ளீன்ஸ் வாங்குங்கள் !
MACLEANS
PEROXIDE
TOOTH PASTE

நீங்கள் க்ஷவரம் செய்து கொள்ளும்போது என்னஏற்படுகிறது ?



கேரளா நுரையால் மிருதுவாக்கப் பட்டு சௌகர்யமாக்கப் பட்டதும் மயிர் எளிதில் வெட்டப்படுகிறது

மயிர்க்கற்றையின் விளிம்பிலிருந்து இயற்கையாகவே தெறித்துப் போகிறது. ஆகையால் உங்களுக்குத் தாடி வெட்டுவதற்கு நேராக நிற்பதற்குத் தடித்த நுரை அவசியம். கேரளா ஷேவிங் சோப் நீண்டகாலம் இருக்கக் கூடியதும், மயிரை நீத்தடுக்கக் கூடிய நுரையை உண்டுபண்ணுவதும், ரஸாயனப் பொருள்களின் சேர்க்கையால் அது ஒவ்வொரு மயிரையும் எளிதில் வெட்டுவதற்கு மயிரை மிருதுவாகச் செய்கிறது. அது கத்தியை மெருகுபடுத்தி முகத்தையும் மிருதுவாக்குகிறது

உங்கள் முகத்தினிடம் தயவைக் காட்டுங்கள்

கேரளா

ஷேவிங் ஸ்டிக்கை உபயோகியுங்கள்

பிளாஸ்டிக் டியூப்களில் அணா 11½.

ஸ்டிக் மட்டும் அணா 9.



கேரளா ஸோப் இன்ஸ்டிட்யூட், கள்ளிக்கோட்டை

டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமெர்ஸ்

கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press
116 - 119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. NO. M. 4392

